# பெரியண்ணன்

எழுதப்படாத வரலாறு



கார்த்திக் சிதம்பரம்

# பெரியண்ணன்

எழுதப்படாத வரலாறு

கார்த்திக் சிதம்பரம்

**தெய்வானைப் பதிப்பகம்**

PERIYANNAN - EAZHUTHAPADATHA VARALARU

Copyright © Karthik Chidambaram 2025
All Rights Reserved.
ISBN: 978-93-344-0559-0

This book has been published with all efforts taken to make the material error-free after the consent of the author. However, the author and the publisher do not assume and hereby disclaim any liability to any party for any loss, damage, or disruption caused by errors or omissions, whether such errors or omissions result from negligence, accident, or any other cause.

While every effort has been made to avoid any mistake or omission, this publication is being sold on the condition and understanding that neither the author nor the publishers or printers would be liable in any manner to any person by reason of any mistake or omission in this publication or for any action taken or omitted to be taken or advice rendered or accepted on the basis of this work. For any defect in printing or binding the publishers will be liable only to replace the defective copy by another copy of this work then available.

**விலை: ரூ.150**

**நூல் கிடைக்குமிடம்**

தெய்வானைப் பதிப்பகம்
L76A, L பிளாக், 21ஆவது தெரு
அண்ணா நகர், சென்னை - 600 102
9884942539
contact@karthikchidambaram.com




**மு.க. ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.


29.8.2025

## வாழ்த்துரை

பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு திராவிட இயக்கச் சிந்தனைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்களில் திரு.அரு.பெரியண்ணன் குறிப்பிடத்தக்கவர். பாரதிதாசனின் சொற்பொழிவால் ஈர்க்கப்பட்டு, அவரது நண்பராகி, அவரது பல படைப்புகளை அச்சிட்டு வெளியிட்ட தமிழ்ப்பற்றாளர் அவர்.

முரசொலியின் பொறுப்பை திறம்பட நிர்வகித்து, முத்தமிழறிஞர் கலைஞரின் உள்ளங்கவர்ந்த உற்ற தோழராக விளங்கிய திரு. பெரியண்ணன் அவர்கள், மிசா காலகட்டத்திலும் தன்னையும், முரசொலியையும் விட்டு விலகாமல் இருந்ததைப்பற்றி முத்தமிழறிஞர் கலைஞர், “அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல் எத்தனையோ பேர் பறந்து விட்ட போது, கொட்டியும் ஆம்பலும் போல் என்னிடம் உறவு கொண்டிருந்தவர்களில் ஒருவர்” என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்தகைய மாபெரும் ஆளுமையின் பெயரனும், ‘டிசிகாப்’ நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியுமான திரு.கார்த்திக் சிதம்பரம், தனது தாத்தா திரு. அரு.பெரியண்ணனைப் பற்றி அவரது வாரிசுகளான தனது உறவுகளுடன் கலந்துரையாடி, பல்வேறு அரிய தகவல்களைச் சேகரித்து, ஒரு புத்தகமாக வெளியிடுவதை அறிந்து உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன்.

திரு. அரு.பெரியண்ணன் 1946–இல் செந்தமிழ்ப் பதிப்பகத்தினைத் தொடங்கியது, பின்னர் அப்பதிப்பகம் மூலம் 1947 முதல் **‘பொன்னி’** இதழை வெளியிட்டது போன்ற பல்வேறு தகவல்களை, அக்காலத்துக்கே நம்மை அழைத்துச் சென்று விவரித்துள்ளார் திரு.கார்த்திக் சிதம்பரம். திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்ட போது, பகுத்தறிவு இயக்கத்திற்கு பல எழுத்தாளர்களையும், பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களையும் அறிமுகப்படுத்தியது பொன்னி இதழ் என்பதை திராவிடத் தமிழ்ப்பற்றாளர்கள் அறிவர்.

வருங்கால சந்ததியினருக்கு ஒரு அரிய பொக்கிஷமாக திரு.அரு.பெரியண்ணனைப் பற்றிய தகவல்களைத் தொகுத்து இந்நூலினை வெளியிடும் திரு. கார்த்திக் சிதம்பரத்தின் ஆர்வத்துக்கும் முயற்சிக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகள்.

திரு.அரு.பெரியண்ணனின் நூற்றாண்டு விழா ஆண்டில், அவரது வாழ்க்கையின் முக்கிய சம்பவங்கள், அவர் தனது குடும்பத்தை வளர்த்தெடுத்த விதம், முரசொலியின் பொறுப்பாளராக இருந்தபோது அவர் ஆற்றிய பணிகள், ஆகியவை குறித்து ஒரு முழுமையான எழுத்துச் சித்திரமாக வெளிவரும் இந்நூல், படிப்போரின் உள்ளங்களைக் கவர்ந்து பயனளிக்க எனது வாழ்த்துகள்.

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)

# உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | ஏன்? | 07 |
| 2. | எப்படி? | 11 |
| 3. | நன்றி | 15 |
| 4. | ஆரம்பம் | 18 |
| 5. | பர்மா பயணங்கள் | 25 |
| 6. | பெரியண்ணன் – மீனாட்சி திருமணம் | 27 |
| 7. | பொன்னி | 30 |
| 8. | பொன்னியின் படைப்புலகம் | 40 |
| 9. | 1950களில் | 46 |
| 10. | ஏற்ற இறக்கம் (1961-1971) | 50 |
| 11. | முரசொலி வருடங்கள் | 57 |
| 12. | தலையெடுத்த அழகப்பன் | 65 |
| 13. | ஓய்வுக் காலம் | 73 |
| 14. | இறுதிப் பயணம் | 79 |
| 15. | என் பார்வை | 85 |
| I. | கல்வி அடித்தளம் | 88 |
| II. | பேசாமலும் சாதிக்கலாம் | 90 |
| III. | ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தல் | 93 |
| IV. | கொடுக்கல் வாங்கல் | 95 |
| V. | சகுனம் எல்லாம் ஒன்றும் இல்லை | 97 |
| VI. | சமத்தான மருமகள்கள் சாமர்த்தியமான மாப்பிள்ளைகள் | 98 |
| VII. | ஆத்தா வீடு | 100 |
| VIII. | ஐயாவின் சொத்துக்கள் | 101 |
| IX. | பெரிமீனாள் சமூகம் | 102 |
| X. | சில தகவல்கள் | 103 |
| XI. | குடும்ப மரம் | 106 |
| 16. | பின்னிணைப்புகள் | 107 |

# 1. ஏன்?

நம் வாழ்க்கையை மாற்றுபவர்கள் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் நமக்கு உதவும் சாதாரண மனிதர்கள்தான். மனித வாழ்க்கை ஒரு கூட்டு முயற்சி; சமூக வளர்ச்சியும் அப்படித்தான். தமிழ்நாட்டில் நம் பெயருக்குப் பின்னால் இருக்கும் சாதி அடையாளங்களை அகற்ற, திராவிடச் சிந்தனைகள் வேரூன்ற, 1940-50களில் வெளிவந்த இதழ்கள் மற்றும் பத்திரிகைகள் பெரும் பங்காற்றின. இந்தப் பத்திரிகைகளை நடத்தியோர் பலர் திராவிடச் சிந்தனைகளைப் பரப்ப, தமிழ் வளர்ச்சி போன்றவற்றிற்காக தங்கள் நேரத்தையும், பணத்தையும் செலவு செய்து செயலாற்றினர். சமூக வரலாறுகளை ஆராயும்போது, அவற்றில் எழுதப்படாத பக்கங்களே அதிகம். குறிப்பிட்ட காலகட்டங்களில் சமூக வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய மனிதர்களையும் அவர்கள் ஆற்றிய பணிகளையும் ஆராய்ந்தால், அதனால் நாம் அடைந்த பயன்கள் ஏராளம். தமிழகத்தில் எழுந்த திராவிட இயக்கச் சிந்தனைகளை மக்களிடம் விதைக்க உதவிய பொன்னி இதழின் நிறுவனர் அரு.பெரியண்ணனின் வரலாறும் இத்தகையதே.

பெரியண்ணன் அவர்கள் 12.08.1925 அன்று காரைக்குடிக்கு அருகில் இருக்கும் ஆத்தங்குடியில் பிறந்தார். அதற்கு அடுத்த ஊரான ஆ. முத்துப்பட்டிணத்தில் 10.6.1926 அன்று பிறந்தார் மீனாட்சி. பெரியண்ணன் மற்றும் மீனாட்சி இருவருக்கும் இந்த 2025ஆம் வருடம் நூற்றாண்டு. சத்தமில்லாமல் பல சாதனைகளைச் செய்து மறைந்தவர் பெரியண்ணன். 1940-50 காலகட்டங்களில், திராவிடச் சிந்தனைகளைத் தமிழகத்தில் பரப்ப வெளியான பத்திரிகைகள் திராவிட இயக்கங்களை வளர்த்தெடுத்தன என்று கூடச் சொல்லலாம். பேரறிஞர் அண்ணா நடத்திய 'திராவிட நாடு' இதழ், 'பொன்னி' இதழ் இதில் முதன்மையானவை. பெரியண்ணன் தன்னுடைய 20 வது வயதில் அவரது அக்காள் மகன் முருகு சுப்பிரமணியத்துடன் இணைந்து 'பொன்னி' இதழைத் தொடங்கினார். பின் முருகு சுப்பிரமணியம் மலேசியா சென்று விட்டாலும் பொன்னி இதழைத்

தொடர்ந்து நடத்தினார். பாரதிதாசன் பரம்பரை கவிஞர்களை உருவாக்கியதில் பொன்னியின் பங்கு மகத்தானது. மாநில சுயாட்சி, இந்தி மொழி ஆதிக்கம், தனித்தமிழ், திராவிடக் கொள்கைகள் பற்றிப் பொன்னியில் அன்று வெளிவந்த கட்டுரைகளை ஆராயும்போது, அவை இக்காலக்கட்ட அரசியல் சூழலோடும் பொருந்தி வருகின்றன.

பதிப்புத்துறையில் தமிழகத்தில் முதன்மையானவர்களுள் ஒருவர் அரு. பெரியண்ணன் என்று கவிஞர் கண்ணதாசன் தன் வனவாசத்தில் எழுதியிருக்கிறார். பின்நாட்களில், முரசொலி பத்திரிகையை நிர்வகித்து வந்தபோது, "எமர்ஜென்சி காலகட்டத்தில் சோதனைகள் பல வந்தபோதும் அற்றகுளத்து அறுநீர்ப் பறவையாக இன்றி, கொட்டியும் ஆம்பலுமாக ஒட்டி உறவாடிய வைர நெஞ்சினர் பெரியண்ணன். அதை என்னுடைய வாழ்நாள் வரை மறக்க முடியாது" என்று கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் இவரது பணியைப் பற்றிக் கூறியிருக்கிறார். 1940-50 காலகட்டங்களில் புதுக்கோட்டையில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா உட்பட பலருக்கு, சுற்றுப் பயணங்களின் போது தங்கள் வீட்டில் கறி விருந்து பரிமாறி இருக்கின்றனர் பெரியண்ணன் மீனாட்சி தம்பதியினர். இத்தகையோரின் தொடர்புகளும் அரசியல் பின்புலமும் இருந்த ஒருவர் தனக்கும் தன் குடும்பத்திற்கும் எவ்வளவு வேண்டுமானாலும் சேர்த்துக் கொண்டிருக்கலாம், செய்து கொண்டிருக்கலாம். மாறாகச் செல்வத்தையும் பதவிகளையும் நம்பாமல் கல்வியை நம்பினார். தன் பிள்ளைகளை நன்கு படிக்க வைத்தார்.

பெரியண்ணன் அவர்கள் மறைந்து 30 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டாலும் அவர் வளர்த்தெடுத்த குடும்பம் இன்றும் மிக உயிர்ப்புடன் திகழ்கிறது. "நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்பார்கள். அது போன்று ஒரு குடும்பத்தை நல்பல்கலைக்கழகமாக உருவாக்கியவர்.

**மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்**
**மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்**
**தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்**
**சென்றவிட மெல்லாம் சிறப்பு.**

என்ற மூதுரை [26] வாக்கிற்கேற்பப் பணச்செல்வம் சேர்ப்பதை நம்பாமல், தன் பிள்ளைகளுக்குக் கல்விச் செல்வத்தைச் சேர்த்தவர். பெண் கல்வி பற்றிய விழிப்புணர்வு எழுச்சிபெறத் துவங்கிய 1940, 50 களிலேயே, தன்னுடைய அனைத்துப் பிள்ளைகளையும், குறிப்பாகத்

தனது ஆறு மகள்களையும் பட்டதாரிகளாக உருவாக்கி, சாதித்துக் காட்டியவர். சகுனம் எல்லாம் ஒன்றுமில்லை என்று வாழ்ந்தவர். பெரியண்ணன் – மீனாட்சி தம்பதியருக்கு ஆறு மகள்கள், இரண்டு மகன்கள் என்று மொத்தம் எட்டுப் பிள்ளைகள் (தமிழரசி, பொன்னி, பூங்கோதை, சுலோச்சனா, வள்ளிக்கண்ணு, விசாலாட்சி, அழகப்பன், ரவி). அவரவர் தம் சுய உழைப்பில் முன்னேறினர். பேரப்பிள்ளைகள் என்று கணக்கிட்டால் மொத்தம் 15 பேர். இதில் பெரியண்ணனின் மூன்றாவது மகளான பூங்கோதை – 'ஆணழகன்' சிதம்பரத்தின் மூத்த மகன் நான்.

அமைதியாக அதிகம் பேசாமல் சாதனைகள் பல செய்த சாதாரண மனிதர் பெரியண்ணன். அவை அத்தனைக்கும் உறு துணையாக இருந்தவர் அவர் மனைவி மீனாட்சி. பெரியண்ணனின் செயல்களில் வெளிப்பட்ட அவரின் முற்போக்குச் சிந்தனைகள், பொன்னி இதழைத் துவங்கி அவர் ஆற்றிய பொதுப்பணிகள், குடும்பத்தை வளர்த்தெடுத்த பாங்கு போன்றவை என்னிடம் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தின. இவையே அவரைப் பற்றி ஒரு புத்தகம் எழுத என்னைத் தூண்டின. இது போன்ற ஒரு புத்தகத்தை எழுத வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் உடனே அதற்கான வேலைகளை ஆரம்பித்து விட வேண்டும். ஆனால் நான் அப்படிச் செய்யவில்லை. காத்திருந்தேன்... அந்நேரத்தில் ஐயாவின் நெருங்கிய நண்பர் 'கயல்' தினகரன், பெரியண்ணன் அவர்களைப் பற்றி ஒரு புத்தகம் எழுத முயற்சிகள் மேற்கொண்டு வந்தார். நாம் செய்ய வேண்டும் என்று நினைத்ததை தினகரன் அவர்கள் செய்கிறார் என்பது ஒருபுறம் வருத்தத்தைத் தந்தாலும், அது மறுபுறம் பெரும் மகிழ்வையும் ஏற்படுத்தியது. என்னைவிட தினகரன் அவர்களுக்குப் பெரியண்ணன் ஆற்றிய பொதுப்பணிகள், அவருக்கிருந்த தொடர் புகள், சமூக மாற்றத்திற்கு ஆற்றிய பணிகள் என்று நிறைய தெரிந்திருக்கும் என்பதால், பெரியண்ணனைப் பற்றிப் புத்தகம் எழுத அவரே மிகப் பொருத்தமானவர் என்று எனக்குத் தோன்றியது. ஆனால் அவருக்கு உடல்நலம் சற்று பாதிப்படைந்ததால் அவரால் அப்பணியைத் தொடர இயலாமல், அண்மையில் மறைந்தார். பின்னர் பெரியண்ணன் – மீனாட்சி அவர்களின் நூற்றாண்டினை நல்வாய்ப்பாகக் கருதி, இந்தப் புத்தகம் எழுதும் முயற்சிகளை மேற்கொள்ளத் துவங்கினேன்.

'பெரியண்ணன்' புத்தகம் ஒரு கூட்டு முயற்சி. இதை ஒரு நூற்றாண்டு புத்தகமாகவோ, நூற்றாண்டு விழா மலராகவோ

வெளியிடுவதில் எனக்கு விருப்பம் இல்லை. ஏற்றம் இறக்கம் அனைவர் வாழ்விலும் இருக்கும். செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தில் பிறந்து, இறக்கங்கள் பல கண்டு, பெரும் பொருளாதாரச் சிரமங்களுக்கிடையே நேர்மையாக வாழ்ந்து, ஆறு பெண்கள் உட்பட எட்டுப் பிள்ளைகளை வளர்த்தெடுத்து, மீண்டும் ஏற்றம் கண்டு நல்வாழ்வு வாழ்ந்த அரு.பெரியண்ணன் – மீனாட்சி வாழ்க்கையிலிருந்து நாம் நிறையக் கற்றுக்கொள்ளலாம். நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையையும் மேம்படுத்திக்கொள்ள இந்தப் புத்தகம் நிச்சயம் உதவும்.

*நன்றி*



*கார்த்திக் சிதம்பரம்*

***25.09.2025***

# உ. எப்படி?

புத்தகம் எழுத வேண்டும் என்று முடிவு செய்தவுடன், முதலில் அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரில் வசிக்கும் பெரியண்ணனின் தலைமகன் அழகப்பன் அவர்களிடம் அனுமதி கேட்டேன். அழகப்பன் அவர்கள் “நானே ஐயாவின் நூற்றாண்டுக்குத் தகவல்கள் திரட்டி ஆங்கிலத்தில் ஒரு புத்தகமாகக் கொண்டு வரலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் இந்தப் புத்தகம் தமிழில் வந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். என்னிடம் உள்ள குறிப்புகள், மற்றும் நான் சேகரித்து வைத்துள்ள அனைத்தையும் உன்னிடம் தருகிறேன்” என்று பெரும் ஊக்கம் தந்தார். அமெரிக்காவில் பல ஆண்டுகள் வசித்து பின்னர் 2000த்தின் துவக்கத்தில் சென்னை திரும்பிய பெரியண்ணனின் இளைய மகன் ரவி அவர்களும் இப்பணியை நன்றாகச் செய்ய வேண்டும் என்று வாழ்த்தினார்.

இருவரிடமும் அனுமதி வாங்கிய பின்னர் வேலையைத் தொடங்க வேண்டியதுதான் என்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆனால் பெரியண்ணன் இறந்து 30 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் அவரைப் பற்றி ஒரு புத்தகம் எழுதும் அளவிற்குச் செய்திகளைத் திரட்ட முடியுமா என்ற கேள்வியும், இதை நாம் எப்படிச் செய்யப் போகிறோம் என்ற பயமும் வந்தது. தொடக்கத்தில் ஒவ்வொரு நாளும் ஒன்றிரண்டு பக்கங்கள் எழுதி வந்தேன்.

புத்தகம் எழுத ஐயாவின் பிள்ளைகள் எட்டுப் பேருடனும் உரையாடி, குறிப்புகள் எடுத்துக் கொண்டேன். முதலில் ரவி மற்றும் அவரது மனைவி விஜி அவர்களைச் சென்னை பாலவாக்கத்தில் அமைந்திருக்கும் அவர்களது இல்லத்தில் சந்தித்து உரையாடினேன். பெரியண்ணன் பற்றிய குறிப்புகளையும் தகவல்களையும் திரட்டினேன். இப்படியாக பெரியண்ணனின் பிள்ளைகள் ஒவ்வொருவரின் இல்லங்களுக்கும் சென்று உரையாடினேன்.

இவ்வாறு சென்றுகொண்டிருந்த தகவல் திரட்டும் பணி, ஜனவரி 2025ல் அமெரிக்க பயணத்தின்போது ஹூஸ்டனில் உள்ள அழகப்பன் மற்றும் அவரது மனைவி கீதா வீட்டிலும் தொடர்ந்தது. அனைத்தையும் ஒழுங்குபடச் செய்வதில் அழகப்பன் வல்லவர். சரி

என்றால் சரி; இல்லை என்றால் இல்லை என்பார். கிட்டத்தட்ட அவர் தந்தையை ஒத்தப் பண்புகள் உடையவர்.

பெரியண்ணன் குடும்பத்தை வளர்த்தெடுத்த விதம், அவரின் பண்புகள் பற்றி எனக்கு நிறைய தெரிந்திருந்தாலும் அவரின் பொதுப் பணிகள், திராவிடச் சிந்தனைகள், செயல்கள், ஆரம்பகால வாழ்க்கை எப்படி இருந்தது போன்றவை பற்றி என்னிடம் அதிக தகவல்கள் இல்லை. பெரியண்ணன் அவர்களும் இதைப் பற்றி எங்கும் எழுதி வைக்கவில்லை.

பெரியண்ணன் மறைந்த சில நாட்களில் அவர் வாழ்ந்த, சென்னை சேத்துப்பட்டு வீட்டில் உள்ள அவர் அறையில் என்ன இருக்கிறது என்று அவரின் மகன்கள் அழகப்பன் மற்றும் ரவி இருவரும் பிரித்துப் பார்க்க ஆரம்பித்தனர். அங்குப் பொன்னி இதழை நடத்தும்போது இருந்தத் தொழில்முறை கோப்புகள், பெரியண்ணன் எழுதிய கடிதங்கள், அவருக்கு வந்த கடிதங்கள், பர்மாவில் இருந்த நிலப்பத்திரங்கள் போன்றவை கிடைத்தன. இதுபோல் ஆத்தங்குடி வீட்டிலும் கோப்புகள், பத்திரங்கள் மற்றும் சில ஓலைச்சுவடிகள் இருந்தன. இவை அனைத்தும் கொஞ்சம் கொஞ்சமாக அழகப்பனுடன் அமெரிக்கா பயணித்தன.

அதை, அவர்கள் வீட்டில் நாங்கள் பிரித்துப் படித்து பார்க்கும் போது எனக்கு உத்வேகமும், நம்பிக்கையும் அதிகரித்தது. நாம் இன்று கடல் கடந்து பல்வேறு நாடுகளுக்குச் சென்று எப்படித் தொழில் செய்கிறோமோ, அதுபோல் நூறு ஆண்டுகளுக்கு முன்னரும் தொழில் செய்துள்ளனர் என்பதை நாம் ஏற்கனவே அறிந்திருந்தாலும், அந்த ஆவணங்களைப் படித்துப் பார்த்தபோது அக்கால தொழில்முறைகள், வாழ்வியல், தொடர்புமுறைகள் எப்படி இருந்தன என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. இதிலிருந்து புத்தகத்திற்கான பல தகவல்களைத் திரட்டினோம்.

மிக முக்கியமாக 1947 முதல் 1955 வரை வெளிவந்த ‘பொன்னி’ இதழின் பதிப்புகளில் 85% பதிப்புகளைப் பல்வேறு இடங்களில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாகச் சேகரித்து அழகப்பன் பத்திரப்படுத்தி வைத்திருந்தார். அதில் சில இதழ்களைப் படித்துப் பார்க்கும் போது அவற்றில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர் மு. கருணாநிதி, பாரதிதாசன், கண்ணதாசன், நாவலர் நெடுஞ்செழியன், கா. அப்பாதுரையார், சுரதா, டி.கே. சீனிவாசன் என்று பல ஆளுமைகள் எழுதியிருந்தனர். அக்காலகட்டத்தின் அரசியல் மற்றும் சமூகச்சூழல் எப்படி இருந்தது என்பதை

அறிந்துகொள்ள ஒரு வரலாற்று ஆவணமாகப் 'பொன்னி' இதழ்கள் தெரிந்தன. இவற்றிலிருந்த ஆசிரியர் உரைகளைப் படிக்கப் படிக்க சுவாரசியமாக இருந்தது. இப்படி என்வசம் கிடைத்த பெரியண்ணன் நடத்திய பொன்னி இதழின் வெளியீடுகள் பாதுகாக்கப்பட வேண்டி யவை என்று விளங்கியது. அவரின் நூற்றாண்டினை ஒட்டி இவற்றை எண்ம (digital) வடிவில் வெளிக்கொணர்ந்தால் இன்னும் 100 வருடங்கள் கழிந்தாலும் ஒரு வரலாற்றுச் சுவடாக இருக்கும் என்று தோன்றியது.

2025 மே மாத அமெரிக்கப் பயணத்தின்போது மறுபடியும் ஹூஸ்டன் சென்று அழகப்பன் சேகரித்து வைத்திருந்த அனைத்து இதழ்களையும் அங்கிருந்து சென்னைக்குக் கொண்டு வந்தோம். அனைத்தையும் ஒழுங்குப்படுத்தி வைத்திருந்த அவர், இவ்வேலையை எங்களுக்கு எளிதாக்கினார் என்றே சொல்ல வேண்டும்.

இந்தப் பயணங்கள் முடிந்த பின்னர், அமெரிக்காவில் உள்ள சிகாகோ பல்கலைக்கழகத்தால் பாதுகாக்கப்பெற்று, மிகச்சிறப்பாகச் சென்னையில் தனித்து இயங்கிவரும் ரோஜா முத்தையா நூலகத்தைத் தொடர்புகொண்டேன். அங்குப் பணியாற்றும் சு. முத்து மாலதி அவர்களிடம் பொன்னி இதழ் குறித்த விவரங்களைக் கேட்டேன். 1940களில் வெளிவந்த பொன்னியின் ஓர் இதழை அவர்கள் டிஜிட்டல் வடிவில் பாதுகாத்து வைத்திருந்தனர். தமிழ் இணையக் கல்விக்கழகத்திலும் பொன்னியின் சில இதழ்கள் இருப்பதாகக் கூறினார். பொன்னி இதழ் திராவிட இயக்கத்தில் ஏற்படுத்திய தாக்கம் புரிந்தது. ரோஜா முத்தையா நூலக இயக்குனர் சுந்தர் கணேசன் அவர்களைச் சந்தித்து பொன்னியின் அனைத்து இதழ்களையும் பாதுகாக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் துவங்கி னோம். அவர் அறிமுகப்படுத்திய ரோஜா முத்தையா நூலகத்தின் துணை இயக்குனர் மணிகண்ட சுப்பு மற்றும் குழு, பொன்னி இதழ் களைப் பாதுகாக்க பெரும் பங்காற்றினர்.

இவ்வாறாகப் பொன்னி இதழ்கள் ரோஜா முத்தையா நூலகத் தின் உதவியுடன் எண்ம இதழ்களாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த முயற்சிகள் நடந்துக் கொண்டிருந்தபோது சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் சா. கருணாகரன் அவர்களைத் தொடர்புகொண்டு பேசினோம். அவர் 'பொன்னி இதழ்கள் அனைத்தையும் தொகுத்துத் தொகுப்புகளாக வெளியிட வேண்டும்' என்று அறிவுறுத்தி, தந்தை பெரியார் நடத்திய 'குடியரசு' இதழ்கள் தொகுப்பை எடுத்துக்காட்டாகக் கூறினார். இதுபோல் பொன்னி இதழ்களைத் தொகுப்பாகக் கொண்டு வந்தால்

அது திராவிட அரசியல் குறித்து ஆய்வு செய்யும் மாணவர்களுக்குப் பெரும் பயனாக இருக்கும் என்றும் கூறினார். பெரியண்ணன் மீனாட்சியின் நூற்றாண்டை ஒரு வாய்ப்பாகக் கருதி எங்களிடம் உள்ள பொன்னி இதழ்கள் அனைத்தையும் சென்னைக் கிறித்தவக் கல்லூரி மாணவர்களின் பெரும் பங்களிப்புடன் எண்ம வடிவில் தொகுப்புகளாகவும் வெளியிடுகிறோம்.

'பெரியண்ணன்' புத்தகத்தில், பெரியண்ணன் - மீனாட்சி வாழ்க்கையின் ஆரம்பத்தில் தொடங்கி அவர்கள் திருமணம், பொன்னி இதழ் பயணம், பிள்ளைகள் வளர்ப்பு, அவர்கள் வாழ்க்கையின் ஏற்ற இறக்கங்கள், முரசொலி வருடங்கள், உலக நாடுகளின் பயணங்கள் மற்றும் மரணம் வரை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. புத்தகத்தின் இறுதியில் பெரியண்ணன் மீனாட்சியின் ஒரு பேரனாகவும் ஒரு சாமான்யனாகவும் 'என் பார்வை' பகுதியில் எழுதி உள்ளேன்.

ஒரு புத்தகம் எழுதி வெளியிடுவது என்பது சாதாரண காரியம் அல்ல என்பதை நானறிவேன். ஏற்கனவே 'ஞாயிறு கடிதம்' என்ற புத்தகம் எழுதியிருக்கிறேன். அது வாராவாரம் கைப்பட எழுதிய கடிதங்களின் தொகுப்பாக வெளிவந்ததால் அப்புத்தக வேலைகள் எளிதாக இருந்தன. ஆனால் இம்முறை நான் எதிர்பார்த்ததைவிடப் பணிகள் பன்மடங்கு அதிகம். இப்புத்தக முயற்சி பல கற்றல்களையும், புதிய அனுபவங்களையும் தந்தது.

வரலாற்றுச் சான்றுகளுடன் புத்தகத்தைக் கொண்டுவருவ தற்குப் பலரைச் சந்தித்துப் பேசவேண்டியிருந்தது. அவர்களின் நேரத்திற்கேற்ப என் நேரத்தையும் அமைத்துக் கொண்டேன். என் அன்றாட வேலைகளுக்கு இடையே இவற்றைச் செய்ய வேண்டியி ருந்ததால் தொடர்ந்து நேரம் ஒதுக்க கொஞ்சம் கடினமாக இருந்தது. இத்தனை முயற்சிகளின் பயனாக, இப்புத்தகம் உருவாகியிருக்கிறது. நான் அறிந்தவரை பெரியண்ணன் அவர்களின் வாழ்க்கையை மிகைப் படுத்தியோ, குறைத்து மதிப்பிட்டோ எழுதவில்லை. உள்ளதை உள்ளபடி எழுதி இருக்கிறேன். நிச்சயம் இதில் தவறுகள் இருக்கும். அப்படி இருந்தால் அதற்கு மன்னியுங்கள்.

# 3. நன்றி

நாம் வேலை செய்யும் குழுக்களில் நம்மை விட திறமையானவர்கள் இருக்கும்போது நாம் செய்யும் வேலை பன்மடங்கு மேம்படும். அப்படி ஒரு குழுதான் இந்தப் புத்தகத்திற்கும் அமைந்தது.

'பெரியண்ணன்' புத்தகம் வெளிவருவதற்கு ஒரு சிறப்பான குழுவை உருவாக்கி தடங்கல்கள் பல வந்தபோதும் அதை சரி செய்து, சிறந்த தலைமைப் பண்புகளுடன் செயலாற்றியவர் ஸ்ரீஜா சந்தானம். எந்த வேலையும் சிறிய வேலை இல்லை என்று, தன் வேலைபோல் அனைத்திற்கும் பொறுப்பேற்றுக் கொள்வார். அவர்தான் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் இருக்கும் உதவிப்பேராசிரியர் சா. கருணாகரன் அவர்களைத் தொடர்பு கொண்டு அவர் மூலம், இளங்கலைத் தமிழ் இலக்கியம் பயிலும் திறமையான மாணவர்களைக் குழுவில் இணைத்தார். புத்தக வேலைகள் சரியான திசையில் செல்கிறதா, அடுத்த கட்டத்திற்குப் பயணிக்கிறதா, என்று அனைத்தையும் ஒருங்கிணைத்தது அவர்தான். திறமையானவர்களைக் கண்டுபிடிப்பதில் ஸ்ரீஜா வல்லவர். அப்படி அவர் அறிமுகப்படுத்திய சௌமியா ஸ்ரீ மிகத் திறமையானவர்.

சௌமியா ஸ்ரீ இளங்கலைத் தமிழ் இலக்கியம் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவி. இவருடன் முதல் நாள் வேலை செய்யும்போது, இவர் எப்படி வேலை செய்யப் போகிறார், நம் நேரம் பயனுள்ளதாக இருக்கப் போகிறதா? என்ற ஒரு ஐயம் இருந்தது. முதல் சந்திப்பில் கிட்டத்தட்ட 6 மணி நேரம் ஒன்றாக அமர்ந்து புத்தக வேலைகளைச் செய்தோம். முதல் நாள் வேலை முடிந்தவுடன் ஒரு பெரும் நம்பிக்கையும், மகிழ்ச்சியும் வந்தது. இதுபோல் பலமுறை நேரிலும், இணையம் (Zoom) வழியாகவும், புத்தக வேலைகள் மேற்கொண்டோம். புத்தகத்திற்கான ஆய்வுகள் மேற்கொண்டு, என் எழுத்துகளில் திருத்தங்களைச் செய்து இப்புத்தகத்தை மேம்படுத்தினார். இவரே ஒரு நூலாசிரியர். 'இனியும் மின்வெட்டு வரக்கூடும்' என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார். இளங்கலைப்

படிப்பில் தமிழ் வேண்டும் என்று தேர்ந்தெடுத்துப் படித்து, 'கேளிர்' என்னும் மாத இதழின் பதிப்பாசிரியராகவும் செயல்பட்டு வருகிறார். நன்றி சௌமியா.

பெரியண்ணன் - மீனாட்சி அவர்களின் பெண் பிள்ளைகள் மற்றும் அவர்களின் கணவர்கள், தமிழரசி - சுப்பையா, பொன்னி - முத்துக்குமரன், சுலோச்சனா - முத்து, வள்ளிக்கண்ணு - சீதாராமன், விசாலாட்சி - சொக்கலிங்கம், மகன்கள் மற்றும் அவர்களின் மனைவியர் அழகப்பன் - கீதா, ரவி - விஜி என்று அனைவருக்கும் நன்றிகள்!

பேரப்பிள்ளைகள் அனைவரும் அண்ணன் தம்பி, அக்காள் தங்கை என்று ஒருவரைப் பார்த்து ஒருவர் என்றுதான் வளர்ந்தோம். இவர்கள் அனைவரிடம் இருந்தும் நான் நிறையக் கற்றுக் கொண்டிருக்கிறேன். அவர்களுக்கும் நன்றிகள்.

அழ. கருப்பையா - உண்ணாமலை, ரா. அருணாசலம் - அரு. சௌந்தரம், அருண் முத்துக்குமரன், அதித்தி கணேசன், ஆடிட்டர் வேணுகோபால், முரசொலி மாணிக்கம், புலவர் ஆ. செகதீசன், செழியன் தினகரன், தமிழ்ச்செல்வன் தினகரன், கவிஞர் ஆறு. அழகப்பன், அரு. முருகப்பன், முரு. வெங்கடாசலம், பா.சண்முகப்பிரியா, மு. கணேஷ் ஆகியோருக்கும் நன்றிகள்.

1990களில் ஆய்வுகள் செய்து 'பொன்னி' இதழ்கள் குறித்துத் தொடர்ந்து எழுதிவரும் பேராசிரியர் முனைவர் மு.இளங்கோவன் அவர்களுக்கு நன்றி.

சென்னைக் கிறித்தவக் கல்லூரி முதல்வர் முனைவர் பால் வில்சன் அவர்களுக்கு நன்றி.

முருகு சுப்பிரமணியம் - வள்ளியம்மை குடும்பத்தினர் செல்வம், பாண்டியன், கலைமணி, பொன்னி, சுப்பையா ஆகியோருக்கும் நன்றிகள்.

கருத்துகள் பரிமாறி, ஆலோசனைகள் வழங்கி புத்தகப் பணியை மெருகேற்றிய என் தம்பி அருண் சிதம்பரத்திற்கு நன்றி. எங்களுக்குத் தமிழ் ஊட்டியும், கதைகள் சொல்லியும், எதுவும் முடியும், முயற்சி செய்யுங்கள்! போராடுங்கள்! என்று வளர்த்த என் பெற்றோர் 'ஆணழகன்' சிதம்பரம் - பூங்கோதை அவர்களுக்கு நன்றிகள்!

இதுபோன்ற முயற்சிகள் செய்யும்போது தடைகள் ஏதும் சொல்லாமல், சுதந்திரமாகச் செயல்படவிட்டு ஊக்கம்தரும், என்

*மனைவி சித்ரா கார்த்திக் அவர்களுக்கு நன்றி. பெரியண்ணன் - மீனாட்சி பற்றிப் புத்தகம் எழுதுவதை அவ்வப்போது என் பிள்ளைகள் அன்விகா கார்த்திக் சிதம்பரம், பெரி கார்த்திக் சிதம்பரம், இருவரிடமும் சொல்லி வருவேன். அவர்களுக்கும் நன்றிகள்!*

*தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகப் பல்வேறு உலக நாடுகளுக்குப் பயணங்கள் மேற்கொள்கிறார் நம் முதல்வர். பெரும் முதலீடுகளை ஈர்க்க, ஐரோப்பிய நாடுகளுக்குக் கிளம்பும் நேரத்திலும், தன் பல்வேறு பணிகளுக்கு இடையில், அரு. பெரியண்ணனின் நூற்றாண்டினைக் கொண்டாடும் வேளையில், 'பெரியண்ணன்' புத்தகத்திற்குச் சிறப்பான வாழ்த்துரை நல்கி, ஊக்கப்படுத்தி, உத்வேகமும் தந்தார்.* **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. மு.க ஸ்டாலின்** *அவர்களுக்கு மிக்க நன்றி.*

*இவை அனைத்தும் டிசிகாப் சமூகம் இல்லை என்றால் சாத்தியப்படாது. டிசிகாப் சமூகத்திற்கும் நன்றிகள்!*

# 4. ஆரம்பம்

1800களில் தமிழ்நாடு உட்பட இந்தியாவின் பெரும்பான்மையான பகுதிகள் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியின் கீழ் இருந்தன. தமிழ்நாட்டில் அக்காலகட்டத்தில் பயிர் விளைவு குறைந்து வறுமை மேலோங்கி இருந்தது. சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்ந்து வந்த நகரத்தார் சமூகத்தினர், நெல் முதலான தானியங்கள், பஞ்சு, உப்பு உள்ளிட்ட வணிகங்களையே பெருமளவில் செய்து வந்தனர். இவ்வணிகங்களை வளர்க்க 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பதற்கு ஏற்ப இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேசியா போன்ற உலக நாடுகளுக்குப் பாய்மரக் கப்பல்களில் பயணம் மேற்கொண்டனர்.

1824ல் ஆங்கிலேயர்கள் பர்மாவைக் கைப்பற்றி ஆட்சி செய்யத் தொடங்கினர். ஆங்கிலேயருடன் பருத்தி வணிகத்தில் ஈடுபட்டு வந்த நகரத்தார் பெருமக்கள் இக்காலச்சூழலைப் பயன்படுத்தித் தங்களின் வணிகத்தை விரிவுபடுத்த 1852ல் அன்றைய பர்மா தலைநகரான மோல் மேனுக்கும் [Moulmein], 1854ல் ரங்கூன் நகருக்கும் பயணப்பட்டனர். இப்படிப் பல்வேறு நாடுகளில் குடியேறி தங்கள் வணிகத்தையும் தொழில்களையும் வளர்த்தெடுத்து பொருள் ஈட்டினர். வாழும் நாட்டிற்கும், நம் நாட்டிற்கும் கொடைகள் பல வழங்கியும் அன்னதானக் கூடங்கள் அமைத்தும் நன்குடிமக்களாக வாழ்ந்து வந்தனர்.

**அரு. பெரியண்ணனின் பிறப்பு**

இக்காலகட்டத்தில் ஆத்தங்குடியைச் சேர்ந்த பழ. பெரியண்ணன் – சிவகாமி தம்பதியருக்கு கருப்பாயி என்ற மகளும் பழனியப்பன், அருணாசலம் என்ற இரண்டு மகன்களும் இருந்தனர். இவர்களில் அருணாசலம் 11 சூலை 1882 அன்று பிறந்தார். வளர்ந்த பின் பதின்பருவத்தில் இவரும் தொழில் செய்ய பர்மாவிற்குப் பயணப்பட்டார். 1900களில் பர்மாவில் நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த பலரைப் போலவே அருணாசலமும் தொழில் செய்து, பெருலாபம் ஈட்டிய செல்வந்தர்களுள் ஒருவராக விளங்கினார். கௌரவ

நீதிபதியாகவும் (Probate Judge) பர்மா அரசால் நியமிக்கப்பட்டார். 1906 -ல் அருணாசலம், அழகம்மை என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு 1907ல் சிவகாமி என்ற மகள் பிறந்தார்.




பெரியண்ணனின் தந்தையார் திரு. அருணாசலம்
தாயார் திருமதி. மீனாட்சி

அருணாசலம் பர்மாவில் தொழில் செய்து பல சொத்துக்களை வாங்கியிருந்தாலும் சொந்த ஊரிலும் தன் செல்வத்தைப் பெருக்கி, நிலங்களை வாங்கி வைத்திருந்தார். அக்காலத்தில் கொடுத்த கடனைத் திருப்பித் தரமுடியாமல் போனால், கடன் பெற்றவர் தனது வீட்டையோ, வீட்டில் ஒரு பங்கையோ எழுதிக்கொடுத்து விடுவார்கள். அருணாசலம் இந்த முறையில் ஆத்தங்குடியில் ஒரு வீட்டையும் குன்னக்குடி சண்முகநாதபுரத்தில் பெரும் நிலப்பரப்புடன் கூடிய ஒரு வீட்டையும் வாங்கினார். ஏதாவது ஒரு பிரச்சனையைத் தீர்த்து வைத்தால் பயன் அடைந்தோரிடமிருந்து ஒரு மோதிரம் வாங்கிக்கொள்ளும் வழக்கமும் இவருக்கு இருந்துள்ளது.

இதுமட்டுமின்றி கார், மாட்டு வண்டி போன்ற வாகனங்களையும் வைத்திருந்தார்.

செல்வச் செழிப்போடு வாழ்ந்த நகரத்தார் சமூகத்தினர் பலரும் 'செட்டிநாடு' என்று அறியப்படும் 96 ஊர்களில் பெரிய பெரிய மாளிகை போன்ற வீடுகளைக் கட்டினர். விசாலமான திண்ணைகள், பர்மாவில் இருந்து கொண்டுவரப்பட்ட தேக்கு மரங்களாலான மரத் தூண்கள், பெரிய கதவுகள் என்று தனித்துவமான செட்டிநாட்டு கலைப்பாணியில் இவ்வீடுகள் அமைக்கப்பட்டிருக்கும். இவ்வகை வீடுகளிலேயே தங்கள் பிள்ளைகளின் திருமணத்தையும் நடத்துவர்.

உறவினர் ஒருவரின் திருமண நிகழ்வில் மாப்பிள்ளை அழைப்பின்போது அருணாசலம் தவிர அனைத்துப் பங்காளிகளும் வந்துவிட்டனர். அருணாசலம் வரும்வரை காத்திருந்து அவர் வந்த பின்னரே மாப்பிள்ளை அழைப்பைத் தொடங்கினர். இப்படியாகப் பெரும் செல்வாக்குடனும் மதிப்புடனும் வாழ்ந்து வந்தார் அருணாசலம்.

நகரத்தார் ஊர்களில் உள்ள வீதிகளுக்கு அந்த வீதியில் செல்வாக்காக உள்ளவரின் பெயரையே வைப்பர். இவ்வாறாக பெரி. அருணாசலம் வாழ்ந்த வீடு உள்ள வீதிக்குப் பெரி. அரு வீதி என்று பெயர். பெரி. அருணாசலம் வாழ்ந்த வீடு அவரின் தகப்பனார் கட்டியது. ஒரு வாதா மரம் இருந்த காரணத்தால் "வாதா மரத்தார் வீடு" என்று ஊரார் குறிப்பிடுவார்கள்.

1920ல் அருணாசலத்தின் மனைவி அழகம்மை இறந்துவிட, 1924ஆம் ஆண்டு மீனாட்சி என்பவரை அருணாசலம் மறுமணம் செய்கிறார். அந்தக் காலகட்டத்தில் மனைவியின் மறைவிற்குப் பிறகு ஆண்கள் மறுமணம் செய்வது என்பது வழக்கமான ஒன்றாக இருந்தது. அருணாசலம் - மீனாட்சி இருவருக்கும் 12.08.1925 அன்று பிறந்த ஒரே மகன் அரு. பெரியண்ணன்.

**பெரியண்ணன் மனைவி - 'மீனாட்சி'யின் பிறப்பு**

ஆத்தங்குடி முத்துப்பட்டிணத்தில் அழகப்பன் – அலமேலு தம்பதியருக்கு 1908ஆம் ஆண்டு வாக்கில் இராம. அழ. அருணாசலம் என்ற மகன் பிறந்தார். இவருக்கு இராமசாமி என்ற சகோதரரும் மீனாள், பெரியாள் என்ற சகோதரிகளும் இருந்தனர். இவர்களில் பெரியாள் என்பவர் ஆத்தங்குடி மாளிகை (ஆத்தங்குடி பேலஸ்) என்று அனைவராலும் அறியப்படும் வீட்டில் மணமுடிக்கப்படுகிறார்.



மீனாட்சியின் தந்தையார் திரு. இராம அருணாசலம் தாயார் திருமதி. மீனாட்சி

அழகப்பன் அலமேலு வாழ்ந்து வந்த வீட்டைக் கட்டிய சொக்கலிங்கப்புதூரைச் சேர்ந்த முத்து ஆசாரி என்பவர்தான் இன்று 100 வருடப் பழமையுடன் இருக்கும் ஆத்தங்குடி மாளிகையையும் கட்டியதாக அறியப்படுகிறது. பல செட்டிநாட்டு வீடுகளை முத்து ஆசாரி கட்டியுள்ளார். பரபரப்பாக வேலை செய்யும் அவர் எப்போதும் தன் காதில் எழுதுகோலுடனே காணப்படுவார். அந்தக் காலகட்டத்தில் இவர் மிகவும் புகழ்ப் பெற்றவராக இருந்திருக்கிறார்.

அழகப்பனின் அப்பா இராமனாதன் செட்டியார் நச்சாந்துப் பட்டியில் இருந்து 'பிள்ளை வந்தவர்'. நகரத்தார் சமூகத்தில் ஆண்பிள்ளை இல்லாதோர் தங்கள் சொத்துக்களைப் பாதுகாத்து வளர்க்க அதே சமூகத்தைச் சேர்ந்த ஓர் ஆண் பிள்ளையைச் சில வரையறைகளுக்கு உட்பட்டுத் தத்தெடுப்பர்.

இவ்வாறு பிள்ளை வந்தவர் இராமனாதன் செட்டியார்.இவர் வாழ்ந்தவீட்டை நச்சாந்துப்பட்டியார் வீடு என்று அழைப்பார்கள். இவர்களின் வீடு இராம. அழ வீடு (RM.AL) என்றும் அறியப்படுகிறது.

இத்தனைச் செழிப்பான குடும்பத்தில் 10.06.1926அன்று இராம. அழ. அருணாசலம் - மீனாட்சி தம்பதிக்கு மூத்தமகளாகப் பிறக்கிறார் மீனாட்சி. அவரோடு கூடப் பிறந்தோர் இராமனாதன் என்கிற சேது, அலமேலு, முருகப்பன்,வள்ளி மற்றும் வெங்கடாசலம் ஆவர்.



பெரியண்ணன்



மீனாட்சி

**இளமைக் காலம்**

பெரியண்ணனும் மீனாட்சியும் ஆத்தங்குடியில் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்த காலம் அது. அவர்கள் இருவரும் தங்களது இளமைக் காலத்தில் நல்ல வசதியுடனும் செல்வச் செழிப்புடனும் வாழ்ந்து வந்தனர். பெரியண்ணன் 1930, 40 களில் படித்துக் கொண்டிருந்த நேரத்தில் அவர் தந்தை பெரி. அருணாசலம் பர்மாவிற்கும் இந்தியாவிற்கும் மாறிமாறி பயணம் மேற்கொண்டிருந்தார்.

சிறுவயதிலேயே பெரியண்ணன் தமிழ் ஆர்வமிக்கவராகத் திகழ்ந்தார். கோனாபட்டில் உள்ள சரஸ்வதி உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் போது இளைஞர் ஒற்றுமைக் கழக உறுப்பினராகச் சேர்ந்து இலக்கிய மேடைகளில் பங்கேற்றார். தமிழ் நண்பர்கள் வட்டத்தைப் பெருக்கிக் கொண்டு, தமிழ் படைப்புகளைப் பதிப்பாகக் கொண்டுவரும் நோக்கில் பதிப்புத் துறையில் நாட்டம் கொண்டார். மீனாட்சி நன்கு படிக்கும் மாணவியாக இருந்தும் அப்போது இருந்த வழக்கப்படி பூப்பெய்தும் வயதில் தன் படிப்பை நிறுத்த வேண்டியதாயிற்று.

அந்தக் காலகட்டத்தில் இந்தியாவில் காந்தியடிகள் இந்திய விடுதலைப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்திவந்தார். 1929 - ஆம் ஆண்டு டிசம்பர் 19ஆம் தேதி இந்திய தேசிய காங்கிரஸ்

"பூர்ண ஸ்வராஜ்" (முழுமையான தன்னாட்சி) பிரகடனத்தை லாகூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அறிவித்தது. இதனைத் தொடர்ந்து மார்ச் 12, 1930ல் தனது சபர்மதி ஆசிரமத்திலிருந்து உப்பு சத்தியாகிரக நடைபயணத்தைத் துவங்கி குடியியல் சட்டமறுப்பு இயக்கத்தைத் (Civil Disobedience Movement) தோற்றுவித்தார்.

காந்தியின் உப்பு சத்தியாக்கிரக போராட்டத்தைத் தொடர்ந்து தமிழகத்தில் திருச்சிராப்பள்ளியிலிருந்து வேதாரண்யம் வரை இராஜாஜி தலைமையில் மக்கள் புறப்பட்டுச் சென்று உப்புக் காய்ச்சிப் போராட்டம் மேற்கொண்டனர். இதில் பங்கேற்ற பெரும்பாலானவர்களை ஆங்கிலேய அரசு சிறையில் அடைத்ததால், விடுதலைப் போரின் தீவிரம் வலுக்கத் துவங்கியது. தமிழ்நாட்டில் (அன்றைய சென்னை மாகாணம்) நீதிக்கட்சியின் ஆட்சி நிலவிவந்தது.

தந்தை பெரியார் என்றழைக்கப்படும் ஈ.வெ.ராமசாமி சமூக சீர்திருத்தக் கருத்துகளை மாநிலம் முழுவதும் பரப்பிக் கொண்டிருந்தார். மக்கள் தங்கள் பெயர்களுக்குப் பின்னால் சுமந்து கொண்டிருந்த சாதிப்பெயர் உள்ளிட்ட சாதி அடையாளங்களை அறவே ஒழிக்கவும் சுயமரியாதை மிக்க சமூகச் சூழலை உருவாக்கவும் பெரியார் போராடிக் கொண்டிருந்தார். பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தினால் சமூகத்தில் பல்வேறு மாற்றங்கள் கொஞ்சம் கொஞ்சமாக நிகழத் தொடங்கின. எளிய மக்களுக்குப் புரியும் வகையில் மேடைப்பேச்சின் போக்கை மாற்றியதில் இருந்து, மக்களிடம் புழங்கிவந்த பொருளற்ற சடங்கு சம்பிரதாயங்கள், மூடநம்பிக்கைகள் மற்றும் பிம்பங்கள் உடைபடத் தொடங்கின. பெரியாரின் தாக்கம் தமிழ்நாடு முழுவதும் பரவிக்கொண்டிருந்தது. பல இளைஞர்களைத் தன் இலக்கியல் நோக்காலும், செயல்களாலும் ஈர்த்தார் பெரியார். பெரியண்ணனும் இதற்கு விதிவிலக்கல்ல. பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகள் பெரியண்ணனிடம் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தின. அவரின் சீர்திருத்த கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு அவற்றைப் பரப்பிடும் வேலைகள் செய்தார்.

பெரியண்ணன் உட்பட இதுபோன்ற இளைஞர்கள் ஆத்தங்குடியில் சூனா பானா (சுயமரியாதைக்காரர்கள்) என்றும் அறியப்பட்டார்கள். இப்படியாகக் காலம் சென்று கொண்டிருந்த நிலையில்தான் இரண்டாம் உலகப் போரும் வெடித்தது.

## பெரியண்ணனின் கல்வி

| கல்வி நிலையம் | ஆங்கிலேயர் காலம் | இன்றைய சமமான வகுப்பு | ஆண்டு |
|---|---|---|---|
| ஏ. சி. உயர்நிலைப் பள்ளி, பள்ளத்தூர் | நான்கு, ஐந்தாம் வகுப்பு | நான்கு, ஐந்தாம் வகுப்பு | ஜூன் 1935 – ஏப்ரல் 1937 |
| முத்தியால்பேட்டை மேல்நிலைப் பள்ளி, சென்னை | ஃபாரம் ஒன்று | ஆறாம் வகுப்பு | ஜூன் 1937 – ஏப்ரல் 1938 |
| முத்தியால்பேட்டை மேல்நிலைப் பள்ளி, சென்னை | ஃபாரம் இரண்டு | ஏழாம் வகுப்பு | ஜூன் 1938 – ஏப்ரல் 1939 |
| முத்தியால்பேட்டை மேல்நிலைப் பள்ளி, சென்னை | ஃபாரம் மூன்று | எட்டாம் வகுப்பு | ஜூன் 1939 – ஏப்ரல் 1940 |
| செயின்ட்ஜோஸப்ஸ் கல்லூரி, திருச்சி | ஃபாரம் நான்கு | ஒன்பதாம் வகுப்பு | ஜூன் 1940 – ஏப்ரல் 1941 |
| ஸ்ரீ சரஸ்வதி உயர்நிலைப்பள்ளி, கோனாபட்டு | ஃபாரம் ஐந்து | பத்தாம் வகுப்பு | ஜூன் 1941 – ஏப்ரல் 1942 |
| ஸ்ரீ சரஸ்வதி உயர்நிலைப்பள்ளி, கோனாபட்டு | ஃபாரம் ஆறு | பதினோராம் வகுப்பு | ஜூன் 1942 – ஏப்ரல் 1943 |

சூன் 5, 1943ஆம் ஆண்டு பாரம் ஆறு பள்ளிப்படிப்பை முடித்துச் சான்றிதழ் பெற்றார் பெரியண்ணன்.


...swathy Secondary School, Konapet.
(State-Aided)
PUDUKKOTTAI STATE.
TRANSFER CERTIFICATE.
ORIGINAL.
...pil. Periannan A.R.
...h. 12.8.1925 (Twelfth August 19 twenty five)
3. ~~Class or~~ Form in which the pupil was reading (in words.) Sixth Form.
4. Date of ~~Admission or~~ Promotion to that ~~class or~~ Form. 5-6-1943.
5. Whether qualified for Promotion. Declared 'eligeble' for admission into the University Course of Study
6. Whether ... has paid ... the fe...
7. Whether ... Medica...

சரஸ்வதி உயர்நிலைப் பள்ளி, மாற்றுச் சான்றிதழ்

# 5. பர்மா பயணங்கள்

*ஏற்ற இறக்கம் வாழ்வில் இருப்பது ஒரு சுகம். தொழிலைப் பொறுத்தமட்டில் பழக்கப்பட்ட ஒன்றையே தொடர்ந்து செய்யாமல் புதிது புதிதாக ஏதாவது செய்துகொண்டே இருக்கவேண்டும். சமூகத்தில் நிகழும் தொழில்நுட்ப, அரசியல் மாற்றங்களுக்கு ஏற்ப நாமும், நமது தொழிலும் மாற வேண்டும். அவ்வாறு மாறவில்லை என்றால் தொழிலே இல்லாமல் போகும். இண்டெல் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக (CEO) இருந்த ஆண்டி குரோவ் இந்த மாற்றங்களை 'வியூக ரீதியான திருப்புமுனை' (Strategic In flection Point) என்று கூறுகிறார். இணையம் (Internet), கொரோன காலகட்ட முன்னெடுப்புகள், இன்றைய செயற்கை நுண்ணறிவு (AI) போன்றவை வியூக ரீதியான திருப்புமுனைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள்.*

*1930களில் உலகப் பொருளாதார நெருக்கடி நிலை பர்மாவை வந்தடைந்தது. 1931, 1932 ஆண்டுகளில் நிகழ்ந்த விவசாயிகளின் கிளர்ச்சியும், பிரித்தாளும் நோக்கில் ஆங்கிலேய அரசு மேற்கொண்ட முயற்சிகளும் பர்மாவில் மேலும் பல கிளர்ச்சிகளுக்குக் காரணமாய் அமைந்தன.*

*செப்டம்பர் 1, 1939ல் துவங்கி செப்டம்பர் 2, 1945 வரை 6 ஆண்டுகள் நிகழ்ந்த இரண்டாம் உலகப் போர்ச் சூழலில், பர்மாவில் நடந்த பல்வேறு அரசியல் மாற்றங்களால் அங்குத் தொழில் செய்து, பெரும் செல்வங்கள் ஈட்டி வந்த நகரத்தார் சமூகத்தினர் நாட்டை விட்டு வெளியேறும் சூழல் ஏற்பட்டது. ஆங்கிலேய அரசு பர்மாவிலிருந்து சீனாவிற்கு அமைத்திருந்த சாலையைக் கைப்பற்ற, ஜப்பான் பர்மாவின் மீது தாக்குதலைத் தொடங்கியது. டிசம்பர் 23, 1941ல் பர்மாவின் அன்றைய தலைநகரான ரங்கூன் மீது ஜப்பான் முதல் வெடிகுண்டுத் தாக்குதலை நடத்தியது. இந்நிகழ்வு பர்மாவிலிருந்து நகரத்தார் மக்களின் வெளியேற்றத்திற்குத் துவக்கப் புள்ளியாக இருந்ததென அறியமுடிகிறது.*

*சில சாமர்த்தியமான நிறுவனங்கள் இதுபோன்ற சமூக மாற்றங்கள் நிகழும் முன்பே அவற்றைக் கணித்துத் தங்களது*

தொழிலைக் காலச்சூழ்நிலைகளுக்கு ஏற்ப தகவமைத்துக் கொண் டன. உதாரணமாக, இன்று புகழ்பெற்று விளங்கும் ‘முருகப்பா குழுமம்’ நிலைமை மோசமடையும் முன்னரே தங்களின் பெரும் பாலான சொத்துக்களை விற்று பர்மாவை விட்டு வெளியேறி இந்தியா வந்தடைந்து இங்குத் தொழில்கள் செய்யத் துவங்கினர். நூறு வருடங்கள் கடந்து இன்று தொழிலில் பெருவளர்ச்சி அடைந்த நிலையில் இயங்கி வருகின்றனர். ஆனால் பல நகரத்தார் பெருமக்கள் இதுபோல் சாமர்த்தியமாகச் செயல்படவில்லை என்றே சொல்லலாம்.

பெரியண்ணன் சுமார் 10 வயது இருக்கும்போது தன் பெற்றோருடன் பர்மா சென்று அங்கிருக்கும் நடைமுறைகளைக் கற்றுத் திரும்பினார்.

பெரியண்ணன்னின் தந்தை அருணாசலத்தின் பர்மாவிலிருந்த சொத்துக்களை அந்நாட்டு அரசு முடக்கியது. இந்நிலையில் அவர் பர்மாவை விட்டு வெளியேறி இந்தியா திரும்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பெரும்பாலும் ஆண்கள் மட்டுமே பர்மா சென்று வந்து கொண்டிருந்த காலகட்டத்தில் அருணாசலத்தின் மனைவி மீனாட்சி அவர்கள் மிகவும் தைரியமானவராக இருந்ததால், அவரும் தன் கணவருடன் பர்மா சென்று வசித்து வந்ததோடு மட்டுமல்லாமல், தம் கணவரின் தொழிலில் அவருக்குப் பக்க பலமாக இருந்தார். இவர்கள் இந்தியா திரும்பிய பின்னும் அருணாசலத்தின் பர்மா பயணங்கள் தொடர்ந்தன.

ஃ



பர்மாவில் பெரியண்ணன்

# 6. பெரியண்ணன் - மீனாட்சி திருமணம்

*இந்தியா விடுதலையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. ஆத்தங்குடியைச் சேர்ந்த பெரி. அருணாசலம் – மீனாட்சியின் ஒரே மகன் பெரியண்ணனுக்கும் ஆத்தங்குடி முத்துப்பட்டிணத்தைச் சேர்ந்த இராம. அருணாசலம் – மீனாட்சி அவர்களின் மூத்த மகள் மீனாட்சிக்கும் திருமணம் செய்வதெனப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டது. அந்தக் காலகட்டங்களில் நகரத்தார் சமூகத்தில் மாப்பிள்ளை, பெண் தேடும் போது ஒரே ஊரிலோ பக்கத்து ஊரிலோ தேடுவார்கள். தொலைவில் உள்ள சம்மந்தங்களைத் தவிர்த்து விடுவர்.*

*தமிழின் மீதும், பெரியாரின் சிந்தனைகள் மீதும் பெரியண்ணன் கொண்டிருந்த பற்றினை அவரின் திருமணத்தின் போது வழங்கப்பட்ட வாழ்த்துரைகள் வழியாக அறியலாம். பெரியாரின் சாதி மறுப்புக் கொள்கையைப் பின்பற்றித் தனது பெயருக்குப் பின்னால் இருந்த செட்டியார் என்ற சாதி அடையாளத்தை அவர் பயன்படுத்தவில்லை. இருப்பினும், அவர் தன் பெற்றோரின் விருப்பப்படி தன் சமூகத்தைச் சேர்ந்த மீனாட்சியையே மணந்தார்.*

*காலநேரம் பார்த்து, ஜாதகம் பார்த்து திருமணம் செய்யும் வழக்கமே அந்நாளில் நிலவி வந்தது. அதிலும் மணமக்கள் இருவரும் ஒரே நட்சத்திரத்தில் பிறந்திருந்தால் திருமணம் செய்து வைக்கவே மாட்டார்கள். பெரியாரின் கொள்கைகளைப் பின்பற்றி இயங்கி வந்த பெரியண்ணன் இத்தகைய பழமைவாத சிந்தனைகளில் நம்பிக்கை இல்லாதவர். ஒரே நட்சத்திரத்தில் பிறந்த பெரியண்ணனுக்கும், மீனாட்சிக்கும் 10.09.1943 அன்று சிறப்பான முறையில் மூன்று நாட்கள் வெகு விமர்சையாகத் திருமணம் நடைபெற்றது. ஆத்தங்குடியைச் சேர்ந்த தமிழ் நண்பர்கள் பலரும் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர். கோனாபட்டு தமிழன்னை நிலையத்தார், கோ. நகர் இளைஞர் ஒற்றுமைக் கழகத்தார் சார்பாக வாழ்த்துரைகள் வாசிக்கப்பெற்றன. பெரியண்ணனும் மீனாட்சியும் திருமணத்திற்குப் பின் ஆத்தங்குடியிலிருந்து புதுக்கோட்டைக்குக் குடிப்பெயர்ந்தார்கள்.*

*புதுக்கோட்டையில் தன் இல்லற வாழ்க்கையை நடத்தி வந்த பெரியண்ணன், தனது தந்தை அருணாசலத்திற்கு உதவியாக முன்னர் சென்று வந்தது போல் பர்மா சென்று வர நினைத்தாலும் அந்நாட்டில் நிலவிய சூழ்நிலை அவரது எண்ணத்தைச் செயல்படுத்த அனுமதிக்கவில்லை. அவரது தந்தையும் இதில் அதிக விருப்பம் காட்டவில்லை. இவர்களுக்குத் திருமணம் முடிந்த இரண்டு வருடங்களில் 1945ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் தேதி அன்று அழகிய மகள் பிறந்தாள். அந்தப் பெண் குழந்தைக்குப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் 'தமிழரசி' என்று பெயர் சூட்டினார்.*



தமிழ் வாழ்க!
ஆத்தங்குடி
திருமிகு.
அரு. பெரியண்ணன்-மீனாள்
திருமண நன்னாளன்று
10—9—43
கோனாபட்டுத் தமிழன்னை நிலையத்தார் படித்தளித்த
மங்கல வாழ்த்து

1. பைந்தமிழ் போற்று முத்துப் பட்டணத்தார் மெய்த்தவமே
மைந்தனாய் வந்து மருவுற்றான்—ஐந்தருவின்
ஆத்தங் குடிவணிகர் ஆற்றும் அறமேயிப்
பூத்தங்கு மைக்குழலாள் பொற்பு.

2. பீடார் அருணைப் பெரியண்ணன் தானெனினும்
தோடார் அருணை தருதோகை—கோடாத
கற்புடையாள் கோடுகின்ற கண்ணுடையாள் [தன்னையின்றிப்
பொற்புடையான் ஆமோ புகல்.

3. தன்னாட்சி எல்லாம் தமிழாட்சி என்றாலும்
மன்னாட்சி மீனாட்சி என்றுகொலோ—மின்னுறழும்
வண்கைப் பெரியண்ணன் வாய்திறவா திந்நாளில்
பெண்கைப் பிடித்த பிடி.

4. நலமார் சுபானு நல்ஆவணி நாடி
வலமார் ஐயைந்தினில் மகிழ்ந்தே—இலமார்ந்த
மின்றவழ் மீனாளை வேட்டான் பெரியண்ணன்
மன்றல் விழா ஆர மகிழ்ந்து.

கோனாபட்டு,
சுபானு ஆவணி
உ௰௫

தமிழன்னை நிலையத்தார்

பாரத் ப்ரெஸ், புதுக்கோட்டை

*"அன்பும் அறிவும் கலந்தாற் போலவும், தமிழும் தமிழர் வாழ்வும் கலந் தாற் போலவும், இளமையும் அழகும் கலந்தாற் போலவும், தாமும் தமது நிழல்போல் தம் பண்பு தோயப் பெற்றுத் தம்பால் வாழுதற்குரிய துணைவியும் இனிது கலந்து வாழ்ந்து, இம்மை மறுமைப் பயன்கள் நிறைய எழிலார்ந்த இனிய புதல்வரையும் புதல்வியரையும் பெற்று மகிழ்வீராக. வாழ்க தமிழ் நலம். வாழ்க தமிழ்." (இளைஞர் ஒற்றுமைக் கழகத்தார் வாழ்த்துரையின் ஒரு பகுதி)*



பெரியண்ணன் – மீனாட்சி திருமணப்படம்



உ

தமிழ் வாழ்க!

ஆத்தங்குடி.

திருமிகு பெரியண்ணன் — மீனாள்

திருமணநன்னாளன்று

கோநகர் இளைஞர் ஒற்றுமைக் கழகத்தார் படித்தளித்த

வாழ்த்துரை

வாழ்க மீனாள் - பெரியண்ணன் வாழ்க.

தமிழறிவிற் கொத்த தமிழன்பும், தமிழன்பிற் கொத்த தமிழார்வமும் வாய்ந்த இளவலே! நும் மணநாளில் எம் கழகம் எல்லையில்லா மகிழ்வெய்துகின்றது. நும் மணநாள் நிறை மணநாளாய் இலங்குக.

உடல் இளமையேபோல் உள்ளத்தின் இளமையும் பெற்றுத் தளராவூக்கத்துடன் தமிழ்வணிக நாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் நும் தொண்டாற்றிய நும் பணித்திறன் கண்டு இளைஞர் யாவரும் இறும்பூதெய்துவர். இவ்வூக்கம் என்றும் நும்மிடம் நின்று நிலவுக.

தமிழ் இளைஞர்க்கும் தமிழ் வணிகர் குழாத்திற்கும் அரும்பெறற் புதையல்போன்ற நும் மணத்திற்கு யாம் நாவார உளமாரவாழ்த்துக் கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

அன்பும் அறிவும் கலந்தாற்போலவும், தமிழும் தமிழர்வாழ்வும் கலந்தாற்போலவும், இளமையும் அழகும் கலந்தாற்போலவும், தாமும் தமது நிழல்போல் தம்பண்பு தோயப் பெற்றுத் தம்பால் வாழும் பெரிய துணைவியும் இனிது கலந்து வாழ்ந்து இம்மை மறுமைப் பயன்கள் நிறைய எய்திவாழ்ந்து இனிய புதல்வரையும் புதல்வியரையும் பெற்று மகிழ்வீராக. வாழ்க தமிழ் நலம். வாழ்க தமிழ்.

வாழ்க மீனாள் - பெரியண்ணன் வாழ்க.

கோனாபட்டு
சுபானு - ஆவணி.
௨௰௫.

இங்ஙனம்,

இளைஞர் ஒற்றுமைக் கழகத்தார்.

# 7. பொன்னி

*1440ல் ஜோஹன்னஸ் குட்டன்பெர்க் கண்டுபிடித்த அச்சு இயந்திரம் அதற்கடுத்த நூற்றாண்டில் ஐரோப்பிய கண்டம் முழுதும் வேகமாகப் பரவியது. போர்த்துகீசிய மாலுமி வாஸ்கோடகாமா இந்தியாவிற்கு 1498ல் வந்ததிலிருந்து, ஐரோப்பியர்களின் இந்திய வருகை தொடங்கியது. வணிக நோக்கில் வந்த போர்த்துகீசியர்கள் பின்னாட்களில் அரசாட்சியைக் கைப்பற்றவும் கிறித்தவச் சமயத்தைப் பரப்பவும் முனைந்தனர். சமயத்தை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் மொழி பெருந்தடையாக இருந்தது. தங்களது போதனைகளை மக்களிடம் கொண்டுசேர்க்க பாதிரிமார்கள் தமிழ் பயிலத் தொடங்கினர்.*

*1556ல் போர்த்துகலிலிருந்து எத்தியோப்பியாவிற்கு அனுப்பப்பட்ட அச்சு இயந்திரம் தாங்கிய கப்பல் கோவாவை வந்தடைந்தது. அங்கிருந்த போர்த்துகீசிய பாதிரியார்களுக்கு அச்சுப்பணியில் அத்தனை ஈடுபாடு இல்லாத நிலையிலும், அரசியல் காரணங்களாலும், இந்நிகழ்வு கடவுளின் அருளாகக் கருதப்பட்டதாலும் அச்சு இயந்திரம் கோவாவிலேயே தங்கியது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதன்பின்னர், இந்திய மொழிகளில் கிறித்தவ இலக்கியங்களை அச்சிட வேண்டும் என்ற எண்ணம் கோவாவில் உள்ள பாதிரியார்களிடையே வளரத் துவங்கியதை அறியமுடிகிறது.*

*1578ஆம் ஆண்டு கேரளா, கொல்லத்தில் அச்சுக்கான தமிழ் எழுத்துகள் உருவாக்கப்பட்டன. அதைக்கொண்டு தமிழ் பயின்ற முதல் ஐரோப்பியரும் போர்த்துகீசிய மறைப்பணியாளருமான அண்ட்ரிக் பாதிரியார் 'தம்பிரான் வணக்கம்' என்ற முதல் தமிழ் நூலை அச்சிட்டு வெளியிட்டார். 1556 முதல் 1800 வரை தெற்கு ஆசியாவில் அச்சிடப்பட்ட புத்தகங்களில் 40 சதவிகிதம் தமிழில் தான் இருந்தன. ஆங்கில மொழிக்கு அடுத்து, அதிக புத்தகங்கள் தமிழில் அச்சிடப்பட்டன. இதற்கடுத்த நூற்றாண்டுகளில் இந்தியா முழுவதிலும் புத்தகங்களின் அச்சாக்கத்திற்கு மட்டுமன்றி*

பத்திரிகைகள், மாத, வார, நாளிதழ்கள் வெளியிடுவதற்கும் அச்சு இயந்திரங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. தமிழகத்தில் பெரியாரின் திராவிடச் சிந்தனைகளையும் பாரதிதாசனின் கருத்துகளையும் மக்களிடம் விதைக்க பத்திரிகைகள் பெரிதும் உதவின. பெரியண்ணன், அவரது அக்காள் சிவகாமியின் மகன் கோனாப்பட்டைச் சேர்ந்த முருகு சுப்பிரமணியத்துடன் சேர்ந்து 30.8.1946 அன்று 'செந்தமிழ்ப் பதிப்பகம்' என்ற பதிப்பகத்தைப் புதுக்கோட்டை, கீழராஜ வீதியில் தொடங்கினார். இந்தக் கால கட்டத்தில் புதுக்கோட்டை, ராஜராஜ கோபால தொண்டைமான் ஆட்சியின் கீழ் இருந்தது. இந்தியாவில் உள்ள மற்ற மாகாணங்களைக் காட்டிலும் புதுக்கோட்டையில் வரி குறைவாக இருந்தது. (புதுக்கோட்டை சுதந்திரத்திற்குப் பின் 03.03.1948 அன்று இந்தியக் குடியரசுடன் இணைந்தது).

பெரியண்ணனும் முருகு. சுப்பிரமணியமும் கூட்டுப் பங்குதாரர்களாக அச்சுக்கூடம், புத்தக வியாபாரம், புத்தகங்கள் வெளியிடுதல், பத்திரிகை நடத்துதல் ஆகிய தொழில்களைச் செந்தமிழ்ப் பதிப்பகத்தின் பெயரில் நடத்தி வந்தனர்.

அச்சுக்கூடத்திற்குத் தேவையான அச்சு இயந்திரங்களை பம்பாயிலிருந்து வரவழைத்து வாங்கினர். யாவருக்கும் அச்சுகள், அச்சுப் பிரதிகள் அச்சடித்துக் கொடுப்பதை முதன்மையான பணியாக இப்பதிப்பகம் மேற்கொண்டு வந்தது. பாரதிதாசன் எழுதிய கவிதை நூல்களும் செந்தமிழ்ப் பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டன. இப்படியான ஒரு பணிச்சூழலில் அச்சுக்கலையில் தனது திறன்களை நன்கு மேம்படுத்திக்கொண்டார் பெரியண்ணன். 9.6.1948 தேதியிட்டு தந்தைக்கு எழுதிய கடிதத்தில் அவரின் தந்தை பர்மாவிலிருந்து சென்னை வந்தடையும்போது அங்குள்ள அச்சகங்களின் நிலவரங்களையும் அச்சிடும் காகிதம் பற்றியும் விசாரித்து வரும்படி குறிப்பிட்டிருக்கிறார் பெரியண்ணன்.

பின்னாட்களில் கண்ணதாசன், பெரியண்ணனைப் பற்றித் தனது 'வனவாசம்' நூலில் "இன்றும் தமிழகத்தில் சிலரை அச்சுக்கலை நிபுணர்கள் என்று தேர்ந்தெடுத்தால் அவர்களில் பெரியண்ணன் மிக முக்கியமானவராக இருப்பார்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ் மொழியின் முதல் இதழ் 1831ஆம் ஆண்டில் வெளிவந்த 'தமிழ்ப் பத்திரிகா' தமிழ் மேகசின் (மாத இதழ்) என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். தினவர்த்தமானி, ஒரு பைசா

அரு. பெரியண்ணன்

செந்தமிழ்ப் பதிப்பகம்
தபாற்பெட்டி எண் 39
புதுக்கோட்டை

9-6-48.

அன்புமிக்கத் தந்தையார் அவர்கட்கு,

வணக்கம்.

யாவரும் நலம். தங்கள் நலத்திற்குத் தெரிவியுங்கள்.

தங்கள் 25-5-48, 30-5-48 கடிதங்களின் கிடைக்கப் பெற்றேன்.

தங்கள் பழைய கடிதப் படி கூடுகளும் அச்சடித்து உரியவர்களிடத்தில் சேர்ப்பித்து விட்டோம். கூட்டுடன் விலை உட்பட அச்சுக்கூலி ரூ 8-12-0 அதற்குப் பட்டியலும் இரசீதும் இத்துடன் இணைத்து அனுப்பியிருக்கிறது.

சுப்பையா மாமனும் நேற்று முன் தினம் சென்னை வந்து சேர்ந்த செய்தி வந்திருக்கிறது.

இயலுமானால் தாங்கள் வருவதற்குள் அங்கு அச்சாபீஸ் பேப்பர் நிலவரங்கள் விசாரித்து வரும்படி செய்ய வேண்டியது.

பின் பக்கம்

நம் ராமையா ராமன் முதலியவை டைரியாவில் அ.சொ. வீட்டு மாடியில் தான் வைத்துவிட்டு வந்ததாக என் தாயார் ஞாபகம் எடுத்துச் சொன்னார்கள்.

தங்கள் கடிதம் கண்டு நான் சென்னைக்கு வருகிறேன்.

ஊரிலும் நேற்று முன்தினம் ஓரளவு மழை பெய்திருக்கிறது.

மற்றபடி ஆகவேண்டியவை தங்களுக்குத் தகவல் எழுதுங்கள்.

பெரியண்ணன்

தமிழன், சுதேசமித்திரன், விவேகசிந்தாமணி, தமிழ் நேசன், தமிழ்நாடு, திராவிடன், நவசக்தி, விமோசனம், சுதந்திரசங்கு, காந்தி, மணிக்கொடி, விடுதலை, தினமணி என்று தொடர்ச்சியாக இதழ்கள் தமிழ்நாட்டின் அடுத்தடுத்த சமூக வளர்ச்சிகளுக்கு அடித்தளமாக அமைந்தன.

தமிழில் வெளியான தொடக்ககால இலக்கிய இதழ்கள் அறிஞர்கள் தவிர்த்துப் பெரும்பான்மையான மக்களிடம் சென்று சேரவில்லை. தீவிர இலக்கிய ஆராய்ச்சிகள், விவாதங்கள், விமர்சனங்கள் இவையே நிறைய இடம்பெற்றிருந்ததால் சாமானிய மக்கள் இந்த இதழ்களை வாசிக்க முனைப்புக் காட்டவில்லை. நவீன இலக்கிய இதழ்களின் வளர்ச்சியே எளிய மக்களிடமும் இலக்கிய வாசிப்பைக் கொண்டு சேர்த்தது. புதுமைகள் பலவற்றை இந்த இதழ்கள் செயல்படுத்தின. புனைவிலக்கியம், அது சார்ந்த உரையாடல்கள் ஆகியவற்றிற்கு இலக்கியத் தகுதியைத் தமிழ்ச்சூழலில் இந்த இதழ்களே ஏற்படுத்தின. இப்படியான புத்துயிர்ப்பு மணிக்கொடி இதழிலிருந்து தமிழ் இலக்கியச் சூழலில் உண்டானதை அறியமுடிகிறது.

திராவிடச் சிந்தனைகளை வளர்க்க பத்திரிகைகள், இதழ்கள் அதிகம் இல்லாத காலகட்டத்தில் சிறந்த ஒரு முன்னெடுப்பாகப் 'பொன்னி' இதழ் 1947ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் செந்தமிழ்ப் பதிப்பக அலுவலகத்திலேயே பெரியண்ணன் மற்றும் முருகு சுப்பிரமணியத்தால் தொடங்கப்பெற்றது. மாதம் ஒருமுறை வெளிவந்த பொன்னி இதழ் 1948ஆம் ஆண்டு மே முதல், மாதம் இருமுறை வெளிவரத் துவங்கியது. பொன்னி இதழ் தொடங்கப் பெற்ற இரண்டு மாதங்களில் பெரியண்ணன் – மீனாட்சிக்கு, ஏப்ரல் மாதம் 21ஆம் தேதி இரண்டாவது மகள் பிறந்தாள். அந்த மகளுக்குப் 'பொன்னி' என்றே பெயர் சூட்டினர்.

அக்காலகட்டத்தில் பத்திரிகை நடத்துவது என்பது சாதாரண காரியம் அல்ல. பெரும் முதலீடுகள் தேவைப்பட்டன. லாபங்களை எதிர்பார்க்காமல் நடுநிலையோடு, தமிழகத்தில் நிலவி வந்த பிரச்சினைகளுக்கு உரக்கக் குரல் கொடுத்துப் பொன்னி இதழ் நடத்தப்பட்டது. திராவிடச் சிந்தனைகளை வளர்த்தெடுத்தது. 1968 ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் அறிஞர் சி.என். அண்ணாதுரை தலைமையில் சென்னையில் இரண்டாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு (Second International Conference Seminar of Tamil Studies) நடைபெற்றது. அம்மாநாட்டில் 'தீபம்' இதழாசிரியரும் எழுத்தாளருமான நா.

பார்த்தசாரதி 'கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் தமிழ் இலக்கியப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் "நவீன இலக்கியப் பத்திரிகைகளின் வளர்ச்சிக் காலம் என்பது மணிக்கொடி, கலைமகள், திரு.வி.க.வின் நவசக்தி, சந்திரோதயம், பொன்னி, ஆகியவற்றிலிருந்து தொடங்குகிறது. தமிழ் இலக்கியப் பத்திரிகைகளில் புதுமையும், செழிப்பும், பெருகிய காலம் இதுதான்" என்று குறிப்பிட்டிருக்கிறார். "திராவிடர் கழகத்தை ஆதரிக்கும் ஏடுகள் மிகக் குறைவாக இருந்த காலம். அவையும் அழகில்லாமல், அச்சுப்பிழை மிகுந்து வெளிவந்தன. அந்த நேரத்தில் வண்ண முகப்பு அட்டை போட்டு அழகாக நடந்த இதழ் 'பொன்னி' தான். பத்திரிகைத் துறையில் மற்றவர்கள் செய்து காட்டாத புதுமை எல்லாம் அவர்கள் செய்து காட்டினார்கள்" என்று பொன்னி இதழைப் பற்றி கண்ணதாசன் புகழ்ந்துரைத்துள்ளார். தமிழ்ப் பத்திரிகை உலகில் வருடந்தோறும் தீபாவளிப் பண்டிகை சமயத்தில் 'தீபாவளி மலர்' என்ற பெயரில் சிறப்பிதழ் வெளியிடும் வழக்கம் இருந்தது. தீபாவளி தமிழர் விழா அல்ல என்ற நோக்கில் தமிழ்ப் பெருமக்கள் கொண்டாடி மகிழும் பொங்கல் திருநாளைச் சிறப்பிக்க 'பொங்கல் மலர்' வெளியிடுகிறோம் என்று அறிவித்து, அதற்கான முயற்சிகள் மேற்கொண்டு முதன்முதலில் 1948ல் பொன்னியில் பொங்கல் மலர் வெளிவந்தது.

"தாங்கள் அன்புடன் அனுப்பித் தந்த பொங்கல் மலர் கிடைக்கப் பெற்றேன். அதன் அமைப்பு மிகவும் பாராட்டத்தக்க வகையில் ஆக்கப் பட்டிருக்கிறது. இவ்வாண்டு வெளியிடப்பட்ட பொங்கல் மலர்களில் பொன்னி பொங்கல் மலர் மிகமிக மேலான தரமானதாகும். பரிசு வழங்குவதானால் பொன்னி மலர்க்கே முதற் பரிசு உரிமையுடையதாகும். இதுவரை வெளிவந்த மலர்களில் இதுபோன்ற நல்ல அமைப்பு மலர் நம்மவர்களால் வெளியாக்கப்படவில்லை என்பது எனது கருத்து"

இவ்வாறு பெரியார், பொன்னி வெளியிட்ட பொங்கல் மலர் குறித்து வாழ்த்துச் செய்தி தெரிவித்தார். பொங்கல் மலரில் வெளிவந்த பெரியாரின் உருவப் படம் நல்ல கனமான ஆர்ட் அட்டைகளில் அழகிய வண்ணப் படங்களாக வெளியிடப்பட்டன. பல குடும்பங்களில் பொன்னி வெளியிட்ட வண்ணப் படங்கள் கண்ணாடிச் சட்டமிட்டு மாட்டிவைக்கப்பட்டன.

# பெரியார் படம்

அன்பர்கள் பலரின் ஆவலைப் பூர்த்தி செய்தல் எமது கடமை என்பதைக் கொண்டு, "பொன்னி" பொங்கல் மலரில் வெளிவந்துள்ள **பெரியார் முழு உருவப் படத்தினை** இரு வண்ணங்களில், அழகிய ஆர்ட் அட்டையில் வெளியிட ஏற்பாடு செய்துள்ளோம்.

★

விலை ரூ 0—5—0

தபால் செலவுடன் ரூ 0—6—0

★

விற்பனையாளர்களுக்குத் தக்க கழிவு உண்டு. முன் பணம் அனுப்பித் தேவையான படங்களுக்குப் பதிவு செய்துகொள்ளுங்கள்.

## செந்தமிழ்ப் பதிப்பகம்

கீழராஜ வீதி :: புதுக்கோட்டை.

## நல்ல நண்பர்கள் - கண்ணதாசன் (வனவாசம்)

அக்காலத்தில் சுயமரியாதைக்காரர்களின் பேச்சை எந்தப் பத்திரிகைகளும் பிரசுரிப்பதில்லை. ஏதாவது ஒரு மூலையில் தங்களைப் பற்றிய செய்தி வந்து விட்டால், சுயமரியாதைக்காரர்கள் எல்லோருமே அதை வாங்கிப் பார்ப்பார்கள்.

அண்ணாத்துரையின் பேச்சைப் பற்றி அவன் எழுதியிருந்த இதழ், அதன் சக்திக்குமேல் விற்பனையாயிற்று.

அந்தக் கட்டுரைக்குக் கீழே அவன் தன் பெயரை 'வணங்காமுடி' என்று போட்டிருந்தான். பின்னொரு சமயம் கலைவாணரோடு சென்று அவன் அண்ணாத்துரையைப் பார்த்தபோது, அறிமுகப் படலம் முடிந்ததும் அண்ணாத்துரை கேட்ட முதல் கேள்விகூட. "தாய் நாடு இதழில் எழுதியது நீங்கள் தானா?" என்பதுதான். இதனைப் பின்னர் விவரிப்பேன்.

அந்தக் கட்டுரைக்குப் பிறகு புதுக்கோட்டையில் அவனுக்குச் சில புதிய நண்பர்கள் அறிமுகமானார்கள். அப்போது 'பொன்னி' என்ற பத்திரிகையை நடத்தி வந்த தோழர் முருகு. சுப்பிரமணியன் அவர்களும், தோழர் பெரியண்ணன் அவர்களும் அவனுக்கு வாய்த்த இனிய நண்பர்களாவார்கள்.

பெரியாரை அவர்கள் கடவுளாகக் கொண்டாடியவர்கள். அண்ணாத்துரையை உயிருக்குயிராக நேசித்தவர்கள். திராவிடர் கழகத்தை ஆதரிக்கும் ஏடுகள் மிகக் குறைவாக இருந்த காலம். அவையும் அழகில்லாமல், அச்சுப்பிழை மிகுந்து வெளிவந்தன. அந்த நேரத்தில் வண்ண முகப்பு அட்டை போட்டு அழகாக நடந்த இதழ் 'பொன்னி' தான்.

பத்திரிகைத் துறையில் மற்றவர்கள் செய்து காட்டாத புதுமை எல்லாம் அவர்கள் செய்து காட்டினார்கள். இன்றும் தமிழகத்தில் சிலரை அச்சுக் கலை நிபுணர்கள் என்று தேர்ந்தெடுத்தால் அவர்களில் பெரியண்ணன் மிக முக்கியமானவராக இருப்பார்.

**பெரியண்ணன் முருகு சுப்பிரமணியம் இடையிலான கூட்டு பங்கு (ஒப்பந்தம்)**

திருச்சிராப்பள்ளி ஜில்லா புதுக்கோட்டையில் இருக்கும் அருணாசலம் செட்டியார் மகன் அரு. பெரியண்ணன் (1) ஜில்லா கோனாபட்டு முருகப்ப செட்டியார் மகன் முருகு. சுப்பிரமணியம் (2) ஆகிய இருவரும் செய்து கொண்ட கூட்டுப் பங்கு ஆதரவு.

இப்பவும் நாம இருவரும் சிலகாலமாகப் புதுக்கோட்டை கீழராஜ வீதியில் செந்தமிழ்ப் பதிப்பகம் என்ற பெயரில் அச்சுக்கூடம், பத்திரிக்கை முதலியன நடத்தி வருகிறபடியாலும், மேற்படி கூட்டு வியாபாரத்தின் நன்மையை உத்தேசித்தும், நமக்குள் நாம் இருவரும் ஒப்புக்கொண்டு அமுலில் இருந்து வருகிற இந்த நிபந்தனைகளை எழுத்து மூலம் ஊர்ஜிதப்படுத்திக் கொள்வதற்கும், நாம் எழுதிக்கொண்ட கூட்டுப் பத்திரத்தின் நிபந்தனைகள் என்னவென்றால்:

மேற்படி கூட்டு வியாபாரம் செந்தமிழ்ப் பதிப்பகம் விலாசத்தில் நடந்துவர வேண்டியது. மேற்படி பதிப்பகம் 30. 8. 1946 இல் ஆரம்பித்திருப்பதால், இந்தத் தேதியிலிருந்து வியாபாரம் துவங்கப் பட்டதாகக் கருத வேண்டியது.

மேற்படி கூட்டுக்கடையில் ஜாப் ஷேர்கள், பத்திரிகைகள், புத்தக வியாபாரம், புத்தகம் வெளியிடுதல் முதலியனவும், நாம் இருவரும் விரும்பினால் வேறு இதர வியாபாரங்களைச் சேர்ந்து நடத்தி வரவோ, அல்லது நடத்தி வருகின்ற வியாபாரங்களை நிறுத்தி வைக்கவோ செய்யலாம்.

மேற்படி கூட்டு வியாபாரத்தில் கீழ்க்கண்ட விகிதாசாரப்படி பங்கு ஏற்படுத்தி நடந்து வருகிறது. 1. அரு. பெரியண்ணன் 1/2, 2. முருகு சுப்பிரமணியம் 1/2. மேற்படி கூட்டு வியாபாரம் 20 வருஷங்களுக்கு ஊர்ஜிதத்தில் இருக்க வேண்டியது. அல்லது கூட்டுக்காரர்கள் விரும்பினால் நீடித்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு பார்ட்னரும் மாதம் ஒன்றுக்குச் சம்பளம் ரூபாய் 100 எடுத்துக் கொள்ள வேண்டியது. இரு பங்குக்காரர்கள் விரும்பினால் சம்பளத்தை அதிகப்படுத்தலாம்.

மேற்படி கூட்டு வியாபாரத்தை இரண்டு பார்ட்னர்களும் மேற் பார்த்து வரவேண்டியது. ஒவ்வொரு மார்ச் மாதக் கடைசியிலோ டிசம்பர் மாதத்திலோ லாப நஷ்டக் கணக்குப் பார்த்து எல்லாச் செலவுகளும் போக பாக்கி உள்ள லாப நஷ்டத்தைக் கூட்டாளிகள் இருவரும் சமமாகப் பிரித்து அவரவர்கள் கணக்கில் தாக்கல் செய்து

விட வேண்டியது. கூட்டு வியாபாரத்தின் நலத்தை உத்தேசித்து இரு பார்ட்னர்களும் சம்மதித்தால் வேறு இடங்களிலும் தொழில் நடத்தி வரலாம். இன்னும் வியாபாரத்தை நடத்தி வருவதற்கான இதர விஷயங்களை இரு பார்ட்னர்களும் ஒப்புக்கொண்டால் அப் போதைக்கப்போது ஏற்படுத்தி நடத்திக் கொள்ளலாம்.

ஒரு கூட்டாளி மற்றொரு கூட்டாளியின் சம்மதம் பண்ணியேல் கூட்டு வியாபாரத்திலுள்ள தன் பங்கையோ லாபத்தையோ ஈடுவைக்கவோ விற்கவோ கூடாது. இந்தக் கூட்டு வியாபாரத்தில் கணக்குகள் தஸ்தாவேஜ்கள் வகையறாக்களைப் பங்குதாரர்கள் யார் விரும்பினால் அவர்கள் வேண்டும் பொழுது கணக்குகளையும் தஸ்தா வேஜுகளையும் அலுவலகத்தில் — பாத்தியதை உண்டு.



## தி.மு.க துவங்கியபோது இயக்கத்தை வளர்த்த ஏடுகள்!

*(திமுகழகம் நடத்தும் ஏடுகள் பெரும் பாறைகளைப் பிளந்தெறியும் சிற்றுளிகள். திமுகழகத்தின் நல்லோர இருளை விரட்டும் அணையா விளக்குகள். - அறிஞர் அண்ணா)*

அறிஞர் அண்ணாவை ஆசிரியராகவும் வெளியிடுபவராகவும் கொண்டு சின்ன காஞ்சிபுரத்திலிருந்து வார ஏடாக 08.03.1942 முதல் வெளிவந்து 07.04.1963 வரை நடந்தது. திமுகவின் முதல் வார இதழ் இது.

முருகு. சுப்பிரமணியன் ஆசிரியராகவும், அரு. பெரியண்ணன் வெளியீட்டாளராகவும் கொண்டு புதுக் கோட்டையிலிருந்து திங்கள் இதழாக 15.02.1947 முதல் புறப்பட்டது. 1954 இடையில் நிறுத்தப்பட்டது. பகுத்தறிவு இயக்கத்திற்கு பல எழுத்தாளர்களையும், பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களையும் அறிமுகப் படுத்தியது.

காஞ்சி மணிமொழியார் - மா. இளஞ்செழியன் பிஏ (ஆனர்ஸ்) இருவரும் ஆசிரியர்களாக தந்தையும் தனயனுமாக சேர்ந்து சென்னையிலிருந்து வார இதழாக 16.08.1947 முதல் கொண்டு வந்தனர். 3.05.1958 வரை நடந்த இவ்வமைப்பிலிருந்து பத்து ஆண்டுகள் திராவிட நாட் குறிப்பு (டைரி) வெளிவந்தது.

என்.வி. நடராசன் ஆசிரியராகவும் வெளியீட்டாளராக வும் கொண்டு சென்னையிலிருந்து 15.08.1947 முதல் வார இதழாக வெளிவந்தது. 1966 மார்ச் வரை நடந்தது.

ஏ.வி.பி. ஆசைத்தம்பியை ஆசிரியராகவும் வெளி யீட்டாளராகவும் கொண்டு விருது நகரிலிருந்து மாதம் இருமுறை ஏடாக 1948ல் துவக்கப்பட்டு பிறகு சென்னையிலிருந்து 1956 மே 15 முதல் வார ஏடாக வந்தது. 1958லிருந்து தினசரியாக வெளிவந்து 1963 ல் நிறுத்தப்பட்டது.

இரா. க. தங்கப்பழம், எம்எஸ். சிவசாமி ஆகியோர்களை ஆசிரியர்களாகக் கொண்டு தூத்துக்குடியிலிருந்து 1949 முதல் மாதம் இரு முறையாக வந்து, சர்க்காரின் அடக்கு முறைக்கு இலக்காகியது. 1953–ல் நிறுத்தப்பட்டது.

டி.எம்.பார்த்தசாரதி உரிமையாளராக சொந்த அச்சகத்திலிருந்து வெளிவந்த மாலை மணி தினசரிக்கு 10.08.49 முதல் 07.12.50 வரை அண்ணா ஆசிரியராக இருந்தார். தி.மு.க துவக்க கால செய்திகளைத் தாங்கி வெளிவந்தது. 12.05.1951 முதல் 10.04.52 வரை கலைஞர் மு. கருணாநிதி ஆசிரியராக இருந்தார். 1954 வரை நடந்து நின்றது. டிஎம். பார்த்தசாரதி முதன் முதலாக "தி.மு.க. வரலாறு" நூல் எழுதியவர்.

# 8. பொன்னியின் படைப்புலகம்

*கவிதை, கதை, சிறுகதைகள், தொடர்கதைகள், கலைகள், கேலிச்சித்திரங்கள் (விகடங்கள்), சினிமா, ஆய்வு கட்டுரைகள், கட்டுரைகள், பொன்னி வாழ்த்துகள், அரசியல் நிலவரங்கள், சிறுவர் அரங்கம், சமூக சீர்திருத்த கருத்துகள் (மத எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, மறுமணம், கருப்புச்சட்டை போன்றவை), தொடர் கதைகள், பொது மேடை, வளரும் இலக்கியம், பிள்ளை வளர்ப்பு, அழகுக் குறிப்புகள், திரைப்பட விளம்பரங்கள், நாடக விளம்பரங்கள், நூல் விளம்பரங்கள் போன்றவை பொன்னி இதழில் இடம்பெற்றன.*

*'கம்பனிசைத்த கவியெலாம்' தானாகி எழுதினார் பாரதியார். சுதேசமித்திரன், தி இந்து, பால பாரதம், விஜயா, சக்ரவர்த்தினி, சூர்யோதயம், இந்தியா உள்ளிட்ட பல இதழ்களிலும் செய்தித்தாள்களிலும் பாரதியின் கவிதைகள் வெளியாகி இந்திய விடுதலைப் போரில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.*

*பாரதியார் வழி வந்த பாரதிதாசன், உலகெங்கும் வாழும் தமிழ்க் கவிஞர் பெருமக்களை ஒன்று சேர்க்க எண்ணம் கொண்டு தனது எழுத்து நடையையும் கொள்கைகளையும் பின்பற்றி எழுதி வந்தோரின் கவிதைகளை அவர் தொடங்கிய குயில் இதழ் வழியாக அறிமுகப்படுத்த ஆரம்பித்தார். குயிலின் முதல் இதழ் 1946 டிசம்பர் மாதம் சென்னையில் வெளியானது.*

*அதற்குப் பிறகு இரு இதழ்கள் 25.6.1947 அன்றும் 25.8.1947 அன்றும் புதுக்கோட்டையில் பெரியண்ணன் முருகு சுப்ரமணியம் நடத்தி வந்த செந்தமிழ்ப் பதிப்பகத்தில் வண்ணத்தாளுடன் அச்சிடப்பட்டு வெளிவந்தது. மாத வெளியீடாகவும் பின்னர் நாளிதழாகவும் வெளிவந்த குயில் இதழ் திராவிட நாடு, விடுதலை போன்ற அரசியல் கருத்துகளை அழுத்தமாக முன்வைத்து வந்ததால் 1948ல் சென்னை அரசால் தடைசெய்யப்பட்டது.*

*இக்காலத்தில் பாரதிதாசனின் கவிதைகளை இதழ்தோறும் வெளியிட்டு வந்த 'பொன்னி' இதழ் 'பாரதிதாசன் பரம்பரை' என்று*

தலைப்பிட்டு ஏராளமான இளம் கவிஞர்களைத் தமிழ் இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தியது.

**பாரதிதாசன் பரம்பரை கவிஞர்கள்**

1. மு. அண்ணாமலை
2. நாரா. நாச்சியப்பன்
3. சுரதா
4. புத்தனேரி சுப்பிரமணியன்
5. இராம. நாக. முத்தையா
6. முடியரசன்
7. இராம. வே. சேதுராமன்
8. வாணிதாசன்
9. சி. இராமசாமி
10. சாமி. பழனியப்பன்
11. அண. இராமநாதன்
12. கோவை இளஞ்சேரன்
13. சி. திருநாவுக்கரசு
14. ச. சீத்தாராம்
15. தெ. ஜெயராமன்
16. நா. மாணிக்கவாசகம்
17. தமிழரசன்
18. கே.டி.தேவர்
19. நா. கு. நமச்சிவாயன்
20. இரா. குழூஉத்தலைவன்
21. கு. திரவியம்
22. சு. வழித்துணைராமன்
23. இரங்கதுரைவேலன்
24. வ. செ. குலோத்துங்கன்
25. வெ. குருசாமி
26. தன. சுந்தரராசன்
27. டி.கே. கிருஷ்ணசாமி
28. பெ. நாகப்பன்
29. பெரி. சிவனடியான்
30. எஸ். சிவப்பிரகாசம்
31. சி. அ. சீனிவாசன்
32. மு. ரங்கநாதன்
33. ஜே.எஸ். பொன்னய்யா
34. கதி. சுந்தரம்
35. எம்.எஸ். மணி
36. நா.கணேசன்
37. தி. அரசுமணி
38. ப. சண்முகசுந்தரம்
39. க. பரமசிவன்
40. மா. தேவராசன்
41. மா. குருசாமி
42. வி. முத்துசாமி
43. ஷெரீப்
44. சுப்பு ஆறுமுகம்
45. எஸ். எம். ராமநாதன்
46. கி. மனோகரன்
47. வே.சண்முகம்

அதில் இடம்பெற்ற சில கவிஞர்களின் குறிப்புகள்:

**1. நாரா நாச்சியப்பன்**

ஆத்தங்குடியில் 1927ல் பிறந்த இவர் பொன்னி இதழ் பாரதிதாசன் பரம்பரையில் இரண்டாவது கவிஞராக அறிமுகமானார். 1949-1950 ஆண்டுகளில் பொன்னி இதழில் துணையாசிரியராகவும் பொன்னி நிறுவனம் வெளியிட்ட ‘முத்து’ என்ற சிறுவர் இதழின் ஆசிரியராகவும் பணியாற்றினார். குயில் இதழை பாரதிதாசன் மீண்டும் துவங்கியபோது முத்தையா அச்சகத்தில் பணியிலிருந்த இவரிடம் அச்சுப் பணியைப் பாவேந்தர் ஒப்படைத்தார். ஈரோட்டுத் தாத்தா, தேடி வந்த குயில், பர்மாவில் பெரியார், பாரதிதாசன் ஒரு சித்திரக்கவி, இன்பத் திராவிடம் என்று அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

**2. சுரதா**

அன்றைய தஞ்சாவூர் மாவட்டத்தில் 1921ஆம் ஆண்டு இராசகோபாலன் என்ற இயற்பெயருடன் பிறந்த இவர் பாரதிதாசன் மீது கொண்டிருந்த பற்றினால் சுப்புரத்தினதாசன் என்று தன் பெயரை மாற்றிக்கொண்டார். பொன்னியின் 1947 ஏப்ரல் இதழில் பாரதிதாசன் பரம்பரை வரிசையில் இவரது ‘சொல்லடா!’ என்ற கவிதை வெளியானது. உவமைக் கவிஞர் என்று சிறப்பித்து அழைக்கப்படும் இவர் தேன்மழை, சிரிப்பின் நிழல், சாவின் முத்தம் என்று இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

பொன்னி இதழில் பாரதிதாசன் பரம்பரையில் வெளிவந்த அனைத்துக் கவிதைகளையும் தொகுத்து பாரதிதாசன் பரம்பரை என்ற தலைப்பிலேயே 1993ஆம் ஆண்டு புத்தகம் வெளியிட்டுள்ளார்.

**3. புத்தனேரி சுப்பிரமணியன்**

தமிழக அரசின் பாரதிதாசன் விருது பெற்ற இவர் 1922ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம் புத்தனேரியில் பிறந்தார். கலை சார்ந்த பல்வேறு அமைப்புகளில் உறுப்பினராக இருந்தவர். பாரதி ஒரு நெருப்பு, பெரியார் – அண்ணா பெருமை, பாட்டும் கூத்தும், பாவேந்தர் நெஞ்சில் குழந்தைகள் போன்ற பல நூல்களின் ஆசிரியர் இவர் ஆவார்.

**4. முடியரசன்**

பெரிய குளம் 'துரைராசு' தமிழ்ப்பற்றால் முடியரசன் ஆனார். இவர் திருப்பத்தூரில் பாரதிதாசன் அவர்களை நேரடியாகக் கண்டு அவரின் பேச்சால் ஈர்க்கப்பெற்று அவரின் பரம்பரையுள் ஒருவராக ஆனார். புரட்சிக்கவிஞர் தலைமையில் இவரின் கலப்புத் திருமணம் நடைபெற்றது. தமிழாசிரியர், பல்கலைக் கழகப் பேராசிரியர், திரைத்துறைப் பாடலாசிரியர் என்று இவர் மிளிர்ந்தார். இவரின் படைப்புகள் காவியப்பாவை, பாடுங்குயில், நெஞ்சு பொறுக்குதில்லையே, மனிதனைத் தேடுகிறேன், தாய்மொழிக் காப்போம், வீரகாவியம் போன்றனவாகும். ஊன்றுகோல் என்று இவர் படைத்த பண்டிதமணி பற்றிய காவியம் இவரின் நோய் வருத்தலையும் தாண்டி வெளிவந்த படைப்பாகும்.

**5. வாணிதாசன்**

'கதிரோன் வருகை' என்ற கவிதையின் வழியாக பாரதிதாசன் பரம்பரையில் அறிமுகமான இவர் புதுவை வில்லியனூரில் 1915ஆம் அரங்கசாமி என்ற இயற்பெயருடன் பிறந்தார். பாரதிதாசனிடம் தொடக்கக் கல்வி பயின்று, பின் 1937 முதல் தமிழ் ஆசிரியராக 34 ஆண்டுகள் பணிபுரிந்தார். இரவு வரவில்லை, கொடி முல்லை, தொடுவானம் ஆகியவை இவரது சில படைப்புகள். 'தமிழகத்தின் வேர்ட்ஸ்வார்த்', 'கவிஞரேறு' என்று அழைக்கப்பெறும் இவருக்குப் பிரெஞ்சு அரசு 'செவாலியர்' விருதினை வழங்கிச் சிறப்பித்திருக்கிறது.

**6. கோவை இளஞ்சேரன்**

1923ஆம் ஆண்டு மெய்கண்டசிவன் என்னும் இயற்பெயருடன் பிறந்த இவர் 'கண்ணல்ல!' என்ற கவிதையின் வழியாக 1947ல் பாரதிதாசன் பரம்பரையில் அறிமுகமானார். தஞ்சாவூர் தமிழ்ச் சங்கத் துணைத்தலைவராகப் பதவி வகித்த இவர் அச்சுத் தொழிலாளியாகவும் தலைமைத் தமிழாசிரியராகவும் பணியாற்றியுள்ளார். தமிழக அரசின் பாவேந்தர் விருது, நல்லாசிரியர் விருது, நாகைத் தமிழ்ச் சங்க விருது, கலைஞர் கருணாநிதி அவர்களால் "கவிஞர்கோ" பட்டம் என்று சிறப்பிக்கப்பட்டுள்ளார். அண்ணாவின் வாழ்த்து, திருவள்ளுவத்தில் பகுத்தறிவு, இலக்கியம் ஒரு பூக்காடு, புதையலும் பேழையும் ஆகியவை இவரது சில நூல்கள்.

**7. வ. செ. குலோத்துங்கன்**

'மானுடம் பாடுவதில் மனநிறைவு கொள்பவன் நான்' என்று தன் கவிதைகளை விவரிக்கும் வா. செ. குழந்தைசாமி, 1929ஆம் ஆண்டு கரூர் மாவட்டத்தில் பிறந்தார். 1948ல் குலோத்துங்கன் என்ற புனைபெயரில் இவர் எழுதிய 'எங்கள் வாழ்வு' கவிதை பொன்னியில் வெளியானது. நீர்வளத்துறையில் பணியாற்றிய இவர் பல பல்கலைக்கழகங்களில் துணை வேந்தராகவும் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் தலைவராகவும் பதவிகள் வகித்துள்ளார். தமிழக அரசின் திருவள்ளுவர் விருது, சாகித்ய அகாதெமி விருது, இந்திய அரசின் பத்மஸ்ரீ மற்றும் பத்மபூஷன் ஆகிய விருதுகளைப் பெற்றிருக்கிறார். குலோத்துங்கன் கவிதைகள், அறிவியல் தமிழ், வாழும் வள்ளுவம், உலகச் செவ்வியல் மொழிகளின் வரிசையில் தமிழ் ஆகியவை இவர் எழுதிய சில நூல்கள்.

**8. சக்தி கிருஷ்ணசாமி**

த. க. கிருஷ்ணசாமி என்று அறியப்படும் தஞ்சாவூர் கலியபெருமாள் கிருஷ்ணசாமி (மார்ச் 11, 1913 நவம்பர் 8, 1987) தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தினைச் சேர்ந்த தமிழ் எழுத்தாளர், பாடலாசிரியர் மற்றும் திரைக்கதை ஆசிரியர் ஆவார். இவர் கலியபெருமாள்–வேதவள்ளி தம்பதியருக்கு மகனாகத் தஞ்சாவூரில் பிறந்தார். 1950களில் தொடங்கி 1970 வரை பல தமிழ்த் திரைப்படங்களுக்குக் கதை, வசனம் எழுதியுள்ளார். தமிழ்த் திரையுலகின் சிறந்த திரைக்கதையாசிரியர்களுள் ஒருவராகக் கருதப்பட்டார்.

**9. பெரி.சிவனடியான்**

சிவகங்கை மாவட்டம் புதுவயலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கல்லூரிப் பேராசிரியர். பாரதிதாசனின் வழியில் வடமொழி ஆதிக்கத்தில் இருந்துத் தமிழ் விடுப்பட்டுத் தனித்து நிற்கப் பாடியவர்களுள் இவரும் ஒருவர். இசையோடு தன் பாடல்களைப் பாடும் திறம் மிக்கவர். கவியரங்கக் கவிதைகள், கனிக்குவியல், முருகாஞ்சலி, சக்தி சரணங்கள், சக்தியும் மைந்தனும், பெரி. சிவனடியான் கவிதைகள் போன்றன இவரின் கவிதைப் படைப்புகளில் குறிப்பிடத்தக்கவை.

**10. சாமி பழனியப்பன்**

*இவரின் சொந்த ஊர் புதுப்பட்டி. 'தமக்கு முறையெனப் பட்டதைத் துணிவுடன் கூறும் ஆற்றல் அவர்தம் சிறப்பு' என்று பழனியப்பனைப் பற்றி உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் குறிப்பிடுகிறார். இலங்கை இதழான 'வீரகேசரி'யில் துணை ஆசிரியராகப் பணியாற்றியவர். பாரதிதாசன் மேல் பெரும் ஈடுபாடு கொண்டவர்.1953ல் 'பாரதியும் பாரதிதாசனும்' என்ற தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டுள்ளார். 'அமைதி கொள்வோம்' என்ற தலைப்பில் இவர் பொன்னியில் எழுதிய கவிதையால் பாரதிதாசன் பரம்பரையில் இணைந்தார். 1931 ல் பிறந்த இவர் 20.07.2013 அன்று தனது 82 ஆவது அகவையில் உயிரிழந்தார். இவரின் மகன் திரைப்படப் பாடலாசிரியர் பழனிபாரதி ஆவார்.*



# 9. 1950-களில்...

பெரியண்ணனின் தந்தை அருணாசலம் 12.2.1950ல் இயற்கை எய்தினார். அவரின் மறைவிற்குப் 'பிரிந்த அருணாசலப் பெருந்தகை' என்று பாரதிதாசன் இரங்கற்பா படைத்தார்.

தந்தை அருணாசலம் இறந்த ஒரு மாதத்தில் பெரியண்ணன் மீனாட்சி அவர்களுக்கு 19.3.1950 அன்று மூன்றாவது மகள் பிறந்தார். அந்த மகளுக்கு 'பூங்கோதை' என்று பாரதிதாசன் பெயர் சூட்டினார்.

அருணாசலம் அவர்களின் மறைவிற்குப் பின் குடும்பச் சூழலில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. அருணாசலத்தின் அண்ணன் பழனியப்பனின் மனைவி மீனாட்சி, திருமணமான சில ஆண்டுகளில் இறந்துவிட்டார். இவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை. பழனியப்பன், அருணாசலம் குடும்பத்தினருடன் ஆத்தங்குடி வீட்டில் வசித்து வந்தார்.

பழனியப்பன் பணத்தை நிறைய விரயம் செய்ததால், பெரியண்ணன் வாழ்ந்து வந்த ஆத்தங்குடி வீடு ஏலத்திற்கு வந்தது. வீட்டை மீட்க பெரியண்ணன் முயற்சி மேற்கொண்டாலும், அதற்குள்ளாக வீட்டின் ஒரு பங்கை அவரது பங்காளிகளில், இதுபோன்ற செட்டிநாடு வகை வீடு இல்லாத ஒருவர் வாங்கினார். பெரியண்ணனின் தாயார் மீனாட்சி உழைப்புக்கு மதிப்பளிப்பவர், சாமர்த்தியசாலி. ஆனால் மிகவும் கடுமையான குணம் கொண்டவர். இதனால் பெரியண்ணனின் தாயார் மீனாட்சி அவர்களுக்கும் பழனியப்பனுக்குமான உறவு அவ்வளவு சுமுகமானதாக இருக்க வில்லை.

மேற்கூறிய நிகழ்விற்குப் பிறகு சில வருடங்களில் பழனியப்பனும் மறைந்துவிடுகிறார். இக்காலகட்டத்தில் அவர் மறைவையொட்டி ஏற்பட்ட பல பிரச்சனைகளால் பெரியண்ணனின் தாயார் மீனாட்சியையும் அவர் குடும்பத்தையும் ஊரில் இருந்த பங்காளிகள் கூட்டு சேர்த்துக் கொள்ளவில்லை. மீனாட்சியின்

கடுமையான குணத்தால் பங்காளிகள், ஊர் நண்பர்களை அவர்கள் குடும்பம் இழந்தது.

1950களில் பெரியண்ணனின் குடும்பம் சென்னைக்குக் குடிபெயர்ந்தது. இச்சூழலில் முருகு சுப்பிரமணியமும் அவர் குடும்பமும் மலேசியா இடம்பெயர்கிறார்கள். கடும் பொருளாதார சிக்கல்களுக்கு இடையே 'பொன்னி' இதழையும், செந்தமிழ்ப் பதிப்பகத்தையும் தொடர்கிறார் பெரியண்ணன். பொன்னி இதழ் 1951 முதல் சென்னை தண்டையார்பேட்டையில் 'பொன்னி அச்சகத்தில்' இயங்கத் தொடங்கியது. இதழ்ப் பணிகளையும் அதன் மூலமாக திராவிட இயக்கச் சிந்தனைகளை வளர்க்கும் பணிகளையும் தொடர அவர் தந்தை அருணாசலம் ஆத்தங்குடியில் ஏலத்தில் வாங்கிய ஒரு வீட்டையும் விற்கிறார் பெரியண்ணன். பொருளாதாரச் சூழல் சாதகமாக இல்லாத நிலையிலும் 'பொன்னி'யைத் தொடர்ந்து நடத்தினார்.

தன் மனைவியின் பெற்றோர், திருமணத்தின் போது கொடுத்த தங்க, வைர நகைகளை விற்கும் சூழலும் ஏற்பட்டது. தடை ஏதும் சொல்லாமல் பெரியண்ணனுக்கு உற்றத் துணையாக இருந்தார் அவரின் மனைவி மீனாட்சி.

பெரியண்ணன் ஒரே மகன் என்பதால் அவரின் தாயார் பல பிள்ளைகளைப் பெற்றுக்கொள் என்று பெரியண்ணனிடம் கூறியுள்ளார். இதை பெரியண்ணன் – மீனாட்சி நன்கு பின்பற்றினர் என்றே சொல்ல வேண்டும். தமிழரசி, பொன்னி, பூங்கோதை ஆகியோர் ஆத்தங்குடி, புதுக்கோட்டையில் இருக்கும்போதே பிறந்தனர். பூங்கோதைக்கு அடுத்து பிப்ரவரி மாதம் 2ஆம் தேதி 1951ல் செல்வராஜ் என்ற மகன் பிறந்தார். ஆனால் பிறந்த ஐந்து ஆண்டுகளிலேயே மறைந்தார். பின்னர் சுலோச்சனா (23.06.1953), வள்ளியம்மை (வள்ளிக்கண்ணு) (30.03.1955), விசாலாட்சி (20.04.1957), அழகப்பன் (28.08.1959) என்று வரிசையாகப் பிள்ளைகள் பிறந்தனர்.

பல்வேறு தொடர்புகள் இருந்தாலும் எவரையும் நாடிச் சென்று தன் தேவைகளுக்காக உதவிக் கேட்கும் பழக்கம் இல்லாதவர் பெரியண்ணன். பல முயற்சிகளை மேற்கொண்டு 'பொன்னி'யைத் தொடர்ந்தாலும் அவரின் பொருளாதாரச் சூழல் காரணமாகப் பொன்னி இதழ் வெளியீடு 1955ல் நிறுத்தப்படுகிறது.

*பின்னர் பதிப்பகத் துறையில் உள்ள அனுபவத்தால் லோட்டஸ் அச்சகம் உரிமையாளர் லோட்டஸ் நாடார் அவர்களுடன் ஒரு வருடம் வேலை செய்தார். இதற்குப் பின் 1955ல் சென்னை பிராட்வேயில் சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் நடத்திய 'ஐடியல் பிரிண்டர்ஸ்' அச்சகத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார். இந்தக் காலகட்டங்களில் பெரியண்ணனின் மகள்கள் தமிழரசி, பொன்னி, பூங்கோதை ஆகியோர் சில காலம் ஆத்தங்குடியில் உள்ள நேரு வித்யாலயா பள்ளியில் படித்தனர். பின்னர் அவர்களும் சென்னைக்குக் குடிப்பெயர்ந்தனர்.*

*பெரியண்ணனின் தாயார் மீனாட்சி அவர்கள் ஆத்தங்குடி பூர்வீக வீட்டிலேயே வசித்து வந்தார். தன் அம்மாவிற்கு உடல் நலம் சரியில்லை என்று செய்தி வந்ததும் பெரியண்ணன் அவர்கள் சென்னையிலிருந்து ஆத்தங்குடி கிளம்பினார். அவர் ஆத்தங்குடி சென்றதும் அவரின் தாயார் மீனாட்சி மறைந்தார். மீனாட்சியின் மறைவுக்கு உறவுகள், நண்பர்கள் என்று யாரும் வரவில்லை. பங்காளிகள் பலர் இருந்தாலும், அவர்கள் பெரியண்ணனுக்குத் தேவை என்று வரும் நேரத்தில் பெரிதாக உதவவில்லை. ஒரு நான்கு ஐந்து உறவுகளே உடன் இருந்தனர். முருகப்பன், சேது (பெரியண்ணன் மனைவியின் சகோதரர்கள்) என்று விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிற்குச் சிலரே இருக்க, பெரியண்ணன் அவரின் தாயாருக்கு இறுதிச் சடங்குகளைச் செய்தார்.*

*அது தொலைபேசி, இணைய வசதி இல்லாத காலம் என்பதால், பெரியண்ணன் சென்னை வந்தபிறகே அவரின் தாயார் இறந்த செய்தி குடும்பத்திற்குத் தெரியவந்தது.*

*செல்வாக்கான குடும்பம், சொத்துகள் நிறைந்த குடும்பம், ஏற்றத்தை நன்கு பார்த்த குடும்பம் அச்சமயம் இறக்க நிலையை அடைந்தனர்.*

['பொன்னி'க்குடையார் அரு. பெரியண்ணனவர்களின் தந்தையார் அருணாசலனார் இயற்கை எய்தியமைக்கு இரங்கற்பா]

நன்னெறி நாட லல்லால் ஆயிரம் வந்துற் றாலும்
புன்னெறி நாடா மேன்மைப் பொன்மலை அன்பர் இந்நாள்
தொன்னெறி தவிர்த லில்லாத் திராவிடத் தூய்மை நாடு
தன்னெறி தவிர்ந்த தென்று தவிர்ந்தனர் போலும் வாழ்வே.

அக்கம்பக் கத்தார் போன்றே அருணாச லத்தார் தாமும்
மக்களைப் பெற்றா ரேனும், மக்களை வளர்த்த பாங்கும்.
மக்கள்பால் நல்லொ ழுக்கம் வாய்ப்புறச் செய்த பாங்கும்
மக்களை மதித்த பாங்கும் மாசிலாத் தென்பாங் காகும்.

தன்றந்தை பெரியண் ணன்தான் தானிழுந் ததில்மெய் யாக
என்றந்தை நானி ழந்தேன் இன்னரு ணாசல த்தை
இன்றிந்த நாடி ழந்தே இசையிழந் ததுவு மாகும்
என்றந்த நல்ல றத்தின் ஏந்தலைக் காண்பேன் இங்கே.

வெல்லாரை வென்றார் என்பர் வென்றவர் தோற்றார் என்பர்
கல்லாரைக் கற்றார் என்பர் கருத்திலா ஆள வந்தார்!
நல்லாரை நாளும் நாளும் எதிர்பார்க்கும் திராவி டந்தான்
சொல்லரு ணாச லத்தைத் துறந்துசீர் துறந்த தேயோ

இமைதொறும் குடித்த னத்துக் குழைத்தனர்; ஏற்றஞ் செய்தே
அமைதியைப் பெற்றார்! அன்பர் அருணாச லப்பேர் வாழ்க
தமைக்காத்தார் ஆத லாலே பெரியண்ணன் உற்றார் ஆன
தமிழர்தாம் தளர்தல் வேண்டா தமிழ்த்தொண்டு தளரா மைக்கே.

— பாரதிதாசன்



தோற்றம் 11-7-1882 மறைவு 12-2-1950

# 10. ஏற்ற இறக்கம் (1961-1971)

முதலாளித்துவம் மேலோங்கி இருந்த காலகட்டம் அது. ‘ஐடியல் பிரிண்ட்டர்ஸ்’ நிறுவனர் சொக்கலிங்கம் அவர்களை ‘முதலாளி’ என்றே பெரியண்ணன் அழைப்பார். அவரின் பிள்ளைகளும் அவ்வாறே அழைத்தனர். முதலாளி வீட்டிற்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் வாங்கி வருவது, முதலாளியின் பிள்ளைகளைப் பள்ளிக்கு அழைத்துச் சென்று கூட்டி வருவது, கார் ஓட்டுவது என்று அனைத்து வேலைகளையும் பெரியண்ணன் செய்தார். பெரியண்ணனின் பிள்ளைகள் இதை அதிகம் விரும்பவில்லை.

1962ஆம் ஆண்டு இந்தியக் குடியரசு தினத்தன்று (சனவரி 26) பெரியண்ணன் – மீனாட்சியின் கடைசி மகனான ரவி பிறந்தார்.

பெரியண்ணன் - மீனாட்சி வீட்டின் சுபகாரியங்களில் முதலாளி குடும்பத்தினரும் கலந்து கொள்வார்கள். சென்னையில் அவர்களின் மகள் பூங்கோதை பூப்பெய்திய விழாவிற்கு முதலாளி குடும்பத்தினர் ஒரு பட்டுப்பாவாடை பரிசளித்துள்ளனர். இதுவே தான் பார்த்த முதல் பட்டுப்பாவாடை என்று பூங்கோதை நினைவு கூறுவார். இதுபோல் இன்னொரு மகள் சுலோச்சனா பூப்பெய்திய விழாவிற்கும் முதலாளி குடும்பத்தினர் பரிசளித்தனர்.

என்னதான் பெரியண்ணனிடம் பணம் இல்லை என்றாலும், அதை அவர் பெரும் பொருட்டாக எண்ணவில்லை. வீட்டில் ஆடம்பரம் இல்லாவிட்டாலும் அடிப்படைத் தேவைகளுக்கு அவர் என்றுமே பஞ்சம் வைத்ததில்லை. தன் வருமானத்தில் காய்கறிகள், கறி என்று உயர்தரமான உணவுப் பொருட்களைக் குறைவில்லாமல் தேடித்தேடி வாங்கி வருவார். சிறு வயதில் இருந்தே பிள்ளைகள் அனைவரும் வீட்டின் சூழல் கருதி, அனைத்து வீட்டு வேலைகளையும் பகிர்ந்து கொண்டனர். சமைப்பது, பாத்திரம் கழுவுவது, வீட்டைக் கூட்டுவது என்று எந்த ஒரு வேலையும் சிறிய வேலை அல்ல என்று வேலை செய்தனர். எட்டுப் பிள்ளைகள் இருந்ததினால் ஒவ்வொருவரும் சுழற்சி முறையில் வீட்டு வேலைகளைப் பகிர்ந்து செய்தனர்.

இந்தக் காலகட்டத்தில் பெரியண்ணனின் மனைவி மீனாட்சி அவர்களின் உறவினர் 'புலிமார்க்' சீயக்காய் தூள் நிறுவனம் நடத்திய அலமேலு – நாகப்பன் குடும்பத்தினர் பெரியண்ணன் - மீனாட்சி குடும்பத்திற்குப் பெரிதும் உதவினார்கள். அலமேலு – நாகப்பன் அவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை என்பதாலும், மீனாட்சியின் குடும்பம் பெரிது, அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் என்பதாலும் பல சமயங்களில் பெரியண்ணன் மீனாட்சி வீட்டிற்குத் தேவையான மளிகைப் பொருட்கள், காய்கறிகள் முதலியவற்றை அவர்கள் நிறுவனத்தில் வேலை செய்த நடராசன் என்பவர் மூலம் சைக்கிளில் கொடுத்து அனுப்புவார்கள். இவ்வாறாகக் காலங்கள் ஓடின.

**கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு**

**மாடல்ல மற்றை யவை**

என்ற வள்ளுவரின் கருத்தை ஏற்று வாழ்ந்தார் பெரியண்ணன். அழியாத செல்வமான கல்விச் செல்வத்தை அவரின் அனைத்துப் பிள்ளைகளிடமும் சேர்த்தார். 1950, 60 காலகட்டங்களில் வசதி படைத்த வீடுகளில் கூடப் பெண்கள் கல்வியில் பெரிதும் கவனம் செலுத்தமாட்டார்கள். செட்டிநாட்டுப் பகுதிகளில் உள்ள பெரிய குடும்பங்களில் கூட ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் என்ற பாகுபாடு இருக்கும். ஆறு மகள்கள் உட்பட ஒவ்வொரு பிள்ளையும் பட்டப்படிப்பு படிக்க வேண்டும் என்று நினைத்தது மட்டுமின்றி அதை நிறைவேற்றவும் செய்தார் பெரியண்ணன். அவரின் ஆறு பெண்களையும், யார் என்ன சொன்னாலும் நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

பெரியண்ணனின் நண்பர் சீனி என்பவர் 'தங்களுக்கு எட்டுப் பிள்ளைகள். அதில் ஒருவரை மருத்துவம் படிக்க வைத்தால் அது உங்கள் அனைவருக்கும் பிற்காலத்தில் பெரிதும் பயன்படும்' என்று கூறினார். ஆனாலும் பெரியண்ணன் ஒவ்வொரு பிள்ளைக்கும் எது விருப்பமோ அவற்றைத் தேர்வு செய்துகொள்ள அவர்களின் போக்கிலேயே விட்டார். இதுதான் செய்ய வேண்டும் என்று யாரையும் அவர் வற்புறுத்தியது இல்லை. பெரும் அரசியல் தொடர் புகளும், நட்புகளும் அவருக்கு இருந்தபோதும், அவற்றை நம்பாமல் கல்வியைப் பெரிதும் நம்பினார்.

மூத்த மகள் தமிழரசி இராணி மேரி கல்லூரியில் தன் பட்டப்படிப்பை முடித்து சென்னை கிண்டியில் இருக்கும் கிங்ஸ் இன்ஸ்டிடியூட்டில் வேலைக்குச் சேர்ந்தார். இரண்டாம் மகள்

பொன்னி, பிரசிடென்சி கல்லூரியில் பி.எஸ்.சி (Bsc) படித்து முடித்தார். மருத்துவப் படிப்பில் சேர பி.எஸ்.சி பயின்றவர்களுக்கு அப்போது இட ஒதுக்கீடு இருந்தது. பொன்னிக்குச் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர இடம் கிடைத்தது. அவருக்கு மருத்துவத் துறையில் நாட்டம் இருந்ததால் மருத்துவம் படிக்க முனைந்தார். பெரியண்ணன் – மீனாட்சிக்கு இது பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. அப்போது தமிழரசிக்குத் திருமணம் செய்வதென முடிவாயிற்று.

பெரியண்ணன் அவர்களுக்கு ஊரில் தொடர்புகள் அதிகம் இல்லாத காரணத்தினாலும் பங்காளிகளுடன் கூட்டு இல்லாததாலும் தன் மூத்த மகள் தமிழரசியின் திருமணத்தைச் சென்னையில் நடத்த விருப்பப்பட்டார். மாப்பிள்ளை சுப்பையா பள்ளத்தூரைச் சேர்ந்தவர். நகரத்தார் திருமணங்கள் பெரும்பாலும் ஊரில் மணமகள் வீட்டில்தான் நடைபெறும். பெரியண்ணன் திருமணத்தை என்னதான் சென்னையில் நடத்த வேண்டும் என்று விருப்பப்பட்டாலும் மணமகன் வீட்டார் ஊரில்தான் நடத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். வேறு வழியில்லாமல் ஆத்தங்குடியில் திருமணம் செய்வதென்று முடிவாயிற்று. ஊர்ப் பழக்கம் அதிகம் இல்லை. திருமணத்திற்குப் பங்காளிகள் வருவார்களா மாட்டார்களா என்று கேள்வியும் இருந்தது.

ஊரில் திருமணத்திற்கான வேலைகளைச் செய்ய ஆரம்பித்தனர். ஆத்தங்குடி வீட்டில் புழக்கம் இல்லாததால் அவர்கள் வீட்டில் அப்போது மின்சார வசதி இல்லை. மின்சார இணைப்பு கொடுப்பதற்காக வேலைகள் மேற்கொண்டனர். பெரியண்ணனின் மகள் பூங்கோதைக்குப் பள்ளி விடுமுறை என்பதால் திருமண வேலைகளைச் செய்வதற்காக சில மாத காலம் ஆத்தங்குடியிலேயே இருந்தார்.

பெரியண்ணன் பெரிய செல்வந்தர் இல்லை என்பதால் பெண்ணிற்குத் திருமணம் செய்வது என்பது சாதாரண காரியம் இல்லை. 1960 காலகட்டத்தில் பெண்ணிற்குத் தொகையும், பொருட்களும் கொடுத்துத்தான் திருமணம் செய்ய வேண்டும். பெரிய அளவில் இல்லை என்றாலும் மாப்பிள்ளை வீட்டாருக்குக் கொடுக்க, பெரியண்ணன் தன் மனைவி மீனாட்சி அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சீர் அனைத்தையும் ஆத்தங்குடியில் உள்ள உறவினர் வீட்டின் அறை ஒன்றில் பூட்டி வைத்திருந்தார். ஆனால் திருமணத்திற்குச் சில வாரங்கள் முன்பு அறையில் இருந்த அனைத்துச் சாமான்களும் திருடு போயின. கையில் பணம் இல்லை,

இனி எப்படித் திருமணம் செய்வது? ஆனால் பெரியண்ணன் கலங்கவில்லை. எப்படியோ அங்கும் இங்கும் சமாளித்து அடுத்த வேலையைப் பார்த்தார்கள். ஆனால் அடுத்து இதைவிட ஒரு பெரிய இடி காத்திருந்தது.

திருமணத்திற்குச் சில நாட்களுக்கு முன்னர் பெரியண்ணனும், மீனாட்சியின் சகோதரர் முருகப்பனும் ஆத்தங்குடிக்கு அருகில் உள்ள கானாடுகாத்தானுக்குத் திருமண வேலையாக ஸ்கூட்டரில் சென்று கொண்டிருந்தார்கள். பெரியண்ணன் ஸ்கூட்டரை ஓட்டினார். அப்போது ஒரு பெரிய கல் தடுக்கி ஸ்கூட்டர் பள்ளத்தில் விழுந்தது. எதிர்பாராத விதமாக நடந்த இந்த விபத்தில் பெரியண்ணனுக்குப் பலத்த அடி. எனினும் தகவல் சொல்ல முருகப்பனும், பெரியண்ணனும் அவசர ஊர்தி வண்டியில் ஆத்தங்குடி வந்து சேர்ந்தனர்.

வீட்டில் உள்ளோருக்கு, இதுபோல் ஒரு வண்டி திருமண வீட்டிற்கு முன் வந்து நின்றதும் அச்சம் ஏற்பட்டது. பெரியண்ணன் வீட்டிற்குள் நுழைய முயற்சி செய்த சமயத்தில் அவர்கள் வீட்டில் உள்ள மின்விளக்குகள் ஒளிரத் தொடங்கின. அவர்கள் வீட்டிற்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டது. இது பெரியண்ணனுக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தந்தாலும் அவரால் நடக்கக்கூட முடியவில்லை. அவர் உயிர் பிழைப்பாரா என்ற ஒரு நிலைகூட இருந்தது. உடனே பெரியண்ணனை மதுரையில் உள்ள எர்ஸ்கின் மருத்துவமனையில் (இப்போதைய மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனை) சேர்த்தனர்.

தமிழரசி திருமணம் இன்னும் சில நாட்களில்... பெரியண்ணனோ மருத்துவமனையில்... என்ன நடந்தது?

இந்த நேரத்தில் அழ. கருப்பையா என்ற பங்காளி, ‘பெரியண்ணன் மருத்துவமனையில் இருக்கிறார், என்னதான் நமக்குள் பிரச்சனை இருந்தாலும் இதுபோல அவரை விட்டுவிடக் கூடாது’ என்று கூறி ஊரில் மூத்தவரான பெரிச்சியப்பன் என்ற சின்னையாவிடம் சென்று முறையிட்டார். சின்னையாவும் ஆமோதிக்க பங்காளிகள் அனைவரும் ஒன்று சேர்ந்தனர்.

திருமணத்திற்கு உவாகா(சீதனப் பணம்) 7000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று மணமக்கள் வீட்டார் ஒப்பந்தம் செய்திருந்தனர். ஆனால் பெரியண்ணன் 3500 ரூபாய்தான் திரட்டி வைத்திருந்தார். அவர் மருத்துவமனையில் இருந்ததால் முழு உவாகாவைக் கொடுக்க

முடியவில்லை. இதுபோன்ற ஒரு சூழலில் பங்காளிகளில் ஒருவர் பணத்தைப் பின்னர் தருகிறோம் என்று உறுதியளித்து கையெழுத்து இடுவது அக்காலத்தில் வழக்கமாக இருந்தது. இவ்வழக்கத்தைப் 'பணத்தை உண்டியலில் வைக்கிறோம்' என்றும் கூறுவர். பங்காளி களின் சார்பாகக் கையெழுத்திடுவதற்கு அழ. கருப்பையா தயாராக இருந்தார்.



தமிழரசியின் திருமணம்

ஆனால் அதற்கு முன்னர் பங்காளிகள் சிலர், கடியாபட்டியில் இருக்கும் பெரியண்ணன் வேலை செய்த ஐடியல் பிரிண்டர்ஸ் நிறுவனர் சொக்கலிங்கத்திடம் சென்று பெரியண்ணன் மருத்துவ மனையில் இருக்கும் விவரத்தைக் கூறி பணம் கேட்டனர். அவரும் நல்லவேளையாகப் பணத்தைக் கடனாகக் கொடுத்தார். பின்னர் பங்காளிகள், உண்டியல் வைக்காமல் மாப்பிள்ளை வீட்டாரிடம் மீதமுள்ள உவாகாவைக் கொடுத்தனர்.

பெரியண்ணனின் மூத்த மகள் தமிழரசிக்கும் சோமசுந்தரம் - மீனாட்சி தம்பதியரின் மகனான சுப்பையாவிற்கும் திருமணம் 1969ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ஆம் தேதி பெரியண்ணன் இல்லாமலே நடந்து முடிந்தது. திருமணம் முடிந்த கையோடு,

மணமக்கள் மருத்துவமனைக்குச் சென்று பெரியண்ணனிடம் ஆசி பெற்றனர். சில மாத காலம் மருத்துவமனையில் இருந்த பெரியண்ணனை, அப்போது அமைச்சராக இருந்த மாதவன் உட்படப் பலர் வந்து நலம் விசாரித்தனர். மருத்துவ சிகிச்சைக்குப் பின் பெரியண்ணன் சென்னை திரும்பினார். அப்போதும் அவரால் நடக்க இயலவில்லை. பெரியண்ணனின் மனைவி மீனாட்சியும் பிள்ளைகளும் அவரைக் கவனித்துக் கொண்டனர்.

சிறிது காலம் அவர் படுக்கையில் இருந்த காரணத்தால் அவரால் இருசக்கர வாகனம் ஓட்ட இயலவில்லை. கவிஞர் நாக. முத்தையாவிடம் இருந்து அவர் பயன்படுத்திய FIAT காரை (MSS 5194) வாங்கி அதைப் பயன்படுத்த ஆரம்பித்தார். சற்று உடல் நலம் தேறியவுடன் இரண்டாவது மகள் பொன்னிக்குத் திருமணம் நடத்த திட்டமிட்டார். சென்னை மருத்துவக் கல்லூரியில் மூன்றாமாண்டு மருத்துவம் படித்துக் கொண்டிருந்த தன் மகள் பொன்னியைப் பார்க்க ஒரு மதியம் பெரியண்ணன் வந்திருந்தார். 'இன்று மாலை உன்னைப் பெண் பார்க்க வருகிறார்கள், தயாராக இரு' என்று கூறி சென்றார். பெரியண்ணன் ஏதாவது சொன்னால் அவரின் பிள்ளைகள் மறுபேச்சு எதுவும் பேச மாட்டார்கள். படிக்கும் தருவாயில் திருமணத்திற்கு விருப்பம் இல்லை என்றாலும் தன் அப்பா கூறியதால் பொன்னி திருமணத்திற்கு ஒப்புக்கொண்டார்.

பள்ளத்தூரைச் சேர்ந்த அருணாசலம் – வள்ளியம்மை அவர்களின் மகனான முத்துக்குமரனுக்கும், பொன்னிக்கும்



பொன்னியின் திருமணம்

ஆத்தங்குடியில் இல்லாமல் சென்னையில் திருமணம் செய்வதென முடிவானது. மாப்பிள்ளை வீட்டாரின் பங்காளிகள் அவர்களின் ஊரிலிருந்து ஒரு வண்டியில் சென்னை வந்தனர். செலவுகளுக்குப் பணம் தேவைப்பட்டது. பெரியண்ணனின் நண்பரான கயல் தினகரன், அவரின் மனைவியின் நகைகளை அடகு வைத்து பணம் தந்தார்.

கடும் பொருளாதாரச் சிக்கல்களுக்கிடையே இவர்களது திருமணம் 1971ஆம் ஆண்டு சனவரி மாதம் 29ஆம் தேதி சென்னை மயிலாப்பூரில் இருக்கும் திரு.வி.க. திருமண மண்டபத்தில் மிக எளிமையான முறையில் நடந்தது. திருமணம் முடிந்த அதே இரவு மணமக்கள் இருவரும் பங்காளிகள் வந்த அதே வண்டியில் பள்ளத்தூருக்குப் புறப்பட்டனர். பெண் வீட்டார் சார்பாக மீனாட்சியின் தங்கை வள்ளியும், மகன் அழகப்பனும் பெண் அழைப்பிற்குச் சென்றனர். இவர்கள் திருமணத்திற்கு ரூபாய் 8,000 சீதனமாகக் கொடுக்கப்பட்டது.

# 11. முரசொலி வருடங்கள்

கிட்டத்தட்ட 15 வருடங்கள் ஐடியல் பிரிண்ட்டர்ஸ் நிறுவனத்தில் வேலை செய்தும், முன்னேற்றங்கள் பெரிதும் இல்லாத காரணத்தால் அந்நிறுவனத்திலிருந்து விலகுவது நல்லது என்று பெரியண்ணன் எண்ணினார்.

இக்காலகட்டத்தில் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், தன்னால் தொடங்கப்பட்ட முரசொலியை நிர்வகித்து வளர்க்க பதிப்பகத் துறையில் நல்ல அனுபவம் உள்ள ஒருவரைத் தேடிக்கொண்டிருந்தார். சென்னை புரசைவாக்கத்தைச் சேர்ந்த தையற்கலைஞர் (டெய்லர்) சுந்தரம் மற்றும் கயல் தினகரன் வழியாக இச்செய்தி பெரியண்ணனிற்கு வந்து சேர்கிறது. பொன்னி இதழை நடத்தும் போது, அப்போது இருந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களுடன் நல்ல அறிமுகம் இருந்திருந்தாலும் திராவிட இயக்கத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்த டெய்லர் சுந்தரம் மற்றும் கயல் தினகரன் மூலம் 1971ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதல்வராக இருந்த கலைஞர் மு. கருணாநிதி அவர்களிடம் மீண்டும் அறிமுகம் ஆகிறார் பெரியண்ணன். அப்போது முரசொலி மாறனைச் சந்திக்கிறார். பெரியண்ணனின் பதிப்பகத் துறை அனுபவங்கள் முரசொலியை நிர்வகிக்கும் பொறுப்பிற்கு மிக நன்றாகப் பொருந்தவே, அந்தப் பொறுப்பினை ஏற்று முரசொலியில் இணைகிறார்.

பெரியண்ணன் முரசொலியை நிர்வகித்தது, அவரின் வாழ்க்கையில் ஒரு நல்ல மாற்றத்தைக் கொண்டு வந்தது என்றே சொல்லலாம். பொருளாதார ரீதியாகப் பெரிய மாற்றங்கள் இல்லையென்றாலும், மக்கள் தொடர்புகள் பெருகின. இதனால் பலருக்கு எதையும் எதிர்பாராமல் அவரால் உதவ முடிந்தது. அவரின் நேர்மையும், எதையும் எதிர்பார்க்காமல் உதவும் குணமும், சீரான பணியும் முரசொலியிலும், வெளியிலும் அவருக்கு மிகுந்த மதிப்பை உண்டாக்கியது. அவர் காருக்குப் பெட்ரோல் போட முரசொலிதான் காசு கொடுத்தது. முரசொலி அலுவலகத்தில் அவருக்கென்று தனி அறை போன்ற வசதிகளும் இருந்தன.

முரசொலியின் நிர்வாகியாக பெரியண்ணன், அலுவலகத்தில் பல சீரமைப்புகளை மேற்கொண்டார். இதழ்கள் வெளியூர்களுக்குத் தாமதமாகச் செல்வது, இயந்திரங்கள் பழுதடைவது, ஆள் பற்றாக்குறை போன்ற தடைகள் வந்தபோதும் அனைத்தையும் எதிர்கொண்டு அவற்றைத் தன் குழுவுடன் சேர்ந்து சரி செய்தார். இவரின் அச்சகப் பணிகளும் திறமைகளும் முரசொலிக்கும் அதன் நிர்வாகத்திற்கும் பெரும் உதவியாக இருந்தன. முரசொலி ஊழியர்களுக்கு வருங்கால வைப்பு நிதி (Provident Fund) போன்ற திட்டங்களை ஏற்படுத்தினார்.

பெரியண்ணன் சரியான நேரத்திற்கு அலுவலகத்திற்கு வருவார். முரசொலி ஊழியர்கள் அனைவரிடமும் அன்பாகப் பழகுவார். முரசொலியில் அப்போது வேலை செய்தோர் சிலர் சரியான நேரத்திற்கு அலுவலகத்திற்கு வராமல் இருந்தனர். அதை சரி செய்ய வருகைப் பதிவு முறையைக் கொண்டு வந்தார். அப்போது சிலர், ‘நான் தலைவருக்கு நெருக்கம். இதனால் நான் வருகைப் பதிவேட்டில் வந்த நேரம் குறித்து எழுதி கையெழுத்திட வேண்டிய அவசியம் இல்லை’ என்று சொன்னாலும் அனைவருக்கும் இது பொருந்தும் என்று வருகைப் பதிவேடு முறையை நடைமுறைப்படுத்தினார்.

முரசொலியில் அப்போது நாளிதழ்களை அச்சிடுவதற்கு போதுமான இயந்திரங்கள் இல்லை. கைகளால் அச்சுக்கள் கோக்கப்பட்டன (Hand Composing). தினமணி அலுவலகத்தில் முரசொலி நாளிதழ்கள் அச்சிடப்பட்டு, முரசொலி அலுவலகம் எடுத்துவரப்பட்டன. பின் அங்கிருந்து அனைத்து இடங்களுக்கும் அனுப்பப்பட்டன. இதனால் நாளிதழ்கள் சரியான நேரத்தில் வெளிவருவதில் பல சிரமங்கள் இருந்தன. இதையெல்லாம் கவனத்தில் கொண்டு பெரியண்ணன், அக்காலத் தொழில் நுட்பத்தை நன்கு ஆராய்ந்து நாளிதழ்கள் அச்சிடுவதற்குத் தேவையான சிறந்த அச்சு இயந்திரங்களைக் குறைந்த விலையில் வாங்கினார். இயந்திரங்களின் இயங்குமுறைகள் குறித்தும் ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

முரசொலியின் கணக்கு வழக்குகள் அனைத்தையும் பெரியண்ணன் கவனித்தார். இதற்கு ‘முரசொலி’ மாணிக்கம் அவர்களும் துணையாக இருந்துள்ளார். பணத் தேவை என்றால் கலைஞராக இருந்தாலும், முரசொலி மாறனாக இருந்தாலும், பெரியண்ணன் கணக்கிட்டுப் பணச் சீட்டில் (Voucher) கையெழுத்து வாங்கிக்கொண்டுதான் பணம் தருவார். சில சமயங்களில் பணம்

தராமல் மறுத்ததும் உண்டு. பலமுறை விளையாட்டாக கலைஞர் மு. கருணாநிதி முரசொலி மாறனிடம் 'நான் கேட்டும் பணம் தரமாட்டேன் என்கிறார் பெரியண்ணன். என்ன செய்வது?' என்று சொல்லியது உண்டு.

**வீட்டிற்கு வந்த கலைஞர்**

முரசொலியின் வெற்றிக்காகத் தினமும் கலைஞர் மு. கருணாநிதியுடன் பெரியண்ணன் கலந்துரையாடி அயராது உழைத்துக் கொண்டிருந்த காலம் அது.

ஒருமுறை காலையில் கலைஞர் பெரியண்ணன் வீட்டிற்குத் தொலைபேசியில் அழைத்திருக்கிறார். அவர் மகள் பூங்கோதை அழைப்பை எடுத்தார். பூங்கோதை கலைஞரிடம் கோபமாக, 'என்னது தினமும் போன் செய்துகொண்டே இருக்கிறீர்கள். வீட்டுக்கு நேரா வந்து பேச வேண்டியது தானே' என்பது போல் கலைஞரிடம் ஏதோ சொல்ல, கலைஞரோ போனை வைத்துவிட்டார். அப்போது வீட்டில் இருந்த பெரியண்ணனுக்கு இந்த நிகழ்வு தெரியாது. சிறிது நேரத்தில் கலைஞரின் கார் சென்னை கோட்ஸ் ரோட்டில் இருந்த பெரியண்ணன் வீட்டிற்கு வந்தது. பெரியண்ணனுக்கு ஒன்றுமே புரியவில்லை. பின்னர்தான் நடந்தது என்ன என்பது தெரிய வந்தது. அதற்குப் பின் கலைஞரும் அலுவலக வேலைகள் குறித்து உரையாடிச் சென்றார்.

இது ஒருவகையில் கலைஞரின் நிர்வாகத் திறனையும் காட்டுகிறது. கலைஞரின் அயராத உழைப்பு பற்றி நாம் அறிவோம். அவரின் சாமர்த்தியத்திற்கும் மக்களைக் கவரும் திறனுக்கும் இந்நிகழ்வு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

பெரியண்ணன், கலைஞர் மு. கருணாநிதி தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோது முரசொலியில் இருந்த நாட்களை விட அவர் பதவியில் இல்லாதபோது உடன் இருந்த நாட்களே அதிகம். முடியும் என்றால் முடியும். இல்லை என்றால் இல்லை என்பதில் உறுதியாக இருந்தவர் பெரியண்ணன், அது கலைஞராக இருந்தாலும் சரி.

முரசொலி மாறன், செல்வம் மற்றும் தயாளு அம்மாள், செல்வி என்று கலைஞர் குடும்பத்தைச் சேர்ந்த பலரும் பெரியண்ணன் மீது நல்ல மரியாதை வைத்திருந்தனர். 'கலைஞர், பெரியண்ணனின் உழைப்பை மனக்கண்களால் பார்த்து அகமகிழ்வார்' என்று

கவிஞர் ஆறு. அழகப்பன் 'நமது செட்டிநாடு' என்னும் இதழில் குறிப்பிடுகிறார்.

பெரியண்ணன் முரசொலி அலுவலகத்தில் வேலை செய்யும் போது அரசியல் தலைவர்கள் பலருடன் நெருக்கம் இருந்தும் அவர் ஒருவித தொலைவிலேயே இருந்தார்.

**அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க**
**இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்**

(அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர், அவரை மிக நீங்காமலும், மிக அணுகாமலும் நெருப்பில் குளிர் காய்கின்றவர் போல இருக்க வேண்டும். — மு. வரதராசன் உரை) என்ற திருக்குறளுக்கு ஏற்ப பெரியண்ணன் வாழ்ந்தார்.

**எமர்ஜென்சி காலகட்டம்**

1975ஆம் ஆண்டு இந்திரா காந்தி பிரதமராக இருந்த நேரத்தில் நாட்டில் நெருக்கடி நிலை சட்டம் கொண்டுவரப்பட்டது. 21 மாத காலம் நீடித்த இச்சட்டத்தை எதிர்த்து நாடு முழுவதும் போராட்டம் வெடித்தது. அனைத்து இடங்களிலும் சோதனை, கைது என்ற நிலை இருந்தது.

இக்காலக்கட்டத்தில் பெரியண்ணன் முரசொலியை நிர்வகித்து வந்த காரணத்தால் அவருடைய கோட்ஸ் ரோடு வீட்டிலும் சோதனை மேற்கொள்ள வந்தனர். வீட்டைச் சோதனையிட்டு கைது செய்வதாகத் திட்டம். வீடு முழுவதும் சோதனையிட்ட பிறகும் அவர்கள் தேடிய எதுவும் கிடைக்கவில்லை. நண்பர்கள் கொடுத்த வெளிநாட்டுப் பணம் ஒரு பத்து டாலர் வரை இருந்தது. அதனைப் பறிமுதல் செய்து அதற்கு அபராதமும் விதித்துவிட்டுச் சென்றனர்.

இதனைத் தொடர்ந்து 'முரசொலி' அலுவலகத்திலும் சோதனை நடைபெற்றது. அந்த நேரத்தில் அலுவலகத்தில் கலைஞர் மு. கருணாநிதியுடன் பெரியண்ணன் எத்தனை உறுதியுடன் துணையாக இருந்தார் என்பதை 11.08.1985 தேதியில் நடைபெற்ற அவரின் மணிவிழாவில் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து அறியமுடிகிறது.



அற்ற குளத்து அறுநீர்ப் பறவையாக இன்றி
கொட்டியும் ஆம்பலுமாக ஒட்டிஉறவாடிய
வைரநெஞ்சினர் பெரியண்ணன்!
'முரசொலி' பெரியண்ணன் மணி விழாவில்
தலைவர் கலைஞர் புகழாரம்!

மீனாட்சி, பெரியண்ணன், கலைஞர் கருணாநிதி, பெரியண்ணனின் மாப்பிள்ளை
'ஆணழகன்' சிதம்பரம், முரசொலி மாறன்

**முரசொலி பத்திரிகை செய்தி** - *சென்னை, ஆக. 11 1985*

**கலைஞர் மு. கருணாநிதியின் உரை:**

*நம்முடைய பெரியண்ணன் அவர்கள் தன்னுடைய அறுபதாம் ஆண்டு விழாவினைக் கொண்டாடுகின்ற நேரத்தில் தம்பி மாறன் குறிப்பிட்டதைப்போல் எங்களுடைய குடும்பத்தில் நடைபெறுகின்ற ஒரு நிகழ்ச்சியில் எந்த உணர்வினை நாங்கள் பெறுவோமோ அதே உணர்வைத் தான் இந்த நிகழ்ச்சியிலும் பெறுகிறோம்.*

*குடும்ப நிகழ்ச்சி என்பதை ஏன் வலியுறுத்திச் சொல்கிறேனென்றால், குடும்பத்தில் உள்ளவர்கள் தான், உண்மையிலேயே குடும்ப பாசம் உள்ளவர்கள்தான் குடும்பத்தில் துன்பத் துயரங்கள் வருகின்ற நேரத்திலும் நம்மைவிட்டு அகலாமல் இருப்பார்கள். அப்படிப்பட்டவகையில் எனக்கும் என்னைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கின்ற கழகத்திற்கும், எனக்கும் என்னால் நிறுவப்பட்ட முரசொலிக்கும் சோதனைகள் வந்த நேரத்தில் எங்களை விட்டு அகலாமல் அருகேயிருந்த உறுதி பெரியண்ணன் அவர்களுக்கு உண்டு.*

*காரோட்டிகள் எல்லாம் கூட ஓடி விட்டார்கள். மிசா அறிமுகம் செய்யப்பட்டு, ஆட்சி கலைக்கப்பட்ட மறுநாளே ஒரு காரோட்டி உடல்நலம் சரியில்லை என்று கூறி நின்றுவிட்டார். இன்னொரு காரோட்டியும் வேலையிலிருந்து நின்று விட்டார். அதுவரை என்னைக் கண்டதும் கட்டித் தழுவி அரவணைத்துக் கொண்டவர்கள் புன்னகை காட்டி வரவேற்றவர்கள் என்னிடம் அன்பு செலுத்துவதைப் போல நடித்தவர்கள் பாராட்டிப் போற்றியவர்கள், பதவி பெற்றவர்கள் எல்லாம் கூட என்னவானார்கள் என்று தெரியாத நிலையில்; கழகப் பாசறைகளில் ஒன்றான முரசொலியின் பொறுப்பைத் தொடர்ந்து ஏற்றுக் கொண்டு முரசொலிக்கு வந்த சோதனைகளுக்கெல்லாம் ஈடுகொடுத்தவர் பெரியண்ணன் அவர்கள்.*

*ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல வேண்டுமேயானால் முரசொலி மாறன் சிறைச்சாலையில் ஓராண்டு காலம் மிசா கைதியாக! என் மகன் ஸ்டாலின் சிறைச்சாலையில் ஓராண்டு காலம் காலம் மிசா கைதியாக! கழகத்தின் தளகர்த்தர்கள், மாவட்டத்தின் தளபதிகள், என் அன்பு உடன் பிறப்புக்கள் ஐநூறுக்கு மேற்பட்டவர்கள் மிசா கைதிகளாக இருந்தார்கள். அப்போது ஒரு நாள் முரசொலி அலுவலகத்தில் அமர்ந்து நான் எழுதிக் கொண்டிருக்கிறேன்.*

*திடீரென்று பூட்ஸ் கால்களின் பயங்கரமான சத்தம் ஜீப்*

கார்கள் முரசொலி சுற்றடைப்பிற்குள் வந்து நிறுத்தப்பட்ட ஒலிகள் - நூற்றுக்கும் மேற்பட்ட அதிகாரிகள் படபடவென்று முரசொலி அலுவலகத்திற்குள் நுழைகிறார்கள். நான் எழுதிக்கொண்டிருந்த மாடி அறைக்குள் நுழைந்தபோது என்ன வேண்டுமென்று கேட்டேன், சோதனை நடத்தப் போகிறோம் என்று சொன்னார்கள். உங்களுக்கு ஒன்றும் தொல்லையில்லையென்றால் நீங்கள் எழுதலாம் என்றார்கள். என்னுடைய எழுத்தை உங்களுடைய எந்த நடவடிக்கையும் பாதிக்காது என்று கூறிவிட்டு நான் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தேன்.

முதல் நாள் காலையில் ஆரம்பித்த 'ரெய்டு' மறுநாள் விடியற்காலை நான்கு மணி வரையில் நடைபெற்றது. அது வரையில் ஆடாமல் அசையாமல், எந்த ஒரு முகவாட்டத்தையும் காட்டாமல் அழுத்தமான உள்ளத்தோடு எனக்குத் துணையாக முரசொலி அலுவலகத்தில் இருந்தவர் பெரியண்ணன். அதை என்னுடைய வாழ்நாள் வரை மறக்க முடியாது.

அற்றகுளத்து அறுநீர்ப் பறவைபோல் எத்தனையோ பேர் பறந்து விட்டபோது, கொட்டியும் ஆம்பலும் போல் என்னிடம் உறவு கொண்டிருந்தவர்களில் ஒருவர் பெரியண்ணன் என்பதை எண்ணி யெண்ணி நான் மகிழ்ச்சியடைகின்றேன். அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவினை இப்போது தான் மணிவிழா என்று அழைக்கிறோம். முன்பெல்லாம் இதற்குச் சஷ்டியப்த பூர்த்தி என்றுதான் பெயர். சஷ்டி என்றால் ஆறு; அப்தம் என்றால் பத்து; பூர்த்தி என்றால் நிறைவு; அதாவது அறுபது ஆண்டுகள் நிறைவுறுகின்ற விழா. தமிழகத்தில் நடைபெறும் இந்த விழாவைச் சஷ்டியப்த பூர்த்தி என்றுதான் அழைத்தார்கள்.

ஏன் இதனைக் கொண்டாடுகிறோமென்றால் ஒரு மனிதன் பிறந்து, மறுபடியும் தமிழ் வருடம் என்று சொல்லப்படுகிற ஆண்டுக் கணக்குப்படி, தான் பிறந்த ஆண்டில் அடியெடுத்துவைக்கின்ற நேரத்தில் அதை மகிழ்ச்சியாகக் கொண்டாடுவதற்காகத் தான் அதனை நடத்துகிறார்கள். ஒரு காலத்தில் அறுபதாண்டுகள் வாழ்வது என்பது பெரிய அதிசயமாக இருந்தது. இந்தக்காலத்தில் சராசரி வயது அதிகமாகிவிட்ட காரணத்தால் அறுபது வயது என்பது முதுமையான பருவமல்ல. நானே கூட இளைஞன்தான்; அதைப்போலப் பெரியண்ணனும் இளைஞர் தான். இதனை நான் பெருமைக்காகச் சொல்லவில்லை.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கூடத் தந்தை பெரியாரைப் பற்றிக் கூறும்போது "வயதில் அறிவில் முதியார், என்றும் வாய்மைப் போருக்கு இளையார்" என்றுதான் தொண்ணூறு

வயது நிரம்பிய பெரியார் பற்றிப் பாடினார்! தந்தை பெரியார் வயதில், அறிவில் முதியவரே தவிர, நாட்டில் வாய்மைப் போருக்கு என்றும் இளையவர் தான் என்று குறிப்பிட்டார்.

தமிழகத்தின் உரிமைகளை நிலைநாட்ட, தமிழ்ச் சமுதாயம் விழிப்புற பெரியண்ணன் அவர்கள் இப்போது ஓரளவு தளர்ச்சியும், முதிர்ச்சியும் பெற்றிருந்தாலும் கூட இந்த விழா அவரை மீண்டும் இளைஞராக மாற்றும் "டானிக்" என்று கூறி அவர் வாழ்க வாழ்க என்று வாழ்த்துகின்றேன்.

இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

**பணி ஓய்வு**

பெரியண்ணனின் மகன்கள் அழகப்பன் மற்றும் ரவி அமெரிக்கா சென்று படித்து தலையெடுத்த காரணத்தினாலும், முரசொலியில் ஏற்பட்ட தலைமுறை மாற்றத்தினாலும் இதுவே ஓய்வு பெறச் சரியான நேரம் என்று கருதினார் பெரியண்ணன். ஓய்வு பெற்றபோது, கணக்கு வழக்குகளைச் சரி பார்த்து அவருக்குச் சேர வேண்டிய பணம் மற்றும் வருங்கால வைப்பு நிதி முதலியவற்றை அவரே எடுத்துக்கொண்டார். 'இவ்வாறு செய்திருக்கிறேன்' என்று கலைஞரிடம் சொல்லிவிட்டு முரசொலியிலிருந்து 1986ஆம் ஆண்டு விடைபெற்றார்.

இதுபோல் உரிமையுடன் பணம் முதலியவற்றை எடுக்க பெரியண்ணனின் நேர்மை ஒரு முக்கிய காரணம்.

பெரியண்ணனனின் பிள்ளைகளுடன் பேசும்போது முரசொலி நாட்களை மகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தனர். பணம் பெரிதாக இல்லா விட்டாலும், ஒரு நிலையான நிர்வகிக்கும் பொறுப்பு அவருக்கு இருந்தது. முரசொலியில் அந்தப் பொறுப்பை பெரியண்ணன் மிகத் திறம்படப் பயன்படுத்திப் பல நல்ல மாற்றங்களைச் செய்தார்.

# 12. தலையெடுத்த அழகப்பன்

பெரியண்ணன் மீனாட்சி வாழ்க்கையின் ஒரு திருப்புமுனை என்றால் அவர்களின் மகன் அழகப்பன் சென்னை ஐ.ஐ.டியில் சேர்ந்து படித்தது என்று சொல்லலாம். இவர்களின் மகன்கள் அழகப்பன் மற்றும் ரவி இருவரும் சென்னை புரசைவாக்கத்தில் உள்ள எம்.சி.டி.எம் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தனர். 1975ஆம் ஆண்டு அழகப்பன் எஸ்.எஸ்.எல்.சி தேர்வில் 600க்கு 522 மதிப்பெண்கள் எடுத்து மாநில அளவில் 27வது இடத்தைப் பிடித்தார். பெரியண்ணன் தன் மகன் அழகப்பனைச் சென்னை விவேகானந்தா கல்லூரிக்கு அழைத்துச் சென்று அங்குக் கல்லூரியின் முதல்வர் முனைவர் என். வெங்கடசுப்ரமணியன் அவர்களை நேரில் சந்தித்து பி.யு.சியில் சேர்த்தார்.

அப்போது பெரியண்ணனின் வீடு சென்னை தி.நகரில் உள்ள கோட்ஸ் ரோட்டில் இருந்தது. அழகப்பன், வீட்டிலிருந்து கல்லூரிக்கு நண்பர்கள் ஜெ.வி.எஸ். ஷர்மா மற்றும் சோமசேகர் ஆகியோருடன் தினமும் சைக்கிளில் செல்வார். திறமையுள்ள மாணவர்களுடன் பழகும்போது நம் திறமையும் வாய்ப்புகளும் பெருகும் என்பதற்கேற்ப, பயணத்தின் போது நடந்த உரையாடல்களில் ஐ.ஐ.டி பற்றியும் அதில் சேர எழுத வேண்டிய ஜெ.இ.இ. தேர்வு பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறார்.

அவரின் நண்பர்கள் ஐ.ஐ.டியில் சேர ஜெ.இ.இ தேர்வுக்குப் ‘பிரில்லியன்ட் டுடோரியல்’ பயிற்சி வகுப்பில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தனர். இந்தப் பயிற்சி வகுப்பிற்கு அப்போதைய கட்டணம் 300 ரூபாய். குடும்பச் சூழல் கருதி அழகப்பனுக்கு தந்தையிடம் பணம் கேட்க தயக்கமாக இருந்தது. ஆனாலும் இந்த வாய்ப்பினைத் தவற விடக்கூடாது என்று எண்ணி தந்தையிடம் பணம் வாங்கிப் பயிற்சி வகுப்பில் சேர்ந்தார். அழகப்பன், அவரின் உடன் பிறந்தோர் போலவே, குடும்பம் உழைத்து சம்பாதித்த பணத்தைப் பக்குவமாய் செலவு செய்து எந்த ஒரு பயிற்சி வகுப்பையும் தவற விடாமல், கிடைத்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொண்டார்.

ஜெ.இ.இ. தேர்வில் அகில இந்திய அளவில் அழகப்பன் 586வது இடத்தைப் பிடித்தார். பெரியண்ணன் மற்றும் அவரின் மருமகன் முத்துக்குமரன், சென்னை ஐ.ஐ.டியில் 19.06.1976 அன்று நடந்த நேர்முகத் தேர்வுக்கு அழகப்பனை அழைத்துச் சென்றனர். அவர் தேர்வில் எடுத்த மதிப்பெண்களுக்கு ஏற்ப ஐ.ஐ.டி கரக்பூரில் மின்னியல் பொறியியல் பட்டப் படிப்பும் (Electrical Engineering), ஐ.ஐ.டி சென்னையில் வேதிப் பொறியியல் (Chemical Engineer ing) பட்டப் படிப்பும் கிடைத்தன. அப்போது கரக்பூரில் நக்சலைட் பிரச்சினைகள் இருந்தன. அழகப்பனுக்கு வேதியியல் பிடிக்கும். பெரியண்ணன் மற்றும் முத்துக்குமரனுடன் கலந்துரையாடி அழகப்பன் ஐ.ஐ.டி சென்னையில் வேதிப் பொறியியல் (கெமிக்கல் இன்ஜினியரிங்) பட்டப் படிப்பைத் தேர்வு செய்தார். அழகப்பன் படித்த காலத்தில் சென்னை ஐ.ஐ.டியில் முதல் செமஸ்டர் கட்டணம் 359 ரூபாய் 50 பைசா.

**பூங்கோதை திருமணம்**

அழகப்பன் ஐ.ஐ.டியில் சேர்ந்து படித்துக் கொண்டிருக்கையில், பெரியண்ணன் அவரின் மூன்றாவது மகள் பூங்கோதைக்கு மாப்பிள்ளை பார்க்க, சிதம்பரம் என்பவரைச் சந்தித்துப் பேசினார். பெரியண்ணன் அவரின் வேலை குறித்துச் சில கேள்விகள் கேட்டார். சிதம்பரத்திற்கு இவர் தன் மகளுக்கு மாப்பிள்ளை



பூங்கோதை திருமணத்தில் கலைஞர் மு. கருணாநிதி

பார்க்கத்தான் கேள்விகள் கேட்கிறார் என்று தெரியாது. இவ்வாறு இவர்கள் உரையாடல் தொடர்ந்தது. பிறகு பூங்கோதையிடம் இவர் தான் மாப்பிள்ளை என்று பெரியண்ணன் சொன்னார். 1978ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8ஆம் தேதி கானாடுகாத்தானைச் சேர்ந்த அருணாசலம் – தெய்வானை அவர்களின் மகன் சிதம்பரத்திற்கும், பூங்கோதைக்கும் சென்னை ஆழ்வார்ப்பேட்டையிலுள்ள எத்திராஜ் திருமண மண்டபத்தில் திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அப்போது பிரபலமாக இருந்த 'மவுண்ட் மணி ஐயரின்' உணவு இவர்களின் திருமணத்தில் பரிமாறப்பட்டது. பெரியண்ணன் அவர்கள் முரசொலியை நிர்வகிக்க ஆரம்பித்த பிறகு வீட்டில் நடைபெற்ற முதல் திருமணம் இதுதான். கலைஞர் மு. கருணாநிதி, முரசொலிமாறன் மற்றும் சிதம்பரத்திற்குச் சென்னைத் துறைமுகத்தில் வேலையளித்து சென்னைத் துறைமுகத்தை நிர்வகித்த எஸ். பி. ஆம்பிரோஸ் (S.P. Ambrose) உள்ளிட்ட பலரும் திருமணத்திற்கு வந்திருத்தனர். பூங்கோதைக்குச் சீதனமாக 20,000 ரூபாய் கொடுக்கப்பட்டது. திருமணத்தில் மாப்பிள்ளைக்கு வைர மோதிரம் ஒன்று போடுவதாகச் சொல்லப்பட்டாலும் அதை பெரியண்ணனால் அப்போது செய்ய இயலவில்லை. திருமணமான சில மாதங்கள் கழித்து பணத்தைத் திரட்டி மாப்பிள்ளை சிதம்பரத்திற்கு அந்த மோதிரத்தைக் கொடுத்தார் பெரியண்ணன். பூங்கோதை திருமணத்திற்குப் பின் பெரியண்ணன் - மீனாட்சி குடும்பம் தி.நகர் கோட்ஸ் ரோட் வீட்டிலிருந்து மேற்கு கே.கே.நகர் முனுசாமி நாயுடு சாலையில் உள்ள ஒரு வாடகை வீட்டிற்கு இடம்பெயர்ந்தது.

**அழகப்பனின் அமெரிக்க பயணம்**

ஐ.ஐ.டி நண்பர்களின் நட்பு வட்டாரம் அழகப்பனை அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் சென்றது. அப்போது அங்குப் படிக்கும் மாணவர்கள் பலர் அமெரிக்காவில் மேற்படிப்பு படிக்க முயற்சிகள் மேற்கொண்டனர். ஐந்து ஆண்டுகள் ஐ.ஐ.டி மெட்ராஸில் படித்து முடித்த பின்னர் அழகப்பனுக்கு இந்தியாவில் வேலை கிடைத்தது. அவருக்குத் தொழில் செய்யவும் ஆர்வம் இருந்தது.

இது குறித்து ஆலோசனைகள் பெற சிலரிடம் பெரியண்ணன் தன் மகனை அழைத்துச் சென்றார்.

அமெரிக்காவில் உள்ள யுனிவர்சிட்டி ஆஃப் ஹியூஸ்டன், அழகப்பனின் வேதிப்பொறியியல் மேற்படிப்புக்கான முழுத் தொகையையும் ஏற்று அதற்கு மேல் ஊக்கத் தொகையையும் (Sti pend) வழங்கினர். 1981ல் ஓர் அமெரிக்க டாலர் இந்திய மதிப்பின்படி



அழகப்பனின் அமெரிக்கப் பயணம்

*8.66 ரூபாய். இந்த ஊக்கத் தொகை இந்தியாவில் வேலை பார்த்து சம்பாதிப்பதைவிட அதிகமாக இருந்தது. இதனால் மேற்படிப்பு படிக்க 15.08.1981 அன்று அமெரிக்காவிற்குப் பயணப்பட்டார் அழகப்பன். இதுவே பெரியண்ணன் மீனாட்சி குடும்பத்தின் முதல் அமெரிக்க பயணம். அழகப்பன் அமெரிக்கா சென்றது, பின்னாட்களில் குடும்பத்தில் பலர் அமெரிக்கா செல்ல மிகப்பெரிய அடித்தளமாக அமைந்தது.*

**சுலோச்சனா திருமணம்**

*1982ஆம் ஆண்டு கோனாப்பட்டைச் சேர்ந்த சுவாமிநாதன் பழனியப்பன் - ஜானகி அவர்களின் மகனான முத்துவிற்கும்*



சுலோசனா திருமணத்தில் கலைஞர் மு. கருணாநிதி

பெரியண்ணன் - மீனாட்சி அவர்களின் நான்காவது மகளான சுலோச்சனாவிற்கும் திருமணம் மே மாதம் 14ஆம் தேதி, பூங்கோதைக்குத் திருமணம் நடந்த அதே எத்திராஜ் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கலைஞர் மு. கருணாநிதி, தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் முரசொலி மாறன் குடும்பத்தினர் என்று பலரும் வந்திருந்தனர். 'மவுண்ட் மணி ஐயரின்' உணவு இவர்களின் திருமணத்திலும் பரிமாறப்பட்டது.

அழகப்பன் அவர்களால் திருமணத்திற்கு வர இயலாததால் தன் நண்பர் சந்திரசேகர் மூலமாக 'ரகோல்ட் அடுப்பு' (Racold Stove) ஒன்றினை மணமக்களுக்குப் பரிசாகக் கொடுத்து அனுப்பினார். பெரியண்ணனின் நண்பரான நசீப் என்பவர் திருமணச் செலவிற்காக 30,000 ரூபாய் கடன் கொடுத்து உதவினார். இந்த 30,000 ரூபாய் மாப்பிள்ளை வீட்டாருக்குச் சீதனமாகக் கொடுக்கப்பட்டது. பின்னர் இந்தக் கடனையும் பெரியண்ணன் சரியாக அடைத்துவிட்டார்.

**வள்ளிக்கண்ணு திருமணம்**

1984ஆம் ஆண்டு பெரியண்ணன் – மீனாட்சி அவர்களின் ஐந்தாவது மகள் வள்ளிக்கண்ணுக்கும் நேமத்தான்பட்டியைச் சேர்ந்த பழனியப்பன் - முத்தாயி அவர்களின் மகனான சீதாராமனுக்கும் டிசம்பர் மாதம் 3ஆம் தேதி கவிஞர் கண்ணதாசனின் கவிதா திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. அழகப்பனால்



வள்ளிக்கண்ணு திருமணத்தில் கலைஞர் மு. கருணாநிதி

திருமணத்திற்கு வர இயலாத காரணத்தால், இவர்களின் திருமணம் காணொளியாகப் பதிவு செய்யப்பட்டது.

இவர்களின் திருமணத்திற்கு அழகப்பன், பல்கலைக் கழகத்தில் தனக்கு வந்த ஊக்கத் தொகையைச் சேர்த்து வைத்து தன் தந்தை பெரியண்ணனுக்கு அனுப்பினார். வள்ளிக்கண்ணுக்குச் சீதனமாக 40,000 ரூபாய் கொடுக்கப்பட்டது. மாப்பிள்ளை சீதாராமனின் தந்தை பழனியப்பன் எம்.ஜி.ஆர், சிவாஜி உட்பட பலரை வைத்து பல திரைப்படங்களைத் தயாரித்த பிரபல திரைப்படத் தயாரிப்பாளராக இருந்த காரணத்தினால் பல திரைக் கலைஞர்களும் இவர்களின் திருமணத்திற்கு வந்தனர். கலைஞர் மு. கருணாநிதியும், முரசொலியைச் சேர்ந்த பலரும் இவர்களின் திருமணத்தில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர். 'சொந்த வீடு வைத்திருப்போருக்கு ஒரு வீடு, வாடகை வீட்டில் இருப்போருக்குப் பல வீடுகள்' என்று பழமொழிக்கு ஏற்ப பெரியண்ணன் மீனாட்சி குடும்பத்தினர் வாடகை வீடுகளில்தான் வசித்து வந்தனர். வள்ளிக்கண்ணின் திருமணத்திற்குப் பின் கே.கே நகர் முனுசாமி நாயுடு சாலையில் வசித்து வந்த வீட்டிலிருந்து கலிங்கா காலனியில் உள்ள ஒரு வீட்டிற்கு மாறினர்.

**ரவியின் அமெரிக்க பயணம்**

பெரியண்ணனின் இளைய மகன் ரவி சென்னை பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலைப் படித்து முடித்த பின்னர் 'யுனிவர்சிட்டி ஆஃப் அலபாமா' பர்மிங்காமில் எம்.பி.ஏ. (M.B.A) படிப்பதற்கான பாதைகளையும் வாய்ப்புகளையும் அவரின் அண்ணன் அழகப்பன்




ரவியின் அமெரிக்க பயணம்

வகுத்துக் கொடுத்தார்.

ரவியும் அழகப்பனைப் பின் தொடர்ந்து 1986ல் அமெரிக்கா சென்றார். ரவி அமெரிக்கா செல்ல பெரியண்ணனின் மருமகன் சுப்பையாவும் (தமிழரசியின் கணவர்) பல உதவிகளைச் செய்தார். முதல்முறை ரவி அமெரிக்கா சென்றபோது அவரை ஹியூஸ்டனிலிருந்து பர்மிங்காம் வரை (கிட்டத்தட்ட 650 மைல்கள்) தனது காரில் கூட்டிச் சென்று கல்லூரியில் சேர்த்து விட்டார் அழகப்பன். அதன் பின் ரவி தன் உழைப்பால் வளர்ச்சிகள் பல கண்டார்.

**விசாலாட்சி திருமணம்**

1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1ஆம் தேதி கல்லலைச் சேர்ந்த மீனாட்சி சுந்தரம் - கல்யாணி ஆகியோரது மகன் சொக்கலிங்கத்திற்கும் பெரியண்ணனின் கடைசி மகளான விசாலாட்சிக்கும் திருமணம் ஆத்தங்குடி பெரி.அரு வீதியில் உள்ள பெரியண்ணனின் வீட்டில் நடந்தது. தமிழரசியின் திருமணத்திற்குப் பிறகு ஊரில் நடந்த ஒரே திருமணம் விசாலாட்சியின் திருமணம் தான். அழகப்பன், அமெரிக்காவில் சேர்த்து வைந்திருந்த ஒய்வு ஊதிய சேமிப்பை ரத்து செய்து திருமணத்திற்காகப் பணம் அனுப்பினார். இந்தப் பணமும், பெரியண்ணன் முரசொலியில் ஓய்வு பெற்றதால், அவருக்கு வந்த ஓய்வூதியப் பணமும் (Provident Fund) திருமணச் செலவுகளுக்குப் பெரிதும் உதவின. விசாலாட்சிக்குச் சீதனமாக 70,000 ரூபாய் கொடுக்கப்பட்டது. அழகப்பன், ரவி இருவரும் அமெரிக்காவில் இருந்து திருமணத்திற்காக வந்திருந்தனர். விசாலாட்சி - சொக்கலிங்கம்



விசாலாட்சி திருமணம்

திருமணம் ஆத்தங்குடியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இவ்வாறாக அழகப்பன் தலையெடுத்து, ரவியை அமெரிக்கா அழைத்துச் சென்று, தன் தந்தை பெரியண்ணனுக்குத் துணை நின்று, குடும்பத்தின் பொருளாதாரச் சூழலில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தினார். பெரியண்ணன் - மீனாட்சிக்கு இது பெரும் பலமாக இருந்தது.

# 13. ஓய்வுக் காலம்

பெரியண்ணன் மீனாட்சியின் பின் பகுதி வாழ்க்கை, முன் பகுதியை விட மிகச் சிறப்பாக இருந்தது.

அழகப்பன் அவர்கள் படித்து அமெரிக்காவில் நல்ல நிலையில் இருந்ததால் உறவுகளிலும், பெரிய இடங்களிருந்தும் சில சம்மந்தங்கள் வந்தன. ஆனால் பெரியண்ணன் மீனாட்சி இதைத் தவிர்த்து விட்டனர். 1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் தேதி பள்ளத்தூரைச் சேர்ந்த அருணாச்சலம் - மீனாட்சி தம்பதியினரின் மகள் கீதாவிற்கும், அழகப்பனுக்கும் திருமணம், அன்று சென்னையின் பெரிய திருமண மண்டபமாக இருந்த வடபழனியில் உள்ள விஜய சேஷ/ராணி மகாலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. சீதனத் தொகை, மாமியார் பணம் என்று பெரியண்ணன் மீனாட்சி எதையும் வாங்க மறுத்துவிட்டனர்.



அழகப்பன்– கீதா திருமணம்

இதுபோல் 1989ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4ஆம் தேதி பெரியண்ணன் - மீனாட்சி அவர்களின் கடைசி மகனான ரவிக்கும், தேவகோட்டையைச் சேர்ந்த கணேசன் - வசந்தா அவர்களது மகள் விஜிக்கும் திருமணம், அதே விஜய சேஷ/ ராணி மகால் மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அழகப்பன் - கீதா திருமணத்தின் போது எப்படிக் கொடுக்கல் வாங்கல் இல்லையோ அதேபோல் ரவி - விஜி திருமணத்திலும் கொடுக்கல் வாங்கல் எதுவுமில்லை.



*ரவி விஜி திருமணம்*

*இவர்களது திருமணம் முடிந்தவுடன் 6 மகள்கள், 6 மாப்பிள்ளைகள், இரண்டு மகன்கள், 2 மருமகள்கள், அப்போது இருந்த 11 பேரப்பிள்ளைகள் என்று குடும்பத்தினர் அனைவரும் கூடி, குழுப் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இதுபோல் மகள்கள் மாப்பிள்ளைகள், மகன்கள் மருமகள்கள் என்று அனைவரும் பட்டதாரிகளாக இருந்து நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகமாக அமைவது எளிதில் சாத்தியமில்லை. பெரியண்ணன் மீனாட்சிக்கு இது சாத்தியப்பட்டது.*

*அனைத்துப் பிள்ளைகளின் திருமணத்தையும் முடித்த பின்னர், அழகப்பன் வாங்கிய சென்னை சேத்துப்பட்டு வீட்டில்தான் பெரியண்ணன் - மீனாட்சி இருவரும் அவர்களது ஓய்வுக் காலத்தில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் பல உலக நாடுகளுக்குப் பயணித்ததும் இந்தக் காலகட்டத்தில்தான்.*



அழகப்பனின் திருமணத்திற்குப் பிறகு பெரியண்ணன் - மீனாட்சி சில மாத காலங்கள் அமெரிக்கா சென்று தன் மகன்கள் அழகப்பன் மற்றும் ரவி வீட்டில் தங்கினர். இதுவே அவர்களின் முதல் அமெரிக்கப் பயணம்.

அழகப்பனும் அவர் மனைவி கீதாவும் பெல்ஜியம் நாட்டில் சில காலம் வசித்து வந்தனர். அப்போது ஐரோப்பிய நாடுகளுக்கான பயணங்களை பெரியண்ணனும் மீனாட்சியும் மேற்கொண்டனர். பெரியண்ணன், அவரின் வாழ்க்கை அனுபவங்களைக் குறிப்புகளாக எழுதி வைக்கவில்லை. ஆனால் இந்த ஐரோப்பிய நாடுகளின் பயணத்தை, நாட்கள் வாரியாகக் குறிப்புகளாக எழுதி வைத்திருந்தார்.

பெரியண்ணன் - மீனாட்சி இருவரும் 25.04.1990 அன்று சென்னையில் இருந்து புறப்பட்டு பம்பாய் சென்று அங்கு ரவியின் மாமனார் வீட்டில் இரண்டு நாட்கள் தங்கினர். அங்கிருந்து பெல்ஜியம் சென்று ஒரு மாதக் காலம் அழகப்பன் – கீதா வீட்டிலும், பின்னர் அமெரிக்கா சென்று, அங்கு ஆறு வாரங்கள் ரவி - விஜி வீட்டிலும் தங்கினர். பின்னர் மறுபடியும் ஒரு மாதம் அழகப்பன் – கீதா வீட்டில் தங்கி, சென்னை திரும்பினர்.

அவர்கள் பெல்ஜியம் நாட்டின் நகரங்களான பிரசெல்சு (Brus sels), கெட் (Ghelt), ப்ரூஜஸ் (Bruges), ஸ்பா (Spa); இத்தாலி நாட்டின் நகரங்களான ரோம்(Rome), நாபொலி (Napoli), வெனிஸ் (Venice), மிலன் (Milan), வத்திக்கான் (Vatican City); ஜெர்மனி நாட்டின் நகரங்களான முனிச் (Munich), டசல்டார்ஃப் (Dusseldorf), கொலோன்

(Cologne), பிராங்பேர்ட் (Frankfurt); ஐக்கிய அமெரிக்க நாடுகளின் (U.S.A) நகரங்களான நியூயார்க் (New York), நாஷ்வில் (Nashville), அட்லாண்டா (Atlanta), அலபாமாவின் (Alabama) ஹன்ட்ஸ்வில் (Hunts ville), ஸ்காட்ஸ்போரோ (Scottsboro), ஆர்லாண்டோ (Orlando), எப்காட் (Epcot), ஃபிளாரிடா (Florida) மாகாணம்; பிரஞ்சு (France) நாட்டின் பாரிஸ் (Paris) நகரம்; சுவிட்சர்லாந்து (Switzerland) நாட்டின் நகரங்களான ஜெனிவா (Geneva), லோசான் (Lausanne); லக்சம்பர்க் (Luxembourg) எனும் சிறிய ஐரோப்பிய நாடு; நெதர்லாந்து (Nether land) நாட்டின் ஆம்ஸ்ட்ர்டாம் (Amsterdam) நகரம்; இங்கிலாந்து (En gland) நாட்டின் (U.K) லண்டன் (London) நகரம், பர்மிங்காம் (Bir mingham) நகரம் போன்ற பல இடங்களைச் சுற்றிப் பார்த்தனர்.

இந்தப் பயணங்களின் போது பெரியண்ணன், நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஜெர்மனியில் நடக்கும் ட்ரூபா90 அச்சு இயந்தரங்கள் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தில் (Drupa90 Print ing Machineries Fair) கலந்து கொண்டார். தன் வாழ்நாள் முழுவதும் அச்சுத் தொழிலில் ஈடுபட்டு இருந்த பெரியண்ணனுக்கு இது கனவு நனவானது போன்று இருந்தது.

பெல்ஜியத்தில் இருந்து பெரியண்ணன், மீனாட்சி இருவரும் நியூயார்க் நகரம் சென்றடைந்து, அங்குக் குடிவரவு (Immigration) முடித்த பின்னர், டென்னசியில் உள்ள நாஷ்வில் நகரம் சென்றனர். இது அவர்களின் இரண்டாவது அமெரிக்க பயணம். ரவி - விஜி இருவரும் பெரியண்ணன் - மீனாட்சியை நாஷ்வில் விமான நிலையத்தில் இருந்து அவர்கள் வசித்த பர்மிங்காம் நகரம் அழைத்துச் சென்றனர்.

அமெரிக்காவில் பெரியண்ணன் - மீனாட்சி இருவரும் ரவி - விஜியுடன் அவர்கள் வசித்து வந்த அலபாமாவில் இருந்து பிளாரிடா மாகாணத்திற்குக் காரில் சென்று ஆர்லாண்டோவில் (or lando) உள்ள டிஸ்னி வோல்டைச் சுற்றிப் பார்த்தது, அங்கு எ.எல். சோலையப்பன் அவர்களின் இல்லத்தில் தங்கியது, ஆத்தங்குடி இராம. இராமசாமி வீட்டிற்கு விருந்துக்குச் சென்றது குறித்துத் தம் பயணக் குறிப்பில் எழுதியிருக்கிறார். தன் பயண அனுபவத்தைச் சிங்கப்பூரில் இருக்கும் அவர் நண்பர் பி.அருணாச்சலம் அவர்களுக்கு 19.7.1990 அன்று தேதியிட்டு பிரசெல்சு, பெல்ஜியத்திலிருந்து கடிதமாகவும் எழுதியுள்ளார்.

பெரியண்ணன் தன் குறிப்புகளில் ராயல் கிரீன் ஹவுஸ் பிரசெல்சு (Brussels) சுற்றிப் பார்த்தது, பிரான்ஸில் உள்ள ஈபில் டவர் மற்றும் நெப்போலியனின் கல்லறையைப் பார்த்தது, ரோம் நகரம் சுற்றிப் பார்த்து அங்குத் தங்கியிருந்தது, ஜெர்மனியில் தான் தனியாக விடுதியில் தங்கியது, இரயில் பாஸ் எடுத்து ஐரோப்பிய பயணங்கள் மேற்கொண்டது, ஜெனிவா உள்ளிட்ட நகரங்களைப் பார்த்தது, ஓய்வு எடுத்தது என்பது பற்றி எல்லாம் எழுதியிருக்கிறார்.

லண்டன் நகரத்தில் பெரியண்ணன் – மீனாட்சி, முத்துராமன் சுப்பையா குடும்பத்தினருடன் தங்கி, அவர்கள் லண்டனைச் சுற்றிக் காட்டியது, லண்டனில் அவர்களின் வீடு, பக்கிங்காம் அரண்மனை, லண்டனில் இருந்த முருகன் கோவிலுக்குச் சென்று வந்தது பற்றியும் எழுதியிருக்கிறார்.

பெரியண்ணன், 12.08.1990 அன்று தன் 66வது பிறந்த நாளை கென்ட், பெல்ஜியத்தில் உள்ள தூய பாஃவ் பேராலயத்தில் (Saint Baaf's Cathedral, Ghent, Belgium) தன் மனைவி மீனாட்சி, மகன் அழகப்பன், மருமகள் கீதாவுடன் சென்று மெழுகுவர்த்திகள் ஏற்றிக் கொண்டாடினார்.

இந்த ஐரோப்பிய அமெரிக்க பயணங்களை முடித்துக் கொண்டு பெரியண்ணனனும் மீனாட்சியும் 14.08.1990 அன்று இந்தியா திரும்பினார்கள். 1990களில் உலக நாடுகளைச் சுற்றிப் பார்த்து மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். சொக்கலிங்கம்புதூரைச் சேர்ந்த அவர்களது உறவினர்களான அரு. முருகப்பன், நாச்சம்மை இருவருக்கும் சிங்கப்பூர், மலேசியா சுற்றிப் பார்க்க வேண்டும் என்று ஆசை வர, அவர்கள் முதலில் அணுகியது பெரியண்ணனைத்தான். அவர்களையும் இன்னும் சிலரையும் அழைத்துக்கொண்டு பெரியண்ணன் – மீனாட்சி சிங்கப்பூர் மலேசியா சுற்றுலாவும் மேற்கொண்டனர். பெரியண்ணன் - மீனாட்சி உலக நாடுகளுக்குப் பயணம் மேற் கொண்டு இந்தியா திரும்பியவுடன் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவரும் சென்னை சேத்துப்பட்டில் உள்ள அவர்களின் வீட்டில் கூடுவர். அவர்கள் கணக்கிட்டு வாங்கி வந்த சாக்லேட்களை அனைவருக்கும் சமமாய் பகிர்ந்து கொடுப்பர்.

பெரியண்ணனின் ஓய்வுக் காலம் அவருக்கு மட்டுமல்லாமல் அவரின் குடும்பத்திற்கும் மிக மகிழ்ச்சியாகவே இருந்தது. 8 பட்டதாரி

*பிள்ளைகள், சாமர்த்திய மாப்பிள்ளைகள், சமத்தான மருமகள்கள், பேரப்பிள்ளைகள் என்று ஒரு நிறைவான வாழ்வைப் பெரியண்ணன் மீனாட்சி வாழ்ந்து கொண்டிருந்தார்கள். 10.09.1943ல் தொடங்கிய அவர்களின் திருமண வாழ்க்கை 50 வருடங்களைக் கடந்தது. 10.09.1993 அன்று நிகழ்ந்த இவர்களின் 50வது திருமண நாள் கொண்டாட்டம், சென்னையின் அன்றைய பெரிய ஐந்து நட்சத்திர விடுதியான அடையாற்றில் உள்ள பார்க் ஷெரட்டன் அடையார் கேட் நட்சத்திர விடுதியில் (Park Sheraton, Adyar Gate) நடைபெற்றது.*

*பெரியண்ணனும் மீனாட்சியும் விருந்தினர்களை அழைப்பதில் அதிக கவனம் எடுத்துக் கொண்டார்கள். ஓர் அழகான வரையறை வைத்துக் கொண்டு விருந்தினர்களை அழைத்தனர். சம்மந்திகள் அனைவரையும் அழைத்தனர். சில சமயங்களில் சம்மந்தியின் வேறு பிள்ளைகள், சகோதர சகோதரிகள் என்று சிலர், கூடுதல் நெருக்கமாக இருக்கக் கூடும். அப்படி இருக்கையில் அவர்களை அழைக்கவில்லை. ஒருவரை அழைத்து, இன்னொருவரை அழைக்கவில்லை என்றால் சிலருக்கு மன சங்கடங்கள் வரும். சொந்தங்கள் அனைவரையும், வசதி படைத்தவரோ இல்லையோ அழைத்தனர்.*

*அழகப்பன் கீதா, ரவி விஜி ஆகியோர் அமெரிக்காவில் இருந்ததால் அவர்களால் வர இயலவில்லை. அவர்கள் இந்த நிகழ்வினைப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே காணொளி எடுத்தனர்.*

*பெரியண்ணன் மீனாட்சியின் 50வது திருமண நாள் நிகழ்ச்சியினை மருமகன் சீதாராமன் (வள்ளிக்கண்ணின் கணவர்) திறம்பட அழகாகத் தொகுத்து வழங்கினார். பெரியண்ணன்- மீனாட்சி இருவரையும் குடும்பத்தினர், நண்பர்கள் என்று பலர் வாழ்த்தினர்.*

*எப்போதும் அதிகம் பேசாதவர் பெரியண்ணன். இந்த 50வது திருமண நாள் நிகழ்ச்சியும் அதற்கு விதிவிலக்கு அல்ல. 'எங்கள் குடும்பத்தின் மீது பாசம் கொண்டு இங்கு வந்துள்ள அன்பு உள்ளங்கள் அனைவருக்கும், இங்கு வந்து எங்களை வாழ்த்தியமைக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்' என்று மட்டும் ஒரு நிமிடத்திற்கும் குறைவாகவே பேசி தனது நன்றியுரையை முடித்துக் கொண்டார். பெரியண்ணன் அவர்கள் பேசி முடித்தவுடன் அனைவருக்கும் இரவு விருந்து பரிமாறப்பட்டது.*

# 14. இறுதிப் பயணம்

பெரியண்ணன், மீனாட்சி தம்பதியினர் தங்கள் ஆறு பெண்களுக்கும் இரு மகன்களுக்கும் என்று எட்டுப் பிள்ளைகளுக்கும் சிறப்பான முறையில் திருமணம் முடித்து, ஆறு பெண்கள் வழியிலும் பேரன் பேத்திகள் பார்த்துவிட்டனர். மூத்த மகன் அழகப்பன் தன் மனைவி கீதாவுடன் அமெரிக்காவில் உள்ள நியூஜெர்சி மாகாணத்தில் வசித்து வந்தார். இளைய மகன் ரவி அவர் மனைவி விஜியுடன் பர்மிங்காம், அலபாமாவில் இருந்தார். தனது பணி ஓய்வுக்குப் பின் பெரியண்ணன் மற்றும் மீனாட்சி அமெரிக்கா, ஐரோப்பாவில் உள்ள பல நாடுகள், மற்றும் பல்வேறு உலக நாடுகளுக்குப் பயணம் சென்று வந்தனர். இக்காலகட்டத்தில் எங்குச் சென்றாலும் நல்ல மரியாதையுடன் வரவேற்கப்பட்டனர். பணத்திற்கு எவ்வித சிரமமும் இல்லை.

பெரியண்ணன் - மீனாட்சி தங்கள் மகன்கள் வழிப் பேரப் பிள்ளைகளை எதிர்நோக்கிக் காத்திருந்தனர். அழகப்பனின் மனைவி கீதா கருவுற்றிருந்தார். ஆனால் சில காரணங்களால் கரு சில மாதங்களிலேயே கலைந்துவிட்டது. கீதா அவர்கள் மீண்டும் கருவுற்று மூன்று மாதங்கள் ஆகியிருந்தன. பெரியண்ணனும் மீனாட்சியும் மீண்டும் மகிழ்ச்சியுடன் காத்திருந்தனர். பேரப்பிள்ளை பிறந்தவுடன் அமெரிக்கா செல்வதாகத் திட்டமிட்டிருந்தனர்.

1994ஆம் ஆண்டு ஜூலை மாதம், 22ஆம் தேதி பெரியண்ணன் தனக்குச் சற்று உடல் நலம் சரியில்லை என்று கூற, அவரின் மகள் பொன்னி மருத்துவர் என்பதால் உடனே சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

அந்த நேரத்தில் பெரியண்ணனின் மூத்த மகள் தமிழரசி மும்பையில் வைர வியாபாரம் பற்றிய படிப்பு படித்துக் கொண்டிருந்தார். இரண்டாம் மகள் மருத்துவர் பொன்னி, பெரியண்ணனை மருத்துவமனையில் கவனித்துக் கொண்டிருந்தார். மூன்றாவது மகள் பூங்கோதை தன் அலுவலகத்தில் வேலை செய்து

கொண்டிருந்தார். நான்காம் மகள் சுலோச்சனா பெரியண்ணன் – மீனாட்சி வீட்டின் அருகே வசித்து வந்ததினால் தன் அம்மா மீனாட்சியைக் கவனித்துக் கொண்டிருந்தார். ஐந்தாம் மகள் வள்ளிக்கண்ணு ஸ்ரீஹரிகோட்டாவில் வேலையில் இருந்தார். அடுத்த வாரம் பெரியண்ணனும், மீனாட்சியும் ஸ்ரீஹரிகோட்டாவிற்குச் செல்வதாக இருந்தனர். கடைசி மகள் விசாலாட்சி, ஒடிசாவில் வசித்து வந்தார்.

மகன்கள் அழகப்பனுக்கும், ரவிக்கும் பொன்னியின் கணவர் முத்துக்குமரன், அவர்களின் தந்தை பெரியண்ணன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட செய்தியைத் தொலைப்பேசியில் தெரிவித்தார். இரு மகன்களும் பதற்றம் அடையாமல் 'நல்ல மருத்துவம் கொடுங்கள், பணத்தைப் பற்றி எல்லாம் கவலை இல்லை' என்று கூறினர்.

முத்துக்குமரன் பூங்கோதையின் அலுவலகம் வந்து, 'தங்கள் தந்தைக்கு உடல் நலம் சரியில்லை, பார்த்துக் கொள்ள வேண்டும்' என்று கூற, பூங்கோதை அலுவலகத்தில் தெரிவித்துவிட்டு உடனே அவர் கணவர் சிதம்பரத்துடன் வீட்டிற்கு வந்தார். அவர்களின் பிள்ளைகளுக்கு விவரத்தைச் சொல்லிவிட்டு, மருத்துவமனைக்கு விரைந்தனர். இந்நிகழ்வுகள் எல்லாம், காலையில் இருந்து மாலை வரை நடைபெறுகின்றன. இதனை ஒரு சாதாரண நிகழ்வாகவே அனைவரும் கருதினர்.

பூங்கோதை மருத்துவமனைக்குச் சென்றடைந்தவுடன், பொன்னி காலையில் இருந்து அங்கு இருந்ததால் வீட்டிற்குச் சென்று குளித்து வருகிறேன் என்று சொல்லிவிட்டு, அவர் வீட்டிற்குச் சென்றார். பூங்கோதை தன் தந்தை பெரியண்ணனைக் கவனித்துக்கொண்டிருந்தார்.

பொன்னி கிளம்பிப்போன சிறிது நேரத்தில், பெரியண்ணனுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு மாரடைப்பு வந்தது. பூங்கோதை, மருத்துவர் மற்றும் செவிலியரை, பெரியண்ணன் இருந்த அறைக்கு உடனே அழைத்து வந்தார்.

மூச்சுத் திணறல் அதிகமாக, பூங்கோதை, 'அப்பா. அப்பா' என்று அலற, மருத்துவர் மற்றும் செவிலியர் சிகிச்சை அளித்தும், யாரும் எதிர்பாராத வகையில் பெரியண்ணனின் உயிர் சட்டெனப் பிரிந்தது.

*பூங்கோதை திருமலைப் பிள்ளை சாலையில் இருந்த பொன்னி வீட்டிற்குத் தகவல் சொல்ல, பொன்னி மருத்துவமனைக்கு விரைந்தார். உடனே மகன்கள் அழகப்பன் மற்றும் ரவிக்குத் தகவல் சொல்லப்பட்டது. இருவருக்கும் இது ஒரு பேரதிர்ச்சி. பெரியண்ணனுக்குச் சற்று உடல்நலம் சரியில்லை என்று தான் அனைவரும் நினைத்தனர். இவ்வளவு விரைவாக அவர் மறைவார் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை.*

*முதலில் மீனாட்சிக்கு, தன் கணவர் மறைந்ததை எப்படி எடுத்துக் கொள்வார்களோ என்ற பயத்தால் பெரியண்ணன் மறைந்த செய்தி சொல்லப்படவில்லை. மகள் சுலோச்சனா அருகிலேயே இருந்தார். சில மணி நேரங்களில் மீனாட்சிக்கும் தன் கணவரின் மரணம் குறித்துத் தெரிவிக்கப்பட்டது. 50 வருட திருமண வாழ்க்கை முடிவுக்கு வந்ததையும், தன் கணவர் இல்லை என்பதையும் மீனாட்சின் மனம் ஏற்றுக்கொள்ளவில்லை.*

*மூத்த மகள் தமிழரசி மும்பையில் இருந்து சென்னை கிளம்பினார். ஐந்தாவது மகள் வள்ளிக்கண்ணு அவர்கள் குடும்பத்துடன் ஸ்ரீஹரிகோட்டா அருகில் இருக்கும் சூலூர்பெட்டிலிருந்து டாக்ஸி எடுத்துக்கொண்டு சென்னை வந்து சேர்ந்தார். கடைசி மகள் விசாலாட்சி குடும்பத்துடன் ஒடிசாவிலிருந்து சென்னை வந்தடைந்தார்.*

*மனைவி கீதா கருவுற்றிருந்ததால் அவரை நியூ ஜெர்ஸி யிலேயே விட்டுவிட்டு மூத்த மகன் அழகப்பன் இந்தியாவிற்குக் கிளம்பினார். இளைய மகன் ரவி மற்றும் மருமகள் விஜி இருவரும் அலபாமாவில் இருந்து அட்லாண்டா வந்து இந்தியா புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தனர். எகானமி [Economy] வகுப்பில் பயணச்சீட்டு கிடைக்காததால் விஜி ஒரு மாதம் கழித்து தன் மாமியாரைப் பார்க்க வருவதென முடிவாயிற்று. வேறு வழியில்லாமல் வணிக வகுப்பில் [Business class] மூன்று, நான்கு மடங்கு பயணச்சீட்டிற்கு அதிக விலை கொடுத்து ரவி மட்டும்தான் அந்த நேரத்தில் ஊருக்கு வர முடிந்தது. அழகப்பன் மற்றும் ரவி இருவரும் லண்டன் விமான நிலையத்தில் சந்தித்துக் கொண்டனர். அங்கிருந்து இருவரும் பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானத்தில் ஒன்றாகச் சென்னை வந்து சேர்ந்தனர்.*

*மகன்கள் இருவரும் வரும்வரை பெரியண்ணனின் உடல் சென்னை அரசு மருத்துவமனையில் (இன்றைய ராஜிவ் காந்தி அரசு*

மருத்துவமனை) உள்ள சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்தது. அழகப்பன் மற்றும் ரவி இருவரும் ஜூலை 24, 1994 அன்று அதிகாலை சென்னை வந்தடைந்தனர். இப்படியாக அனைவரும் சென்னை சேத்துப்பட்டில் உள்ள பெரியண்ணனின் இல்லத்தில் அழுகையுடன் சங்கமித்தனர்.

சவக்கிடங்கில் இருந்த பெரியண்ணனின் உடலைப் பெற்றுக் கொள்ள மாப்பிள்ளைகள் முத்துக்குமரன், சிதம்பரம், முத்து, சீதாராமன் ஆகிய நால்வரும் மருத்துவமனைக்குச் சென்றனர். கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கும் தகவல் சொல்லப்பட்டது. அவர் ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயிலில் சென்னை வந்துக் கொண்டிருந்தார். சவக்கிடங்கில் இருந்து பெரியண்ணனின் உடல் வெளியே வர சற்று தாமதமானது. சென்ட்ரல் நிலையத்திற்கு எதிரில் இருந்த அரசு மருத்துவமனையில் காத்திருந்தார். அப்போது பெரியண்ணனின் மரணம் எப்படி நிகழ்ந்தது? என்று அவர் கேட்க, அருகில் இருந்த மருமகன் சிதம்பரம் இந்த எதிர்பாரா இழப்பைப் பற்றி கலைஞரிடம் விவரிக்க, பெரியண்ணனின் உடல்வந்தது. ‘நல்ல கல்லு மாதிரி உடம்பு உள்ளவர். எனக்கு முன் சென்று விட்டார் பெரியண்ணன்’ என்று மிகுந்த வருத்தத்துடன் சொல்லி அஞ்சலி செலுத்தினார்.



முரசொலி முன்னாள் பொது மேலாளர் - மறைந்த அரு.பெரியண்ணன் அவர்களின் உடலுக்கு தலைவர் கலைஞர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். ஆர்க்காடு வீராசாமி, துரைமுருகன், சைதை கா.கிட்டு, எல்.பலராமன், கயல் தினகரன், எழும்பூர் கு.வீராசாமி ஆகியோரும் உடன் சென்று அஞ்சலி செலுத்தினர்.

பெரியண்ணனின் மாப்பிள்ளைகள் (சுப்பையா, சொக்கலிங்கம்), உறவினர்கள் மற்றும் நண்பர்கள் இறுதிச் சடங்கிற்கான வேலைகளைப் பார்க்கத் தொடங்கினர். பெரியண்ணனின் உடல் திருவொற்றியூரில் இருக்கும் நகர விடுதிக்குக் கொண்டு வரப்பட்டு வைக்கப்பட்டிருந்தது.

குடும்பம், உறவினர்கள், நண்பர்கள் என பெரியண்ணனை அறிந்த பலரும் அவரின் உடலுக்கு அஞ்சலி செலுத்த வந்திருந்தனர். பல நூறு பேர் அங்குக் கூடியிருந்தனர். பெரியண்ணனின் உடலை உறவுகள் அனைவரும் சில முறை சுற்றிவர, 'நான் இனி என்ன செய்வேன்? என்னை இப்படி விட்டுவிட்டு போய்விட்டீர்களே? எனக்கு இந்தச் சடங்குகள் எல்லாம் ஒன்றும் தெரியாதே? வெள்ளை சேலை உடுத்த வேண்டுமா?' என்று மீனாட்சி தன் கணவரின் உடலைப் பார்த்து அழுதுகொண்டே கேட்க, அப்போது அருகில் இருந்த அவர்களின் பிள்ளைகள், 'நாங்கள் உங்களை அப்படி எல்லாம் செய்ய விடமாட்டோம் ஆத்தா' என்று மீனாட்சியைக் கட்டித் தழுவிக்கொண்டனர்.

பெரியண்ணனின் உடலை ஒரு பழுப்பு நிற பாயில் வைத்திருந்தனர். அவருடைய தலை ஓர் அழகிய வெள்ளைத் தலையணையில் அமைதியாக உறங்கிக்கொண்டிருந்தது. சலவை செய்யப்பட்ட அரைக்கை வெள்ளைச் சட்டையும் பட்டு வேட்டியும் அணிந்திருந்தார். அவருடைய மூக்குத் துவாரங்களில் பஞ்சு வைக்கப்பட்டிருந்தது. அவரது காலின் இரு பெருவிரல்களும் ஒரு சிகப்பு நூலால் கட்டப்பட்டிருந்தது. அவரின் உடலை எரியூட்டும் இடத்திற்கு எடுத்துச்செல்ல முற்படுகையில், அழுகைகள் பன்மடங்கு அதிகரித்தன.

பெரியண்ணன் தன் இறுதிப் பயணத்திற்குப் புறப்பட்டார். ரோஜா மலர்கள் தூவப்பட்டப் பாதையில் அவரின் உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. எரியூட்டும் இடத்தில் பெரியண்ணனின் உடல் மரக்கட்டைகளால் மூடப்பட்டது. அவரின் மூத்த மகன் அழகப்பன், இடது தோளில் மண்பானையையும் வலது கையில் தீப்பந்தத்தையும் வைத்துக்கொண்டு தந்தையின் உடலை மூன்று முறை சுற்றி வந்தார். ஒவ்வொரு சுற்றிலும், பானையில் ஓர் ஓட்டை போடப்பட்டு அதிலிருந்தத் தண்ணீர் வெளியேறியது. இது பானையிலிருந்து நீர் வெளியேறுவது போல் நாமும் நம் உடலை விட்டு வெளியேறுவதை மறைமுகமாக உணர்த்தியது. பானை கீழே போட்டு உடைக்கப்பட்டது. தன் தந்தையின் முகத்தைப் பார்க்கத்

தெம்பில்லாமல், மூத்த மகன் அழகப்பன், தன் தம்பி ரவி உடனிருக்க பெரியண்ணன் உடலுக்குத் தீ வைத்தார். நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை என்பது போல் ஒரு மிகச் சிறப்பான வாழ்வை பெரியண்ணன் வாழ்ந்தார். அவரின் மரணம் எதிர்பாராதது. இந்த மரணத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டது அவரின் மனைவி மீனாட்சி தான்.

பெரியண்ணனின் மறைவுக்குப் பின்னர் மீனாட்சி சில முறை அமெரிக்கா சென்று வந்தார். பெரியண்ணனுக்குத் தன் மகன்கள் வழிப் பேரப்பிள்ளைகளைப் பார்க்க வாய்க்கவில்லை என்றாலும் மீனாட்சிக்கு அந்த நல்வாய்ப்பு அமைந்தது. அதுமட்டும் இல்லாமல் பேரப்பிள்ளைகள் சிலரின் திருமணத்தையும் மீனாட்சி பார்த்தார். சில வருடங்களில் மகன் ரவி அமெரிக்காவிலிருந்து இந்தியா குடியேறினார். இது பல வகைகளில் மீனாட்சிக்கு வசதியாக இருந்தது. அவர் தன் இறுதி நாட்களைப் பாலவாக்கத்தில் தன் மகன் ரவியுடன் அவர் கட்டிய அழகிய வீட்டில் கழித்தார். கொஞ்சம் கொஞ்சமாக மீனாட்சிக்கு உடல்நலம் நலிவுற்றது. பெரியண்ணன் இறந்து 9 வருடங்கள் கழித்து, 2003ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7ஆம் தேதி, தன் பிள்ளைகள் உடன் இருக்க மீனாட்சியும் மறைந்தார்.

# 15. என் பார்வை

பெரியண்ணன் ஐயா அதிகம் பேச மாட்டார். அவரிடம் நானும் அதிகம் பேசியது கிடையாது. பேரப்பிள்ளைகள் எல்லாம் ஐயாவை ஒரு வித ஆச்சரியத்துடனும், பயத்துடனும் பார்ப்போம். அவர் வீட்டிற்கு வருகிறார் என்றால் ஒருவித பயம் இருந்தாலும், மகிழ்ச்சியாகவும் இருக்கும். ஒரு சிறுவனாக அவரை ஒவ்வொரு முறை சந்திக்கும் போதும், அவரிடம் இருந்து என்னை அறியாமல் நிறையக் கற்றுக் கொண்டுள்ளேன்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பேரப்பிள்ளைகள் நாங்கள் பெரியண்ணன் ஐயா மீனாட்சி ஆயா வீட்டில் கூடுவோம். ஒரு ஞாயிற்றுக்கிழமை அன்று நானும் என் தம்பி அருண் சிதம்பரமும் அவர்களின் வீட்டுக்குச் சென்றபோது பெரியண்ணன் ஐயா அவரின் அறையில் உள்ள சாய்வு நாற்காலியில் சாய்ந்து படுத்திருந்தார். நான் ஐயாவைப் பார்க்காமல் (அதாவது வந்திருக்கேன் என்று சொல்லாமல்) விளையாடிக் கொண்டிருந்தேன். பின்னர் சில மணி நேரம் கழித்துக் கிளம்பும்போது ஐயாவிடம் சென்று ‘போயிட்டு வரேன் ஐயா’ என்று சொல்லிவிட்டுக் கிளம்பினேன். ஐயா அதிகம் பேசமாட்டார் என்பதால், அவர் தலையை மட்டும் ஆட்டுவார் என்று நினைத்தேன்.

ஐயா உடனே, ‘வந்த போது வந்தேன் என்று சொல்லவில்லை, போகும் போது மட்டும் போயிட்டு வரேன்’ என்று சொல்கிறாய் என்றார். எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. சிறுவனாக நான் வந்ததையெல்லாம் ஐயா கவனித்திருக்கிறார் என்று. அன்று அது எனக்கு வெட்கமாக இருந்தாலும், ஐயா சிறு சிறு விஷயங்களையும் எப்படிக் கூர்ந்து கவனிக்கிறார் என்பதை அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக இருந்தது. இதுபோல் ஒவ்வொரு பேரப்பிள்ளைகளுக்கும் பல்வேறு நினைவுகள் இருக்கும்.

பொங்கல், தீபாவளி மற்றும் பண்டிகை நாட்களில் மகள்கள், மாப்பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் என்று அனைவரும் ஐயா ஆயா வீட்டில் கூடுவோம். அவரவர் வீடுகளில் தீபாவளியைக் கொண்டாடி, காலை உணவை முடித்துவிட்டு பத்துப் பதினொரு

மணி வாக்கில் ஐயா - ஆயா வீட்டிற்கு வருவோம். இது பல வருட வழக்கமாக இருந்து வருகிறது. நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் வீட்டில் வெடி வெடித்த பின்னர், ஐயா – ஆயா வீட்டில் வெடிக்க வேண்டிய வெடிகள் என்று தனியாக எடுத்துக் கொண்டு வருவோம். தீபாவளி தமிழர் பண்டிகை அல்ல என்ற காரணத்தினால் ஐயா குளிக்காமல் தீபாவளியைக் கொண்டாடாமல் இருந்திருந்தாலும், பேரப்பிள்ளைகள் வந்த பின்னர் தன்னை மாற்றிக்கொண்டார்.

தீபாவளி, பொங்கல் நாட்களில் பேரப்பிள்ளைகள் அனைவருக்கும் புதுப் பத்து ரூபாய் நோட்டு ஒன்றினை ஐயா ஆயா தருவர். நாங்கள் அவர்களின் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்று அதை வாங்கிக் கொள்வோம். ஆயா எங்கள் அனைவருக்கும் உண்ண ஒவ்வொன்றாக ஏதாவது கொடுத்துக் கொண்டே இருப்பார். பிறகு அண்ணன், தம்பிகள், அக்கா, தங்கைகள் என்று அனைவரும் சேர்ந்து வெடி வெடிக்கச் சென்று விடுவோம். தீபாவளி அன்று வீடே மிகவும் கலகலப்பாக இருக்கும். இந்தச் சமயத்தில் அமெரிக்காவில் இருக்கும் அழகப்பன் மாமா, கீதா மாமி, ரவி மாமா, விஜி மாமி தொலைபேசியில் எங்கள் அனைவருடனும் பேசி மகிழ்வர். மாப்பிள்ளைகள் அனைவரும் அவர்களுக்குள் இதழியல், வேலை, நாட்டுநடப்பு, அரசியல் என்று பேசிக் கொண்டு இருப்பர். சிறுவர்கள் எங்களுக்கு இதைக் கேட்பது சுவாரசியமாக இருக்கும். ஐயா பெரும்பாலும் அமைதியாகத்தான் இருப்பார். அவர் இருக்கும் போது மாப்பிள்ளைகளும் சற்று அமைதியாகவே இருப்பர். அந்த அமைதியில் ஒரு வித மரியாதை இருக்கும்.

ஐயா ஆயாவிற்கு நிறையப் பிள்ளைகள் இருந்ததால் வீட்டு விசேஷங்கள், புதுமனை புகுவிழாக்கள், திருமணங்கள், பிறந்த நாள் விழாக்கள் என்று நிகழ்வுகள் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும். இதுபோன்ற கூடல்களால் ஒருவரைப் பார்த்து ஒருவர் வளர்ந்தோம். பேரப்பிள்ளைகள் நாங்கள் பார்த்த ஐயா – ஆயா மிக வசதியாக வாழ்ந்தனர். அவர்கள் எந்த விழாவிற்குச் சென்றாலும் மதிப்பும், மரியாதையும் இருக்கும்.

ஐயாவிடம் பிடிக்காதது என்ன என்று நான் யோசித்தேன். அவர் அதிகம் பேச மாட்டார். இதுவே அவரின் பலம். ஆனால் சில சமயங்களில், அவரை அறியாதவர்களுக்கு இது பிடிக்காமல் இருந்திருக்கக் கூடும். அவர் அதிகம் பேசாததால் அவர் பேசும் சமயத்தில் அவர் கூறும் கூற்றுக்கு மதிப்பு அதிகம் இருந்தது.

ஐயா, அவரின் இளமைக் காலம், பொன்னி இதழைத் தொடங்கியது, அவரின் சமூகப் பணிகள் பற்றி எல்லாம் எங்கும் எழுதி வைக்கவில்லை. ஆனால் அவர் தன் ஐரோப்பிய அமெரிக்கப் பயணக் குறிப்புகளை எழுதி வைத்ததை நினைக்கையில் மிகவும் ஆச்சர்யமாக இருந்தது. அந்தப் பயணக் குறிப்பில் இரவி மாமா, விஜி மாமி வீட்டு முகவரி வரை எழுதி வைத்திருந்தார்.

ஐயா, பின் இருந்துதான் பல வேலைகள் செய்துள்ளார். தான்தான் இதைச் செய்தேன் என்று அவர் ஒருபோதும் பிரகடனப் படுத்தி தன்னை முன்னிலைப் படுத்திக் கொண்டதில்லை.

ஐயா ஆயாவின் 50வது திருமண நாள் எனக்கு நன்கு நினை விருக்கிறது. அப்போது நான் 8வது படித்துக் கொண்டிருந்தேன். ஓர் ஐந்து நட்சத்திர விடுதியை (5 Star Hotel) நான் பார்த்தது அதுவே முதல்முறை. நானும், என் தம்பி அருண் சிதம்பரமும் எங்கள் ஐயா ஆயாவைப் பற்றி மேடையில் பேசினோம். முதலில் நான் மட்டும்தான் பேசுவதாக இருந்தது. ஆனால் நான் பேசி என் தம்பி பேசவில்லை என்றால் அது சரியாக இருக்காது என்று எண்ணி எங்கள் அப்பா நாங்கள் இருவர் பேசவும் எழுதிக் கொடுத்தார். இதுபோன்ற நிகழ்வுகளில் பேச அப்பா எங்களை மிகவும் ஊக்கப்படுத்துவார். மிகப்பெரிய இடம், பெரிய மனிதர்கள் பலர் வந்திருந்தனர். இதுபோன்ற ஒரு மேடையில் எங்களுக்கும் பேச வாய்ப்பு கிடைத்தது ஒரு பெரும் மகிழ்ச்சி. அந்தக் காலகட்டத்தில் நாங்கள் நிறைய படங்கள் (Photos) எடுத்திருந்தாலும் அதிகக் காணொலிகள் எடுத்ததில்லை. அந்தச் சிறு வயதில் நாங்கள் பேசியது காணொலி மூலம் இருக்கிறது என்பதை நினைக்கையில் மகிழ்ச்சியாக இருக்கிறது.

பெரியண்ணன் ஐயாவின் வாழ்க்கையில் இருந்து, எளிமை, பொறுமை, பேசாமலும் சாதிக்கலாம் என்று நிறைய கற்றுக் கொள்ளலாம். மிக முக்கியமாக உறவுகளை எப்படி வளர்த்தெடுப்பது என்பதை, தாம் வாழ்ந்த வாழ்க்கையின் மூலம் கற்றுத் தந்துள்ளார். ஐயா இன்னும் பல வருடங்கள் இருந்திருக்கலாம். ஆனால் அவரைப் பொறுத்தமட்டில், அவர் மரணம் ஒரு நல்ல மரணம் தான். என் பார்வையில் ஒரு பேரனாக, நான் ஐயாஆயாவின் வாழ்க்கையை எப்படிப் பார்க்கிறேன்? அல்லது ஒரு பேரனாக மட்டுமல்லாமல் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையைப் பார்த்தவன் என்ற முறையில் அவர்களிடம் இருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம் என்பதே இந்த ‘என் பார்வை’.

# I. கல்வி அடித்தளம்

பெரியண்ணன் ஐயா மீனாட்சி ஆயா இருவரும் சூழ்நிலைகளின் காரணமாகப் பல்வேறு இடங்களில் வாழ்ந்திருந்தாலும், தடங்கல்கள் பல வந்த போதும் அவர்களின் அனைத்துப் பிள்ளைகளுக்கும் கல்வியே அடித்தளம் என்பதில் உறுதியாக இருந்தனர்.

| பெயர் | பள்ளிப் படிப்பு | கல்லூரிப் படிப்பு |
|---|---|---|
| தமிழரசி | நேரு வித்யாலயா பள்ளி – ஆத்தங்குடி, லேடி (சீமாட்டி) எம்.சி.டி முத்தையா செட்டியார் மகளிர் மேல்நிலைப் பள்ளி, ஏ.ஆர்.சி மகளிர் மேல்நிலைப் பள்ளி, ஜார்ஜ் டவுன், சென்னை. | இராணி மேரி கல்லூரி (PUC) + இளங்கலை வேதியியல் |
| பொன்னி | புனித அன்னாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பிராட்வே, நேரு வித்யாலயா, ஆத்தங்குடி, லேடி எம்.சி.டி முத்தையா செட்டியார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஏ.ஆர்.சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி. ஜார்ஜ் டவுன் சென்னை. | இராணி மேரி கல்லூரி, (PUC) +இளங்கலை இயற்பியல், மெட்ராஸ் மருத்துவக் கல்லூரி, (M.B.B.S, D.G.O) |
| பூங்கோதை | நேரு வித்யாலயா, ஆத்தங்குடி, ஏ.ஆர்.சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி. ஜார்ஜ் டவுன், சென்னை | இராணி மேரி கல்லூரி (PUC) + இளங்கலை தமிழ் இலக்கியம் |
| சுலோச்சனா | நேரு வித்யாலயா, ஆத்தங்குடி, ஏ.ஆர்.சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி. ஜார்ஜ் டவுன், | இராணி மேரி கல்லூரி (PUC), எஸ்.ஐ.இ.டி பெண்கள் கல்லூரி (இளங்கலை வேதியியல்) |

| | | |
|---|---|---|
| வள்ளிக் கண்ணு | ஏ.ஆர்.சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி. ஜார்ஜ் டவுன், சென்னை | இராணி மேரி கல்லூரி (PUC), மாநில கல்லூரி (இளங்கலை வேதியியல்) |
| விசாலாட்சி | சாரத வித்யாலயா பள்ளி, தி நகர், சென்னை, அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, தி நகர், சென்னை | செல்லம்மாள் மகளிர் கல்லூரி (PUC), காயிதே மில்லத் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (இளங்கலைப் பொருளியல்) |
| அழகப்பன் | ஜார்ஜ் டவுன் மிஷன் பள்ளி, சென்னை, ஸ்ரீ ராம் ஆங்கில வழிப் பள்ளி, சென்னை, பார்க் மாண்டசரி பள்ளி, சென்னை. எம்.சி.டி.எம் பள்ளி, புரசைவாக்கம், சென்னை. | விவேகானந்தா கல்லூரி (PUC), இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, (ஐ.ஐ.டி), சென்னை, (இளநிலை வேதிப் பொறியியல், ஹீஸ்டன் பல்கலைக் கழகம் டெக்சாஸ், அமெரிக்கா (முதுநிலை பொறியியல்), தேசிய தொழில்நுட்பப் பல்கலைக் கழகம், கொலராடோ (முதுநிலை மென்பொறியியல்) |
| ரவி | புனித மேரி நர்சரி மற்றும் தொடக்கப் பள்ளி, சென்னை, எம்.சி.டி. எம் பள்ளி, புரசைவாக்கம், சென்னை | பச்சையப்பன் கல்லூரி PUC +இளங்கலை வணிகவியல், ஏ.எம். ஜெயின் கல்லூரி (பணியாளர் மேலாண்மை முதுநிலைப் பட்டயப் படிப்பு (PGDPM)), முதுகலை வணிக மேலாண்மை (MBA), அலபாமா A&M பல்கலைக்கழகம், ஹன்ட்ஸ்வில், அமெரிக்கா. |

# II. பேசாமலும் சாதிக்கலாம்

*நாங்கள் (நானும் என் தம்பி அருண் சிதம்பரமும்) சிறுவர்களாக இருந்தபோது, ஒரு நாள் சென்னை, அண்ணா நகரில் இருக்கும் எங்கள் வீட்டில் இரவு 9 மணி அளவில் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஒரு சிறு நெருடல். சிறிது நேரத்தில் நெருடல் பெரிதானது. எங்கள் அம்மா 'நான் எங்க ஆத்தா வீட்டிற்குப் போகிறேன்' என்று சொல்ல, எங்கள் அப்பாவும், 'சரி, போ' என்று பதிலளிக்க... ஏதோ இதுபோல் ஒரு சண்டை போய்க்கொண்டிருந்தது (எல்லோர் வீட்டிலும் இருக்கும்தானே!)*

*உடனே எங்கள் அம்மா சேத்துப்பட்டில் இருக்கும் எங்கள் ஐயாவின் வீட்டிற்குக் கிளம்ப ஆரம்பித்தார்கள். அப்பாவும் 'நானே கூட்டிக்கொண்டு போய் விடுகிறேன்' என்று சொல்ல, அப்பாவும் அம்மாவும் சேத்துப்பட்டில் இருக்கும் எங்கள் ஐயா வீட்டிற்குச் செல்வது என்று முடிவானது (எங்கள் அப்பாவையும் பாராட்ட வேண்டும்... நீயே போய்க்கொள் என்று சொல்லாமல் நானே விட்டு விடுகிறேன் என்று சொன்னாரே!).*

*நாங்களோ சிறுவர்கள்... நாங்களும் ஐயா ஆயா வீட்டிற்கு வருகிறோம் என்று அடம் பிடித்தோம். எங்கள் அப்பா, பிள்ளைகள் நாங்கள் என்ன கேட்டாலும் சரி என்று சொல்லி உடனே செய்து விடுவார். சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த இந்த முறையும் 'சரி வாங்க' என்று கூறினார். நாங்கள் நால்வரும் ஐயா வீட்டிற்குச் செல்வது என்று முடிவானது. அந்தக் காலகட்டத்தில் எங்களிடம் கார் எல்லாம் இல்லை. அப்பாவின் இரு சக்கர வாகனம்தான். இதுபோல் நாங்கள் நால்வரும் பல பல முறை ஒரே வண்டியில் பயணம் செய்திருக்கிறோம் (சில சமயம் எங்கள் அப்பத்தாவும் சேர்த்து ஐந்து பேர் கூட பயணம் செய்தது உண்டு!). அண்ணா நகரிலிருந்து சேத்துப்பட்டிற்குப் புறப்பட்டோம். இந்த முறை பயணத்தின் போது அம்மாவும் அப்பாவும் பேசிக்கொள்ளவில்லை. சோகத்தோடு ஐயாவின் வீட்டை வந்தடைந்தோம். இரவு ஒரு 10 மணி இருக்கும். கதவைத் தட்டினோம். ஐயா வீட்டில் வேலை செய்யும் ஒரு பெண்*

வந்து கதவைத் திறந்தார். வீட்டிற்குள் நுழைந்தோம். ஐயா ஆயா இருவரும் இருந்தார்கள். ஐயா அவரின் அறையில் உள்ள சாய்வு நாற்காலியில் சாய்ந்து அமர்ந்திருந்தார். ஆயா அடுப்படியில் ஏதோ செய்துக் கொண்டிருந்தார்.

சில சமயங்களில் இது போல் சண்டைகள் நடக்கும் போது சுவாரஸ்யமாக இருக்கும். நான் ஒரு பெரிய சண்டை நடக்கப்போகிறது என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.

எங்கள் ஆயா அம்மாவிடம் 'என்ன ஆச்சு? ஏன் இந்த நேரத்தில் வந்திருக்கிறீர்கள்?' என்று ஏதோ கேட்க, அம்மா ஆயாவிடம் நடந்த விஷயத்தைச் சொன்னார்கள். ஆயா, அம்மாவை ஆதரிப்பதுப் போல் 'பூங்கோதை இங்கேயே இருக்கட்டும்' என்று அப்பாவிடம் சொன்னார்கள்.

எங்கள் அப்பா, சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்த ஐயாவிடம் சென்று, 'அம்மான், (மாப்பிள்ளைகள் மாமனாரை அம்மான் என்று அழைப்பார்கள்) பூங்கோதை சில நாட்கள் இங்கேயே இருக்கட்டும் அல்லது விட்டு விட்டுப் போகிறேன்' என்று ஏதோ சொன்னார். சிறுவனாக இருந்த நான் இதைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஐயா, 'வேண்டாம் மாப்பிள்ளை... பூங்கோதையை இங்கே விட்டு விட்டுப் போகாதீர்கள்' என்று என் அப்பாவிடம் கனிவாக வேண்டுகோள் விடுப்பார் என்று எதிர்பார்த்தேன். 'என்ன நடந்தது? என்ன பிரச்சனை?' என்று கேட்பார்கள் என்றும் எதிர்பார்த்தேன். ஆனால் என் எதிர்பார்ப்பிற்கு முற்றிலும் மாறாக நடந்தது.

ஐயா ஒரு வார்த்தைக்கூடப் பேசவில்லை. ஐயாவின் மாப்பிள்ளைகள் அனைவரும் அவருக்கு மிகுந்த மரியாதை தருவார்கள். என் அப்பாவிற்கும் ஐயா எதுவும் கேட்காததால், பேசாததால் வேறு என்ன சொல்வது என்று தெரியவில்லை. 'சரி பூங்கோதையை இங்கு விட்டு விட்டுப் போகிறோம்' என்று அப்பா சொல்ல அங்கிருந்து நாங்கள் கிளம்பினோம்.

நாங்கள் கிளம்பும்போது, ஆயா ஐயாவிடம் 'ஏங்கறேன் (மனைவிகள் தங்கள் கணவன்மார்களை ஏங்கறேன் என்று அழைப்பார்கள்). ஏதாவது சொல்லுங்களேன். இப்படிப் பேசாமல் இருந்தா எப்படி?' என்பது போல் ஐயாவிடம் கடிந்து கொண்டார்கள். ஐயா எதுவும் பேசவில்லை.

நான்கு பேராகச் சென்றோம். அம்மாவை ஐயா – ஆயா வீட்டில் விட்டுவிட்டு மூன்று பேராக அண்ணா நகரில் இருக்கும் எங்கள் வீட்டிற்குத் திரும்பினோம். நாங்கள் எங்கள் வீட்டிற்கு வர, இரவு 11.30 மணி ஆகியிருக்கும். எங்கள் வீட்டில் எங்கள் அப்பத்தாவும் (அப்பாவின் அம்மா) இருந்தார்கள். வீட்டிற்கு வந்து ஒரு 10–15 நிமிடங்கள் இருக்கும். நானும் என் தம்பியும் அம்மா வேண்டும் என்று அழ ஆரம்பித்தோம். நிமிடங்கள் ஆக ஆக அழுகை அதிகமானது. அப்பத்தா அப்பாவிடம் 'இப்படி விட்டுவிட்டு வந்திருக்கக் கூடாது' என்று ஏதோ சொன்னார்கள். அப்பாவும், 'சரி நாளை காலை பார்த்துக் கொள்ளலாம்' என்று கூறினார். நாங்கள் 'அம்மா இப்பவே வேண்டும் வேண்டும்' என்று அழுதோம். எங்கள் அப்பாதான், நாங்கள் என்ன கேட்டாலும் செய்வாரே! இரவு 12 மணி வாக்கில் நான், தம்பி, அப்பா மூவரும் மறுபடியும் அண்ணா நகரில் இருந்து சேத்துப்பட்டிற்குச் செல்வது என்று முடிவானது.

இரவு 12:30 மணிக்கு மறுபடியும் ஐயா வீட்டுக் கதவைத் தட்டினோம். அப்பா மறுபடி ஐயாவிடம் போய் 'பூங்கோதையைக் கூட்டிக் கொண்டு செல்கிறோம்' என்று சொல்ல, அதற்கும் ஐயா பெரிதாக எதுவும் பேசாமல் அவரின் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி இருந்தார். ஆயா 'பூங்கோதை இங்கேயே இரண்டு நாள் இருக்கட்டும்' என்று சொல்ல, அம்மா அவர் துணிமணியை எடுத்துக்கட்ட, மூவராகச் சென்ற நாங்கள், அம்மாவைக் கூட்டிக்கொண்டு மீண்டும் நால்வராக எங்கள் வீடு திரும்பினோம். இதுபோல் ஒரு சம்பவம் மறுபடி நடக்கவில்லை.

இந்தக் காலகட்டத்தில் பெரும்பாலானோர் வீடுகளில், இருவருக்கு இடையே இது போல் ஒரு பிரச்சனை நடக்கும்போது, மூன்றாவதாக ஒரு நபர் உள் நுழைவதால், அது பெரிதாகி பெரிதாகி, வேறு எங்கெங்கோ போய் முடிகிறது. 'பேசாமலும் சாதிக்கலாம்' என்பதை அறிந்து கொள்ள இது ஒரு மாஸ்டர் கிளாஸ் ஆக இருந்தது.

# III. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தல்

**அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்**

**தந்நோய்போல் போற்றாக் கடை**

*பிற உயிரின் துன்பத்தைத் தன் துன்பம்போல் கருதிக் காப்பாற்றா விட்டால் பெற்றுள்ள அறிவினால் ஆகும் பயன் உண்டோ. நாம் நல்ல வசதியோடு இருக்கும்போது பிறருக்கு உதவுவது என்பது ஒரு வகை. நம்மிடம் எதுவுமே இல்லாத போதும் பிறரைப் பற்றி நினைத்து பிறருக்குத் தேவையானதைச் செய்வது இன்னொரு வகை.*

**அரசு வேலை வேண்டாம்**

*என் அம்மா பூங்கோதைக்கு, அவர்கள் பட்டப் படிப்பு முடித்த பின்னர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வேலைக்குச் சேர ஒரு வாய்ப்பு வந்தது. ஆனால் அந்தச் சமயத்தில், ஐயா -ஆயாவின் உறவினர் குடும்பம் ஒன்று சிரமத்தில் இருந்தது. தன் மகளை விட இந்த வேலை அந்தக் குடும்பத்திற்கு மிகவும் அவசியம் என்று எண்ணி, வந்த வாய்ப்பினை உறவினரின் பெண்ணிற்கு வழங்கினார். பின் அம்மா சென்னைத் தொலைக்காட்சி நிலையம் தொடங்கிய புதிதில் அங்கு வேலைக்குச் சேர்ந்தார்.*

**வேண்டாம் பல் மருத்துவப் படிப்பு**

*என் சித்தி வள்ளிக்கண்ணுக்குச் சென்னையில் பல் மருத்துவப் படிப்பு படிக்கும் வாய்ப்பு ஒன்று வந்தது. அந்தக் காலகட்டத்தில் மலேசியா நாட்டில் பல் மருத்துவர்களுக்கு வாய்ப்புகள் அதிகம் இருந்தன. தன் உறவினர் ஒருவரின் மகன் மலேசியாவில் இருந்ததால், வந்த வாய்ப்பினைத் தன் மகள் வள்ளிக்கண்ணுக்குப் பதிலாக உறவினர் மகனுக்குக் கொடுத்தார்.*

**ஐயாவின் உதவும் குணம்**

*பலர் ஐயாவிடம் உதவி கேட்டு வருவர். நான் அறிந்த ஒருவரின் மகளின் திருமணத்திற்குப் பத்திரிக்கை வைத்தனர். அவருக்கும் பெண் பிள்ளைகள். அந்தத் திருமணத்திற்குத் திருமண நாளன்று செல்ல இயலவில்லை என்றாலும், அதற்கு முன்னரே அவரின் FIAT Carல் சென்று, தேவையற்ற பொருட்களைப் பரிசாகக்*

கொடுக்காமல், அவர்களுக்குப் பணம் தேவைப்படும் என்பதால் தன்னால் இயன்ற ஒரு நல்லத் தொகையைப் பரிசாகக் கொடுத்தார். இன்னொரு உறவினர் வீட்டுத் திருமணத்தில், யாரும் இல்லாத போது அந்த உறவினரின் கையில் பணத்தைக் கொடுத்தார். அந்த உறவினர் இதைப்பற்றி என்னிடம் ‘பெருந்தன்மைக்குப் பெரியண்ணன் என்று நான் கூறுவேன். அவர் செல்வந்தர் இல்லை. அவரிடமே பணம் எதுவும் இருக்காது ஆனால் எங்களுக்குத் தேவைப்படும் நேரத்தில் உங்கள் ஐயா பலமுறை உதவியிருக்கிறார்’ என்று கூறினார். ஐயாவின் நண்பர் ஒருவருக்குக் குடும்பம் உறவுகள் என்று யாரும் இல்லை. அந்த நண்பரை மருத்துவக் கல்லூரியில் சேர்க்கவும் ஐயா பெரிதும் உதவினார். அந்த நண்பரின் திருமணத்தையும் நடத்தி வைத்தார்.

**குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை**

ஐயாவிடம் பணம் இல்லாதபோது அவரின் பங்காளிகள், உறவினர்களில் பலர் ஐயா – ஆயாவை மதித்ததில்லை. ஒரு ஏளனப் பார்வையுடனே பார்ப்பர். எந்தப் பங்காளிகள், ஐயாவை மதிக்கவில்லையோ அதே பங்காளிகள், உறவினர்கள் ஐயா நல்ல நிலைமைக்கு வந்த பின்னர் உதவி என்று பலமுறை ஐயாவின் வீட்டிற்கு வருவர். அந்தச் சமயத்தில் முகம் சுளிக்காமல் எங்கள் ஐயாவால் என்ன முடியுமோ மறுக்காமல் உதவுவார். ‘நீ அன்று இப்படிச் செய்தாய்’ ‘எனக்கு உதவவில்லை’ என்றெல்லாம் கூறாமல் மனதில் எதையும் வைத்துக்கொள்ளாமல் உதவுவார். சிலர் அவரிடம் ஏன் இப்படி இருக்குறீர்கள், அவர்கள் நம்மை மதிக்கவில்லையே என்று கேட்கும் போது, அதற்கு ஐயா அவர்கள் அடிக்கடி கூறுவது ‘குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை’. இதுபோல் எண்ணற்ற நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் ஐயா எந்தப் பிரதி பலனையும் எதிர்பாராமல் உதவி செய்துள்ளார். நம்மால் முடிந்தால் செய்வோம் என்பது அவர் எண்ணம். ஆனால் அதைச் செய்தேன் இதைச் செய்தேன் என்று எவரிடமும் கூறியது இல்லை.

ஐயாவின் பிள்ளைகள் அனைவரும், அப்பா இப்படிச் செய்கிறார்களே என்று வருத்தப்பட்டதில்லை. இன்றும் வருத்தப் படவில்லை. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாக வளரும்’ என்று ஐயா அடிக்கடி சொல்வார். அவர் எண்ணம் போலவே அவர்கள் பிள்ளைகள் தானாக வளர்ந்தனர். இன்று அனைவரும் நல்ல வசதியுடன் செழிப்பாக உள்ளனர்.

# IV. கொடுக்கல் வாங்கல்

பெரியண்ணன் ஐயா - மீனாட்சி ஆயா, தன் ஆறு மகள்களுக்கும் சீதனப்பணம் கொடுத்துதான் திருமணம் செய்தார்கள். இது அந்தக் காலத்து வழக்கமாக இருந்தது. இதனால் பல சிரமங்களுக்கும் உள்ளானார்கள். ஆனால், தங்களின் இரு மகன்களுக்கும் திருமணம் முடிக்கும்போது, பெண் வீட்டாரிடம் பணம், பொருட்கள் என்று எதுவுமே வாங்காமல்தான் திருமணம் செய்தார்கள். இது அவர் மகன்களின் திருமணத்தின் போது பேசு பொருளாக மாறியது. ஆனால் எல்லோரையும் திருப்திப் படுத்த இயலாது என்பதற்கு ஏற்ப சிலர், 'மருமகள்கள் இருவரும் ஓரளவு நல்ல வசதியான குடும்பத்துப் பெண்கள் தானே, இது சீதனம் வாங்காமல், வாங்குவது போல தானே' என்று பேசினார்கள்.

மேம்போக்காகப் பார்க்கும்போது இது ஒரு வகையில் சரி என்று தோன்றலாம். ஆனால் என்னதான் பெண் வீட்டார், வசதியுடன் இருந்திருந்தாலும், ஐயா – ஆயாவிடம், சொத்துக்கள், பணம் என்று அவர்கள் பெயரில் பெரிதாக எதுவும் இல்லை. அவர்கள் நினைத்திருந்தால் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள நல்ல படிப்பு படித்து, நல்ல நிலையில் இருக்கும் மகன்களை வைத்து பெண் வீட்டாரிடம் தொகை, பொருட்கள் என்று வாங்கி இருக்க முடியும். ஆனால் அவர்கள் பணத்தை ஒரு பொருட்டாக எண்ணவில்லை.

நான் ஐயா -ஆயா அன்று செய்ததை இன்று சிந்தித்துப் பார்க்கும்போது, அவர்கள் இருவரையும் மிகவும் பாராட்டத்தான் தோன்றுகிறது.

பெண்ணிற்குப் பணம் கொடுத்து, திருமணம் முடிக்க வேண்டும் என்ற ஒரு பழக்கம் ஒழிக்கப்பட வேண்டியது. இன்று இந்த வழக்கங்கள் நம் சமூகத்தில் தொடர்ந்து இருந்தாலும், காலப்போக்கில் இது மாறி வருவது வரவேற்கத்தக்கது.

**நல்ல பழக்கம்**

ஐயா - ஆயாவின் எட்டுப் பிள்ளைகளும் யாரும் யாரையும் சார்ந்து இல்லை. அவரவர் மிக நல்ல நிலையில் இருக்கிறார்கள். வசதிக்கு என்று எந்தக் குறைச்சலும் இல்லை. ஆனால் எவரும்

*அநாவசியமாகச் செலவு செய்யமாட்டார்கள். ஒரு 20 ரூபாய் இன்னொருவரிடம் இருந்து வாங்கினால் கூட மறவாமல் அந்த 20 ரூபாயைக் கொடுத்து விடுவர். இது ஒரு நல்ல பழக்கம்.*

*உதாரணமாக சுலோச்சனா சித்தி, விசாலாட்சி சித்தியிடம் 50 ரூபாய்க்கு காப்பி தூள் வாங்கச் சொல்லி இருந்தாலும் காப்பி தூளைக் கொடுத்த உடன் அந்த 50 ரூபாயைச் சரியாகக் கொடுத்துவிடுவார். இதனால் அவர்களுக்குள் பிரச்சனைகள் வருவதில்லை.*

# V. சகுனம் எல்லாம் ஒன்றும் இல்லை

*நாம் இன்று மாப்பிள்ளை பெண் தேடும் போதும், திருமணங்கள் செய்யும்போதும் ஜாதகங்களை ஒரு பெரும் பொருட்டாக எண்ணுகிறோம். சில இடங்களுக்குச் செல்லும்போது, சகுனம் பார்க்கிறோம். ஆனால், ஐயா - ஆயா இருவருக்கும் இதில் பெரும் நம்பிக்கை இல்லை. அவர்களின் ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் ஜாதகம் பார்த்து திருமணம் செய்திருந்தால், அவர்களுக்குத் திருமணமே முடிந்திருக்காது.*

*ஐயா - ஆயா இருவரும் ஒரே நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தான். அவர்கள் எட்டுப் பிள்ளைகளைப் பெற்று ஒவ்வொருவருக்கும் நல்ல முறையில் திருமணம் முடித்து, இன்று அவர்களின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் நல்ல நிலைமையில் இருக்கின்றனர். ஏன் ஐயா ஆயாவே 50வது திருமண நாளையும் கொண்டாடினார்கள்.*

*ஐயாவின் மூத்த மகள் தமிழரசி திருமணத்தின் போது ஐயாவிற்கு விபத்து ஏற்பட்டதால் அவர்களால் தனது மகளின் திருமணத்தில் கலந்து கொள்ள இயலவில்லை. இது அன்றைய சூழலில் கெட்ட சகுனமாகப் பார்க்கப்பட்டிருக்கும். ஆனால் இன்று, தமிழரசி சுப்பையா திருமணம் கூட 50 வருடங்களைக் கடந்துவிட்டது. அவர்கள் இருவரும் தங்களின் பேரன் - பேத்தி திருமணங்களையும் பார்த்துவிட்டனர்.*

# VI. சமத்தான மருமகள்கள் சாமர்த்தியமான மாப்பிள்ளைகள்

நாம் வாழும் இந்தக் காலகட்டத்தில் நம் ஒரு பிள்ளைக்குத் (ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும்) திருமணம் செய்வதே பெரும் வேலையாக உள்ளது. சற்று சிந்தித்துப் பார்க்கையில் ஐயா -ஆயா எட்டுப் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்துள்ளனர். இது எப்படி ஐயா - ஆயாவிற்குச் சாத்தியமானது என்று நான் மட்டும் அல்ல, பலரும் சிந்தித்து உள்ளனர். ஐயா அவர்கள் அவரின் பிள்ளைகளுக்கு வரன்கள் பார்க்கும் போது சில வரையறைகளை வைத்துக்கொண்டு செயல்பட்டுள்ளார் என்று எனக்குத் தோன்றுகிறது.

ஐயா அவர்களுக்கு ஆறு பெண்கள், இரண்டு மகன்கள். பெரும் பொருளாதார வசதி இல்லை. இத்தனை பேருக்கும் எப்படித் திருமணம் முடிக்கப் போகிறோம் என்பதைப் பற்றியெல்லாம் அவர் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. ஒவ்வொரு திருமணத்தையும் அந்தந்தக் காலச்சூழலுக்கு ஏற்ப ஒவ்வொன்றாக அவர், அவருக்கு வகுத்துக் கொண்ட வரையறைகளுக்கு உட்பட்டு பொறுமையாக அணுகினார்.

அவர் மாப்பிள்ளைகள், மருமகள்களைத் தேர்வு செய்யும்போது வசதி, நிறம் முதலிய எதையும் பார்க்கவில்லை. ஜாதகமும் பார்த்து திருமணங்கள் செய்யவில்லை. உறவுகள் வழிச் சம்மந்தகளையும் தவிர்த்துள்ளார். மாப்பிள்ளைகள் மற்றும் மருமகள்களின் அண்ணன், தங்கை படித்துள்ளார்களா? அவர்களின் நிலை என்ன? பெற்றோர்கள் என்ன செய்கிறார்கள்? என்பதைப் பற்றி எல்லாம் அவர் கவலை கொள்ளவில்லை.

பையன் பட்டதாரியா? பையனுக்கு வேலை இருக்கிறதா? வாழ்க்கையில் முன்னேற துடிப்பு மிக்கவராக இருக்கிறாரா? இவை மூன்று மட்டுமே அவரின் பார்வையாக இருந்திருக்கும்.

தன் அனைத்துப் பிள்ளைகளும் எப்படிப் பட்டதாரிகளோ,

அதுபோல் மாப்பிள்ளைகள் மருமகள்கள் அனைவரும் பட்டதாரி களாக இருக்க வேண்டும் என்று எண்ணினார். அவரின் எண்ணம் போல் அவர் தேர்ந்தெடுத்த மாப்பிள்ளைகள் மற்றும் மருமகள்கள் அனைவரும் பட்டதாரிகள்.

என் அப்பாவோடு பேசிக் கொண்டிருக்கையில், 'உங்களுக்கு எப்படித் திருமணம் நடந்தது? ஐயா உங்களை எப்படித் தேர்வு செய்தார்கள் என்று கேட்டேன்?' அவர், 'என் தந்தை நான் 7 வயது இருக்கும்போதே இறந்து விட்டார். எங்களுக்குப் பெரிய துணை என்று யாரும் கிடையாது. பெரியண்ணன் அவர்களின் குடும்பம் பெரிய குடும்பம். இது நம் வாழ்வுக்குச் சிறந்ததாக இருக்கும் என்று எண்ணி, எங்கள் வீட்டில் வேறு ஒரு பெண்ணைச் சொன்னாலும் நான் பூங்கோதையைத் திருமணம் செய்து பெரியண்ணன் வீட்டு மாப்பிள்ளை ஆனேன். என் திருமணம் முடிந்த பின்னர்தான் என் வாழ்வில், ஏற்றமும் வந்தது' என்றார்.

விஜி மாமியிடம் பேசிக் கொண்டிருந்த போது, 'நீங்கள் எப்படிப் பெரியண்ணன் மருமகள் ஆனீர்கள் என்று கேட்டேன்'. அதற்கு, அவர் 'நான் பார்த்த ஒரே பையன் ரவி தான். என் தந்தை, பையனின் அப்பா மிகவும் நல்லவர். பையனும் அதுபோல் தான் இருப்பார். அவர்களின் குடும்பத்திற்காகவே இத்திருமணத்தைச் செய்ய வேண்டும்' என்றார்.

ஒவ்வொரு குடும்பத்தின் ஏற்றத்திற்கும் மாப்பிள்ளைகளின் உழைப்பு ஏராளம். அதுபோல் மருமகள்கள் கீதா, விஜி இருவரின் பங்கும் பெரியண்ணன் மீனாட்சியின் குடும்பத்தின் வளர்ச்சிக்குப் பெரும் துணையாக இருந்தது.

# VII. ஆத்தா வீடு

*எங்கள் ஊர் பக்கத்தில் அப்பாவின் அம்மாவை அப்பத்தா என்றும், அம்மாவின் அம்மாவை ஆயா என்றும் அழைப்போம்.*

*ஆனால் ஐயா - ஆயாவின் முதல் பேரன் விஜயகுமார் சுப்பையா, 8 பிள்ளைகளும் எங்கள் ஆயாவை 'ஆத்தா' என்று கூப்பிடுவதைக் கண்டு, தன் மழலைப் பருவத்தில் ஆயாவை ஆயா என்று அழைக்காமல் 'ஆத்தா, ஆத்தா' என்றே அழைத்தார். அவரின் பின்னால் வந்த பேரப்பிள்ளைகள் நாங்கள் அனைவரும், 'ஆத்தா' என்பதையே பின்பற்றினோம். இதனால் எங்கள் ஆயா அனைவருக்குமே ஆத்தா ஆனார். ஐயா - ஆயா வாழ்ந்த வீடும் ஆத்தா வீடானது.*

# VIII. ஐயாவின் சொத்துக்கள்

*ஐயா மரணித்த அடுத்த நாள் குடும்பத்தினர் அனைவரும் சேத்துப்பட்டில் உள்ள ஐயா ஆயா வீட்டில் கூடினோம். அழகப்பன் மாமாவும், ரவி மாமாவும் வீட்டில் உள்ள சாமான்களைப் பிரித்து என்ன இருக்கிறது என்று பார்க்க ஆரம்பித்தார்கள். பிள்ளைகள் 8 பேர் இருந்தாலும் இது எனக்கு, அது உனக்கு என்று எவ்வித சச்சரவும் இல்லை. இதற்கு மிக முக்கிய காரணம், ஐயாவிற்குப் பணத்தின் மீதும் சொத்துகள் மீது பெரிதும் ஆசை இல்லை என்பதுதான். அவர் கல்வியை நம்பினார். அதனால் அவர் சொத்துகள் என்று பெரிதாக எதையும் சேர்த்து வைக்கவில்லை. ஒரு வகையில் இது மிக எளிதாகப் போனது. சரி... ஐயா ஆயாவிடம் சொத்துக்கள் என்று என்ன இருந்தது?*

*1. ஐயா MSS 5194 என்ற எண் கொண்ட FIAT காரை 1971 முதல் பயன்படுத்தி வந்தார். அவர் அந்தக் காரை மாற்றவில்லை. நன்றாகவும் வேலை செய்தது. அதைக் கொடுத்துவிட்டு, மாருதி 800 (Maruthi 800) கார் ஒன்று வாங்க 3000 ரூபாய் முன்பணம் வைத்திருந்தார்.*

*2. ஐயா சென்னை திநகர், அமுதம் காலனி அடுக்கு மாடிக் குடியிருப்பு ஒன்றில் ஆயாவின் பெயரில் இரண்டு அறைகள் (2 BHK) கொண்ட வீட்டை வாங்கி வைத்திருந்தார். ஆயாவின் மரணத்திற்குப் பின்னர், அந்தச் சிறு வீட்டை விற்று வந்த பணத்தில் என் அம்மாவிற்கும், சுலோச்சனா சித்திக்கும் அவர்களின் திருமணத்தின்போது நகை பெரிதாகப் போடாததால் அனைத்துப் பிள்ளைகளுக்கும் சமமாக இருக்க வேண்டும் என்று எண்ணி நகை வாங்கிக் கொடுத்தனர். மீதமிருந்த பணத்தை ஆண், பெண் என்று பாராமல் எட்டாகப் பிரித்துக் கொண்டனர். இதுபோல் ஆயாவின் பெயரில் அவர் வாங்கிய சிறிய இடம் ஒன்றும் இருந்தது. அதையும் விற்று பிள்ளைகள் எட்டாகப் பிரித்துக் கொண்டனர்.*

# IX. பெரி-மீனாள் சமூகம்

*பெரியண்ணன் ஐயா மீனாட்சி ஆயாவின் பிள்ளைகளுக்கு இயற்கையிலேயே ஒருவர் பொருளுக்கு ஒருவர் ஆசைப்படாத குணம், அவர்களின் குடும்பம் நன்றாகவும் ஒற்றுமையாகவும் இருக்க வழி செய்கிறது. ஐயா -ஆயாவின் பெண் பிள்ளைகள் அனைவரும் தினமும் அவர்களுக்குள் ஒரு முறையாவது பேசிக்கொள்வார்கள். இதனால் ஒவ்வொருவருக்கும் அவர்களின் பொழுது நல்லப் பொழுதாகக் கழிகிறது. இதை நினைத்துப் பார்க்கையில் எனக்கு மட்டுமல்ல, இதைப்பற்றித் தெரிந்த பலருக்கும் இது பெரும் ஆச்சரியமாகவே இருக்கும். ஐயா - ஆயாவின் ஆறு பெண்கள், இரு மகன்கள் அவர்களின் பேரன் பேத்திகள் என்பதே ஒரு சமூகம் போன்றதுதான்.*

*ஐயா, ஆயா இருவரும் மறைந்தாலும், ஒவ்வொரு தீபாவளிக்கும் ஐயா - ஆயா வீட்டில் கூடும் பழக்கம், முதல் தலைமுறை தாண்டி அடுத்த தலைமுறையிலும் தொடர்ந்தது. ஒவ்வொரு தீபாவளிக்கும் ஐயா – ஆயாவின் ஒரு பிள்ளை வீடு என்று சுழற்சி முறையில் தீபாவளி கூடல்கள் தொடர்ந்தன. பேரப்பிள்ளைகள் நாங்கள் தீபாவளியை ஆவலோடு எதிர் நோக்கி காத்திருப்போம். கிட்டத்தட்ட 15-20 வருடங்கள் இரண்டாம் தலைமுறை, தீபாவளியை நடத்தினர். இப்போது அந்தச் சுழற்சி முறை இரண்டாம் தலைமுறை தாண்டி மூன்றாம் தலைமுறையான பேரப்பிள்ளைகளிடமும் தொடர்கிறது. ஒவ்வொரு வருடமும் ஒரு பேரன் அல்லது பேத்தி வீட்டில் கூடுவோம். தீபாவளி அன்று மட்டுமில்லாமல் இதுபோன்ற பல கூடல்கள் பேரப்பிள்ளைகளின் பிள்ளைகள் வளர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் பெரிதும் உதவுகின்றன.*

# X. சில தகவல்கள்

- பெரியண்ணன் ஐயாவின் தந்தை பெரி. அருணாசலம் அவர்களுக்குப் பர்மாவிலும் ஒரு குடும்பம் இருந்துள்ளது. அங்கு ஒரு மகனும் இருந்துள்ளார். அந்த மகன் ஒரு முறை சென்னை வந்தபோது, அவரை ஐயா வரவேற்று, தன் குடும்பத்தினருக்கும் அறிமுகம் செய்துள்ளார். சில காலங்களில் அருணாசலத்தின், பர்மாவிலிருந்த மகன் இறந்துவிட்டார். இது போன்று அந்தக் காலத்தில் பர்மா பயணம் மேற்கொண்ட சிலர், பர்மாவிலும் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டுள்ளனர். இது வருந்தத்தக்க ஒன்றாக இருந்தாலும், இதுவே அன்று நடந்துள்ளது.

- பிறப்பு எப்படி நம் கையில் இல்லையோ இறப்பும் நம் கையில் இல்லை. நம் மரணத்திற்கு யார் வருவார், வரமாட்டார் என்பதையெல்லாம் நாம் யூகிக்க முடியாது. கொரோனா தொற்றுக்காலத்தில் இறந்திருந்தால் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் எவரும் வந்திருக்க மாட்டார்கள். பெரியண்ணன் ஐயாவிற்கு நிச்சயம் தன் அம்மாவின் பிரிவு ஒரு பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருந்தாலும் அந்த மரணம் அவரை மேம்படுத்தியும் இருக்கும்.

- இரண்டாவது மகள் பொன்னிக்குப் பிறகு ஐயா ஆயாவிற்கு ஒரு மகன் பிறந்தார். அவர் பிறந்த 40 நாட்களில் இறந்து விட்டார்.

- தமிழரசி, பொன்னி, பூங்கோதை என்று தன் பிள்ளைகளுக்கு அழகிய தமிழ்ப் பெயர்கள் வைத்த ஐயா - ஆயா, பின்னர் சுலோச்சனா, விசாலாட்சி, ரவி என்று மாறிவிட்டார்கள். இது ஏன் என்று சில சமயங்களில் நான் யோசித்திருக்கிறேன்.

- மீனாட்சி ஆயா, தன் தங்க வைர நகைகளை விற்க நேர்ந்த சூழல்களிலும், அதற்காக ஒருபோதும் குறைகூறி வருத்தப்பட்டதில்லை.

- பெரியண்ணன் ஐயா சில காலம் வார பத்திரிக்கைகளின் முகப்பு அட்டைகளுக்கு வார்னிஷ் அடித்து கொடுக்கும் ஒரு சிறு நிறுவனத்தையும் வைத்து நடத்தியுள்ளார்.

- சில காலம், சென்னை பெரியமேட்டில் “லையன் பிரிண்ட்டர்ஸ்” எனும் அச்சு அலுவலகம் நடத்தி வந்தார். அங்கு தன்னுடன் புதுக்கோட்டையில் பொன்னி அலுவலகத்தில் வேலை செய்த சிங்கமுத்துப்பிள்ளை என்பவரை மேலாளராக நியமித்து அவர் வேலை இன்றி இன்னலுற்ற காலத்தில் உதவி செய்தார்.
- வீட்டின் திருமண நிகழ்ச்சிகளுக்குப் பிறகு மணமக்கள் கோட்டையூர் அருகில் இருக்கும் வேலங்குடி குலதெய்வ கோவிலுக்குச் செல்வர். பெரியண்ணன் ஐயா பகுத்தறிவு சிந்தனையாளரக இருந்தாலும் குடும்ப உறுப்பினர்களின் விருப்பத்திற்கு தடையாக இருந்ததில்லை.
- பெரியண்ணன் ஐயா கடவுள் மறுப்பு என்று வாழ்ந்திருந்தாலும், தன் இறுதி காலங்களில் சென்னை திருவேற்காடு கோயிலுக்கு மீனாட்சி ஆயாவுடன் சில முறை சென்று வந்துள்ளார்.
- பெரியண்ணன் ஐயா மீனாட்சி ஆயா நற்பெரும் வாழ்க்கையை வாழ்ந்தாலும், அவர்கள் வீட்டில் பிரச்சனைகளே இல்லை என்றெல்லாம் சொல்ல முடியாது. பெரிய குடும்பம்! மன வருத்தங்கள் இல்லை என்றால் எப்படி?
- மாப்பிள்ளைகளுக்குள் ஏதாவது மன வருத்தங்கள் இருந்தாலும் ஐயா அதில் தலையிடமாட்டார். ஒருவர் அவரிடம் சென்று புகார் கூறினாலும் அதைப்பற்றி எவரிடமும் பேச மாட்டார். ஐயாவின் மகள்களும் இதில் தலையிட மாட்டார்கள். அவர்கள் எப்போதும்போல் அக்கா தங்கைகளாகவே பேசிக்கொண்டு இருப்பார்கள். காலப்போக்கில் அனைத்தும் சரியாகின. ஐயாவின் அதிகம் பேசாத குணம் சிறு சிறு பிரச்சனைகளை எளிதில் தீர்த்தது.
- மீனாட்சி ஆயா, அவர்கள் வீட்டிற்கு யார் வந்தாலும் சாப்பிட ஏதாவது கொடுத்துக் கொண்டே இருப்பார். கிளம்பும் போது பழங்கள் அல்லது வேறு ஏதாவது கொடுத்துதான் வழி அனுப்புவார். அதே பழக்கம் அவர்களின் பிள்ளைகளிடமும் தொடர்கிறது.
- ஐயாவுக்கு மிகவும் பிடித்த உணவு கறி, பட்டாணி, வெள்ளரிக்காய். ஆயா மிகவும் நன்றாக சமைப்பார். அவரின் கைப்பக்குவம் அவரின் பிள்ளைகள் அனைவரிடமும் உண்டு. ஆயா செட்டிநாடு உணவு வகைகளை மிகவும் விரும்பினாலும் குறைவாகவே சாப்பிடுவார்.

- பெரியண்ணண் ஐயா எப்படி தன் மகள்கள் வேலை செய்ய வேண்டும் என்று நினைத்தாரோ அதேபோல் தன் மருமகள்களும் வேலை செய்ய வேண்டும் என்று எண்ணினார்.
- வெளிநாடுகளுக்குச் சென்றால், அதை வாங்க வேண்டும் இதை வாங்க வேண்டும் என்று அனைத்தையும் ஐயா – ஆயா அனாவசியமாக வாங்குவதில்லை. நிறையப் பிள்ளைகள் வேறு. ஒருவருக்கு வாங்கி இன்னொருவருக்கு வாங்கவில்லை என்றால் பிரச்சனை. இதையெல்லாம் அறிந்து அனைவருக்கும் ஒரே மாதிரியாக வாங்கி வருவர்.
- ஐயாவின் மரணத்திற்குப் பின் அவர் பயன்படுத்திய FIAT காரை சுலோச்சனா சித்தியின் கணவர் முத்து விலை கொடுத்து வாங்கிக் கொண்டார்.
- பொருளாதார வசதி குறைந்த மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் ஓர் அறக்கட்டளை தொடங்கும் முயற்சிகளை ஐயா மேற்கொண்டு வந்தார்.
- ஐயாவிற்கும் ஆயாவிற்கும் தங்கள் சொந்த ஊரான ஆத்தங்குடியில் உள்ள மாணவர்களுக்காக ஒரு படிப்பகம் கட்டி, ஓய்வு காலத்தை அங்குக் கழிக்க வேண்டும் என்ற ஆசையும் இருந்தது. இதற்காக ஐயா, ஆத்தங்குடியில் ஓர் இடம் பார்த்து முன்பணமும் கொடுத்து வைத்திருந்தார். ஆனால் ஐயாவின் எதிர்பாராத மரணத்தால் இதைச் செயல்படுத்த இயலவில்லை. ஐயாவின் மரணத்திற்குப் பின்னர், சில காலம் ஆத்தங்குடியில் பெரி. அரு வீதியில் உள்ள ஐயாவின் பூர்விக வீட்டில் நூலகம் ஒன்று இயங்கியது.
- ஐயா அடிக்கடி சொல்லும் வார்த்தை ‘விட்டுக் கொடுப்பவர் கெட்டுப் போவதில்லை’.

# XI. குடும்ப மரம்



பெரியண்ணன்
மீனாட்சி
சுலோச்சனா
வள்ளிக்கண்ணு
விசாலாட்சி
அழகப்பன்
ரவி
தமிழரசி
பொன்னி
பூங்கோதை
செல்வராஜ்
முத்து
சீதாராமன்
சொக்கலிங்கம்
சீதா
விஜி
சுப்பையா
முத்துக்குமரன்
சிதம்பரம்
பார்த்திபன்
சங்கீதா
அர்ஜுன்
யாஷ்வி
ராகவி
பிரஷாந்த்
ஸ்வேதா
சித்தார்த்
சிந்து
சேது
நிவென்
ஆர்த்தி
பெரி
ப்ரீத்தி
ரோஹித்
சினேகா
அருண்
விஜய் குமார்
விசாலாட்சி
மீனு
கணேஷன்
வினோத் குமார்
அருண்
சோனிகா
அதித்தி
சஞ்சீவ்
அனிதா
அருண்
கார்த்திக்
சித்ரா
அருண்
ராதா
எழில்
பெரி
அன்விகா
ஸ்ருதி

# 16. பின்னிணைப்புகள்










பெரியண்ணனின் முத்தையால்பேட் மேல்நிலைப் பள்ளிச் சான்றிதழ்



இளைஞர் ஒற்றுமைக்கழகம், கவியரசர் இளங்கோவடிகள் படத்திறப்பு விழா, 03.02.1943



பாரதிதாசன்

2.6.49

திரு
பெரியண்ணன்.
- பொன்னி -
புதுக்கோட்டை

பாரதிதாசன்

பாரதிதாசன் பெரியண்ணனுக்கு எழுதிய கடிதம்



மீனாட்சியும் அவரின் பிள்ளைகளும்



குன்றக்குடி அடிகளார், ம. பொ. சிவஞானம், பேராசிரியர் க. அன்பழகன் ஆகியோருடன் பெரியண்ணன்.



கலைஞருடன் பெரியண்ணன். உடன் கயல் தினகரன்



முரசொலி அலுவலகத்தின் வேலையில் ஒரு நாள்




பெரியண்ணன் பயன்படுத்திய MSS 5194 கார்



பெரியண்ணன் மற்றும் முருகு சுப்பிரமணியம்



சுலோசனா திருமணத்தில் கலைஞர் மு. கருணாநிதி



முதல் முறை சஃபாரி சூட் அணிந்த போது



மேற்கு கே. கே. நகர் வாடகை வீடு



விசாலாட்சி திருமணத்திற்குப் பிறகு அன்று சென்னையில் மிகப் பிரபலமாக இருந்த மவுண்ட் ரோட்டில் உள்ள ஜி.கே. வேல் கம்பெனியில் எடுத்த புகைப்படம்



நண்பர் கயல் தினகரனுடன் (வலப்புறம்)



மீனாட்சி பத்திரிகை படிப்பதில் ஆர்வமுள்ளவர்



பிள்ளைகள் அனைவரும் பட்டதாரிகள்



பெரியண்ணன் மீனாட்சி மணி விழாவில் கலைஞர் மு கருணாநிதி பேசியபோது

குரோதன ஆண்டு ஆடித் திங்கள் 27ம் நாள்
11-8-1985
சென்னை தியாகராயநகர் ஹபிபுல்லா சாலை S.G.S திருமண மண்டபத்தில்
நடைபெறும்

**திரு அரு. பெரியண்ணன்—திருமதி மீனாட்சி ஆச்சி**
**மணிவிழா அரங்கில்**
**மனமுவந்து வழங்கும் மகிழ்வு மடல்**

# வாழ்த்துகின்றேன் !

தகவுடையார் உயர்கலைஞர் டாக்டர் தந்த
தனிமதிப்பில் தழைத்தோங்கும் பேறு பெற்றீர்!
புகழ்படைத்தீர்! வாழக்கையிலே வெற்றி கண்டீர்!
பொற் செல்வி **மீனாட்சித்** துணைவி யோடு
அகமகிழக் களிகூர மணிநாள் கண்டீர்!
அன்னைமன முரசொலியார் அன்பைப் பெற்றீர்!
இகவாழ்வில் இல்லறமாம் நல்ல றத்தின்
இனிமையெலாம் பெற்றுள்ளீர் வாழ்த்து கின்றேன்!

பாவிரியும் பொன்னியிதழ் மொழிக்குத் தந்தீர்!
பாவேந்தர் பரம்பரையைக் கவிக்குத் தந்தீர்!
பூவிரியும் சோலையெனப் பொலிந்தி ருக்கும்
முரசொலியின் வளர்ச்சிக்கே இதயம் தந்தீர்!
மேவுகின்ற அச்சகத்துக் கலையின் வேந்தே!
பெற்றெடுத்தோர் பெயர்வாழப் பெருமை தந்தீர்!
நாவடக்கம் மிகக் கொண்டீர்! மாண்புமிக்கீர்!
நன்மைபொழி நலம்பெருக வாழ்த்துகின்றேன்!

அணிதிகழும் மணவரையில் நல்லோர் சூழ
அறுபதாம் ஆண்டுநிறை மணி விழாவை
மணம்மருவும் மீனாட்சி மனை விளக்காம்
மாதரசி அருகிருக்க இன்று கண்டீர்!
மணநாளில் மக்களோடு பேரர் சூழ
மகிழ்ந்திருக்கும் இத்திருநாள் பெருநாள் ஆகும்!
குணமுடையார் பலர் வந்து போற்றக் கண்டீர்!
குலமோங்கிச் செழித்துயர வாழ்த்துகின்றேன்!

வெள்ளைமனம் தேன்பாய்ச்சும் செஞ்சொல் வெற்றி
விளைவிக்கக் கடும்உழைப்பு! வென்ற போதும்
துள்ளாத நல்லடக்கம் வாழ்விற் கொண்ட
தூயவரே! **பெரியண்ணன்!** இந் நன்னாளில்
வெள்ளம் போல் பலர்கூடிப் போற்றுகின்றோம்!
விரிந்தமனம் உடைய உமை வணங்கு கின்றோம்!
தெள்ளுதமிழ்ப் பாவடித்துக் கரத்தில் சேர்த்தோம்!
சிறப்போங்கித் திகழ்கவென வாழ்த்து கின்றோம்!

வளமுற வாழ்த்தும்
**சுப. இளங்கோவன்**
4/1 ஆதம் தெரு,
மயிலாப்பூர்,
சென்னை-4

சென்னை-17
11-8-1985.

பாவாக்கம்: **சுப. இளங்கோவன்**

நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-14.

சுப. இளங்கோவனின் வாழ்த்து



அமெரிக்காவின் பழமையான பிட்ஸ்பெர்க் கோவிலில் வள்ளியப்பன் நாச்சாள் தம்பதியினருடன்



ஹன்ட்ஸ்வில், அலபாமா



நயாகரா அருவிக்கு அருகில்



அழகப்பனின் நியூ ஜெர்சி அலுவலகத்தில்



நியூயார்க் ஐ.நா. சபை அருகில்



வாஷிங்டன் டி.சியில்




பிரசுல்சு ரயில் நிலையம்



பிரசுல்சு, அடோமியம்




ஆம்ஸ்டர்டமில் ஷெல்லி சுப்பையா சிகப்பி தம்பதியினருடன்



பெல்ஜியத்தில் ௬௦-வது பிறந்த நாள் அன்று



பாரீஸ் அருங்காட்சியகத்தில்



இலண்டனில்

1-5-90 (1) Royal Green House, Bruxelles
Tue. 2) Atomium
3) Kinepolis. (Grand Canyon - Arizona)
Theatre No. 28.
Imax System - Wide Screen

2-5-90 19-02 IC Express Brussels to Rome
Wed Reached Milan 7-40 a.m.
Boarded 7-55 train 3/5/90
to Rome

3-5-90 Reached Rome 13-00 hrs.
Thurs. Searched for Hotel
Stayed at Hotel S. Giusto

4-5-90 Vacated Hotel at 12-00 hrs.
Fri. Went to Vatican & returned
by Bus. Afterwards
caught the train to
Napoli & came back
to Rome. Left Rome
by 23-00 hrs. to Venice.

5-5-90 Reached Venice by 8-00 hrs
Sat. Put the baggage in the
left luggage Room.
Went round the city
by boat after boat.
Boarded 9-30 train
to München.

6-5-90 Reached Munchen at 7-00
Sun. a.m. Boarded train
at 8-00 a.m. to Koln.
Reached Koln at 14-00 hrs

11-8-90 (Saturday) Contd., Afterwards viewed a gallery "Ravenstein" being Saturday closed. Then went to WOLUVE Park and returned at 21-00 hrs.

12-8-90 (Sunday) AR.P's 66th Birthday. In the afternoon went to St. Baaf's Church at GHENT and lighted candles at the church. After going round the church and viewing the gothic architecture, "The Mystic Lamb" painting and visit to the CRYPT returned to Brussels at 16-30 hrs. In the night at 21-30 hrs. went to BASILIQUE Church to have a glance. Remodelling work is going on. Had a walking round and returned at 22-30 hrs.

13-8-90 (Monday) Went for shopping and bought chocolates and medicine. Today again went to Basilique Church and had a walking round & returned in the night

பிரஸ்ஸல்ஸ்
பெல்ஜியம்
19-7-1990.

உ

அன்புள்ள அருணாசலம் அவர்கட்கு,

வணக்கம். இங்கு நானும், மீனாளும் பிள்ளைகளும் நலம். அங்கு தாங்கள், துணைவியார் நலமுடன் இருந்து வருவதற்கும் செங்குட்டு, மகிழ, இளங்கு, முல்லை குடும்பத்தினர் நலமுடன் இருந்து வருவதற்கும் எழுதுங்கள்.

தங்கள் 2-3-90 கடிதம் கிடைக்கப் பெற்றேன். உடனடியாகப் பதில் எழுத இயலவில்லை.

புனிதாவின் திருமணம் நல்ல முறையில் நடந்தேறியது குறித்து யாவருக்கும் மகிழ்ச்சியே.

டாக்டர் மெ. சுந்தரத்தை நான் வருமுன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

என் உடல் நிலை நன்றாகவே உள்ளது. தங்கள் உடல் நிலையை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள்.

திருநாவுக்கரசு மகள் சித்ராவின் திருமணமும் நடந்தேறியதாக அறிந்தேன்.

நானும் மீனாளும் 25-4-90 சென்னையிலிருந்து புறப்பட்டு பம்பாய் வந்து, அங்கு 3 நாள் ரவியாட்கள் வீட்டில் தங்கி, 28/4 அங்கிருந்து புறப்பட்டு பெல்ஜியம் வந்து 1 மாதம் தங்கி பின்னர் அமெரிக்கா சென்று அங்கு ரவி வீட்டில் 6 வாரம் தங்கி மீண்டும் இப்பொழுது பெல்ஜியம் வந்துள்ளோம். 14-8-90ல் இங்கிருந்து இந்தியா திரும்புவதாக உள்ளோம்.

இனிமேல் தான் ஹாலந்து பகுதி ஆம்ஸ்டர்டாம், ஆண்ட்வெர்ப், பெல்ஜியம் பகுதிகள் பார்ப்பதாக உள்ளோம்.

முன்னர் நான், மீனாள், அழகப்பன், கீதா காரில் சென்று பாரிஸ் நகரம் பார்த்து வந்தோம். நானும், மீனாளும் லண்டன் சென்று 3 நாள் தங்கியிருந்து பார்த்து வந்தோம். நான் மட்டும் U Rail Pass வாங்கி இத்தாலி நாட்டில் ரோம், வாட்டிகன், நேபிள்ஸ், வெனிஸ் நகரங்களும், ஜெர்மனியில் மியூனிச், கொலோன், டஸ்ஸல்டார்ப் (DRUPA-90 Printing Machineries Fair - once in 4 years), பிராங்க்பர்ட் ஆகிய நகரங்களும், சுவிட்சர்லாந்தில் ஜெனிவா நகரமும், 6600 அடி உயரத்தில் உள்ள (Rochers de Naye) பனி மலையும், வழியில் Lausanne, Fribourg, Bern, Zurich ஆகிய நகரங்களும் பார்த்து வந்தேன்.

அமெரிக்காவில் நான், மீனாள், ரவி, விஜி காரிலேயே Florida மாநிலம் ORLANDO நகரம் சென்று, அங்கு உங்கள் ஊர் AL. சோலையப்பன் அவர்கள் வீட்டில்

LUCHTPOSTBLAD

AEROGRAMME




THIRU P. ARUNACHALAM AVL.,
36 H DUNEARN ROAD # 04-44
"CHANCERY COURT"
SINGAPORE 1130

**BELANGRIJKE OPMERKING.**
Niets insluiten! Indien zulks toch geschiedt, dan wordt dit luchtpostblad per trein/boot verzonden.

**REMARQUE IMPORTANTE.**
En cas d'insertion soit de feuillets écrits, soit d'un objet quelconque, la présente lettre sera transmise par la voie de surface.

AFZENDER (Naam en adres):
EXPEDITEUR (Nom et adresse):
AR. PERIYANNAN
C/o PERRY ALAGAPPAN
BLVD. DE SMET DE NAEYER 251
B-1090
BRUXELLES-BELGIUM

3 நாள் தங்கியிருந்து EPCOT, MAGIC KINGDOM DISNEY WORLD ஆகியவை பார்த்துத் திரும்பினோம். சோலையப்பன் வீட்டில் நல்ல முறையில் உபசரித்தார்கள். ஒரு நாள் இரவு ஆத்தங்குடி ராம. இராமசாமி வீட்டில் விருந்துக்குச் சென்றிருந்தோம்.

சென்னை சென்ற பின் மறுபடி தொடர்பு கொள்ளுகிறேன்.

சென்னை முகவரி: Telephone: 865727.

AR. PERIYANNAN
1-A, ESSPEEKAY APARTMENTS
9, DHANAMMAL STREET
MADRAS - 600 031
INDIA.

பிற பின்னர்.

அன்புள்ள,
பெரியண்ணன்

# பர்மா ஆவணங்கள்



CHETTIARS' OVERSEAS ASSOCIATION.
KARAIKUDI.

BURMA.

*From* PR.AR. Arunachalam Chettiar,
Athangudi,
Ramnad District,
South India.

TO (1) THE CHIEF SECRETARY TO THE GOVERNMENT OF BURMA,
SIMLA.

(2) THE SECRETARY TO THE GOVERNMENT OF INDIA,
OVERSEAS DEPARTMENT, of Commonwealth
xxxxxx
NEW DELHI. Relations,

*Dated the* 6th September 1944.

Sir,

Subject: Enemy Occupied Countries – Burma —
Properties in — Claim for —

I am the proprietor of PR.AR. Firm, Dedaye, District, xxxxxxxx Pyapon District, in Burma. The above firm owned business assets and properties which were lost as a result of the enemy occupation of Burma. I have the honour to submit the details of the above properties, assets and outstandings, and request that you will be so good as to register my claim in respect of them.

DEATAILS OF CLAIMS.

| | | | |
|---|---|---|---|
| 1. | Lands and Gardens (Schedule 'A' annexed) | Rs. | 54,129- 6- 0 |
| 2. | Houses and Godowns (Schedule 'B' annexed) | Rs. | |
| 3. | Mortgage loans (Schedule 'C' annexed) | Rs. | 800- 0- 0 |
| 4. | Promissory Notes and other loans | Rs. | 2,107- 0- 0 |
| 5. | Paddy stock .. .. | Rs. | 7,848-12- 0 |
| 6. | Furniture .. .. | Rs. | 105- 0- 0 |
| 7. | Deposit with Chartered Bank of India, Australia and China at Saigon Cochin-China, dated 14-1-1941 $ 8877(Saigon | | |

No. F.28-6/44-E(ii).
Government of India.
Deptt. of Commonwealth Relations.
New Delhi, the 26th October 1944.

To

The Honorary General Secretary,
Chettiars' Overseas Association,
**KARAIKUDI.**
South India.

Assets left behind in Burma - Compensation for property lost in Burma.

Sir,

I am directed to acknowledge the receipt of your letter No.B/826, dated the 22nd September 1944, forwarding 15 sets of claims of members of your Association, and to say that the claims, with the exception of Mr. PR.AR. Arunachalam Chettiar's claim for deposit money in Cochin China, have been recorded in this Department under the serial numbers indicates below, and forwarded (in original) for disposal to the Government of Burma, Simla:-

| Name of claimant | Serial No. of claim | |
|---|---|---|
| 1. PR.AR. Arunachalam Chettiar, (PR.AR. Firm, Dedaye) | 2759 | of F.28-6/44-E(ii). |
| 2. Valliammai Achi (w/o S.RM.S Ramasamy Chettiar) and her son, S.RM Chidambaram Chettiar | 2760 of | - do - |
| 3. Valliammai Achi (w/o S.RM.S Ramasamy Chettiar), (Trustee, Thiruppathurai Pasumadam (cow shed). | 2761 of | - do - |
| 4. M.S.S. Chidambaram Chettiar (S.M.CT. Firm, Kangyidaung | 2762 | - do - |
| 5. - do - (M.S.S. Firm, Rangoon) | 2763 | -do - |
| 6. ST.PR. Kasi Chettiar, (ST.PR. Firm, Kywebwe) | 2764 | -do- |
| 7. -do- (ST.PR. Firm, Dnbi) | 2765 | - do - |
| 8. - do - (as Trustee of SST. Charities) | 2766 | - do - |
| 9. -do- (TR.M. Samathi) | 2767 | - do - |
| 10. N.V. V[illegible]iammai [illegible] w/o Nade[illegible] [illegible] Puduvayal | 2768 | - do - |
| [illegible] .R.V. [illegible]kshi Achi, [illegible].VR. Veerappa Chettiar | 2769 | -do- |
| 12. [illegible]mai alias Visalakshi Achi, [illegible]L.AL.Alagappa Chettiar | 2770 | -do- |
| [illegible]hadur S.RM.CT.S. Sabaratnam Che[illegible]ar (S.RM.CT.S. firm, Ludaw) | 2771 | -do- |



GOVERNMENT OF THE UNION OF BURMA
IMMIGRATION DEPARTMENT
MADRAS.

To

PR.AR.ARUNASALAM CHETTIAR
Holder of Immigration Permit No. 1407
Issued by the Immigration Officer, Madras.

MEMORANDUM.

You are requested to report to the Immigration Officer(2) at the Office of the Controller of Immigration, Burma, at No.542/548, Merchant Street(Corner of Phayre Street and Merchant Street) within three days from the date of your arrival in Burma and before the date of your departure whichever is earlier. Failure to do so would render the Immigration Permit being cancelled and the holder asked to leave the country forthwith.

Change of address musb be reported at once.

10/4/48

(Ba Yi)
Immigration Officer,
Madras.

Date of arrival...19/4/48
Date of expiry of the Immigration Permit...19/7/48
Name of steamer/plane by which the holder arrived in Burma...Karoa
Approximate date of departure..........
Full address in Burma...........
Burma.

OFFICE OF THE IMMIGRATION
MADRAS

Remarks:-

Note. (1) This Memorandum shall be handed over to the Immigration authorities at the time of departure from Burma. Failure to do so, may render the new Immigrant being refused permission to enter Burma again.
(2) Overstay of the period allowed for constitutes an offence punishable under the provisions of the Burma Immigration (Emergency Provisions) Act.

H.V.

7 Rs. 8 As.




सात रुपया आठ आना

<u>Power of Attorney</u>

Know all men by these presents that I, P.R.AR. ( Pena Rina Ana Roona) Arunachalam Chettiar son of Perianan Chettiar Nattukottai Chettiar caste, Banker and carrying on money-lending business at Dedaye Pyapom District Burma under the name and style of PR.AR. Firm, residing at Athangudi, Ramnad District, South India do hereby nominate, constitute and appoint Uhlape son of UkyawGaung residing at Dedaye abovesaid to be my true and lawful attorney for me, in my name, and in the name of the said firm and on my behalf for the following purposes that is to say:

To take possession of and to receive the rents and profits of and to manage all and every or any of the properties in Burma either now belonging to the said firm or may hereafter shall belong to the said firm; To let all or any of the

7-8-46.

U Hla Pe,

We are all quite well and expect the same from you.

~~We~~ am in receipt of your letter of the 21st May 1946 ~~enclosing~~ the list of your lands, On demands and leese forms that were received by you, and the letter of Maupu of the 20th June 1946 and the list of lands that were let for leese.

Please do your best as far as possible to let the remaining ~~lands for leese and inform me duly~~

Teipiyauanjune lands are very near to Dedaye. In war time also harvests ~~they~~ were reaped there ~~harvests~~. ~~Then~~ Why is it not possible to let the land for leese now.

Seepingunin lands are also given ~~reaped~~ harvest each and every year and we have received the leese paddy. Please go and see the lands and get a leese form duly signed by ~~from~~ the tenan

~~We~~ We heard that ~~Ch~~ Ch people buy lands for fair prices. As We ~~are~~ ready to sell any of our lands. Please try ~~your~~ and inform ~~it~~ full details about it.

We have enclosed herewith a power of Attorney to your name. Please go to Rangoon, ~~and~~ seal it with Burma stamp and make use of it.

Since you are old aged please ask Maupu to go and watch lands and everything.

## வாழ்ந்த வீடுகள்

1. பெரி. அரு வீதி, ஆத்தங்குடி
2. சண்முக விலாஸ், குன்னக்குடி
3. சாந்தநாதபுரம் முதல் தெரு, புதுக்கோட்டை (1948)
4. புரசைவாக்கம், சென்னை – 84 (1951)
5. பவழக்கார தெரு, சென்னை – 01 (1952)
6. பிடாரியார் கோவில் தெரு, பிராட்வே, சென்னை – 01 (1954)
7. இப்ராஹிம் சாகிப் தெரு, சென்னை – 01 (1955)
8. எண் : 92, தையப்ப முதலி தெரு, சென்னை – 01 (1957)
9. எண் : 6, எல். ஐ. சி காலனி, அஷோக் நகர், சென்னை – 33 (1964)
10. எண் : 28, கோட்ஸ் ரோடு, திநகர், சென்னை – 17 (1975)
11. எண் : 46, முனுசாமி நாயுடு சாலை, மேற்கு கே.கே. நகர், சென்னை – 78 (1980)
12. எண் : 14A, கலிங்கா காலனி, கே.கே. நகர், சென்னை 78 (1988)
13. எண் : 1A, எஸ்.பி.கே அப்பார்ட்மென்ட்ஸ், 9 தனம்மாள் தெரு, சேத்துப்பட்டு, சென்னை – 31 (1991)

## பணியாற்றிய சில அலுவலகங்கள்

- செந்தமிழ்ப் பதிப்பகம் (1/2 பங்குதாரர்கள் அரு. பெரியண்ணன், முருகு. சுப்பிரமணியன்)
- பொன்னி பிரஸ், கீழ ராஜ வீதி (East Main St), போஸ்ட் பாக்ஸ் 39 (Post Box 39), புதுக்கோட்டை
- “பொன்னி” அச்சகம் / பொன்னி லிமிடெட், 16 சேணி அம்மன் கோவில் தெரு, தண்டையார்ப்பேட்டை, சென்னை–21
- “பெநவெசஸ்” (PENAVES) கம்பெனி (1/4 பங்குதாரர்கள் அரு. பெரியண்ணன், பெரி. அழ.மு.நா. நாராயணன் செட்டியார், ராம.அரு. அரு. வீரப்ப செட்டியார், முருகு. சுப்பிரமணியன்) சென்னை.
- பொன்னி அச்சகம் / பொன்னி லிமிடெட், 111 பவழக்காரத் தெரு, சென்னை-1
- பொன்னி அச்சகம் / பொன்னி லிமிடெட், 127 பிராட்வே, சென்னை-1
- லோட்டஸ் அச்சகம் (உரிமையாளர்: லோட்டஸ் நாடார் அவர்கள்) (1954-55), 97 பிராட்வே, சென்னை–1
- ஐடியல் பிரிண்டர்ஸ் (1955-1970), சுந்தரராவ் நாயுடு சாலை, தேனாம்பேட்டை, சென்னை-6
- முரசொலி (1971-1986), 52A கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை–34

# ஆத்தா

**பொன்னி**

**(பெரியண்ணன் - மீனாட்சியின் மகள்)**

*தேதி: 12.08.2025*

*அப்பாவுக்கு ஆத்தா மனைவியாக அமைந்தது என்பது கடவுள் செயல்தான். ஆத்தாவைத் தவிர அந்த காலத்தில் வேறு ஒரு மனைவி எங்கள் அப்பாவிற்கு அமைந்திருந்தால் நாங்கள் எல்லாம் பிறந்திருப்போமா, நல்ல நிலைக்கு வளர்ந்திருப்போமா என்று கூடத் தெரியாது? அப்பா பத்திரிக்கை, அரசியல் என்று இருந்ததால் வீட்டுப் பொறுப்பு அத்தனையும் ஆத்தாதான். வீட்டிற்குத் தேவையான பொருள்கள் வாங்குவதில் இருந்து துணி மற்ற அத்தியாவசிய சாமான்கள் வாங்குவது வரை ஆத்தாதான். அப்பாவுக்கு அரசியல் நண்பர்கள் அதிகம் என்பதால் அடிக்கடி வீட்டிக்கு அரசியல் தலைவர்கள் விருந்துக்கு வருவார்கள். அத்தாவுக்கு 24 மணிநேரமும் வேலைதான். ஆத்தாவுக்கு கோபம் வருவதில் தப்பில்லை. இந்த காலத்தில் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளைப் பெற்றவர்கள் படும் பாட்டை யோசித்து பாருங்கள்.*

*யார் வீட்டிற்கு வந்தாலும் ஆத்தா ஏதாவது ஒரு பொருளை எடுத்து அன்பளிப்பாக கொடுப்பார்கள். ஆத்தாவுக்கு கோபம் வந்தாலும் எல்லோருக்கும் ஆத்தாவைப் பிடிக்கும். ஆத்தா எங்களுக்கு மட்டும் ஆத்தா இல்லை. தெரிந்த, அறிந்த அத்தனை பேருக்கும் எங்கள் ஆத்தா ஆத்தாதான்.*

*55 வயது வரை ஓய்வில்லாமல்தான் இருந்தார்கள் ஆத்தா. அதன் பிறகு பிள்ளைகளெல்லாம் தலையெடுத்தப்பிறகு வசதி வாய்ப்புகள் அதிகரித்தப் பிறகு ஓய்வு கிடைத்தது.*

பெரி. அழகப்பன்
பெரியண்ணன் - மீனாட்சியின் மகன்
தேதி: *12.08.2025*

# A Tribute to My Parents

Both my parents stood taller in life than they really were in appearance, in many ways.

My father was modest, giving and kind-hearted. He was never opportunistic and never exploitative. These qualities made him a great human being inside and out, though they never made him financially affluent. And he seemed perfectly at peace with that, never compromising his moral compass in the pursuit of material wealth. In return, that brought him deep respect from his community. His quiet charisma came from the countless ways he helped others: guiding people recover from their hardships, educating many, and helping many find employment so they could settle in life, all this without expecting anything in return, even when he was cash-strapped, and sometimes at the expense of availing the opportunity for his own family.

My mother was our anchor - with eight children to raise during her prime years and with a husband who was mostly focused on bringing home the rice and furthering the Dravidian cause - she provided the well-needed buffer between her husband's lofty ideals and everyday practicality keeping us children well grounded. Somewhat naive and inclined to go with the flow, she rarely resisted, and occasionally supported, my father's progressive ideas, such as championing women's education. These dynamics between them, I believe, shaped the resilience and motivation that defined our family.

As one of the youngest children of the Periyannan-Meenakshi family and having lived abroad after the age of 21, my time with my parents was briefer than that of my siblings. Yet even those limited interactions have had a lasting impact on how I have lived my life all these years. My father, in particular, was a silent motivator. If he agreed with my ideas or thoughts, he would encourage me in subtle but meaningful ways, introducing me to people or taking me along while attending meetings and conferences. He often brought home reading material such as the Russian "Sputnik"

magazine to feed my curiosity in science and knowledge. If he disagreed with any of my thoughts, he never discouraged me or voiced opposition. Instead, he gave me the space to pursue my passions, as though granting me the benefit of the doubt. Over the years, even from afar, he remained a steady sounding board, rarely contradicting, always encouraging and motivating.

During his later years, having spent most of his provident fund money and other savings in educating us and marrying off his daughters, he lived with limited means. So, once in a while, sensing lack of funds at the home front, I used to transfer some of my savings from abroad. He never directly asked; instead, he would mention something matter-of-factly: "If we install a bore pump, we won't have water shortages," or "Petrol costs about Rs. 14 a litre, and we use 50–60 litres a month." If I chose to respond with financial help, he acknowledged it warmly, but he always left the choice to me, never once pressing.

I have rarely seen Appa angry. If he did not like something, he might lightly "joke" about it to convey his point, or simply "go quiet" and say nothing. When we were growing up in the 60s and 70s, it was not uncommon for parents to either slap their non-compliant children or to sometimes even go to the extent of slightly scalding you with a hot iron to "make you remember the wrongdoing for life". While Aathaa resorted to a mild discrete "pinch" if we did something wrong, Appa was different. I do not remember a single incident where he laid hands on any of his children if we had done something wrong. Both my parents respected our individuality, and that has had a profound impact on us in raising our own children.

Appa was not a religious man. He was an ardent follower of E.V. Ramasamy Periyar during his younger days. He never equated being religious to being good, and often challenged religious practices that justified unfairness to fellow human beings. I, on the other hand, was deeply devout in my younger years. I have often visited the Venkateswara temple that was only a street away from our home and recall the temple's loudspeaker blaring Andaal's "Thiruppavai" and other devotional songs during the early hours of the month of "Margazhi", and its delectable ghee-laden "Pongal" prasadham which was well worth the early rise! I even wrote "Sri Rama Jayam" 12,000 times in the year 1966 to earn a silver coin from "Sri Sankaracharya". I prayed nightly, dutifully applying "vibudhi" on my forehead and on my brother Ravi's. Yet my father never interfered or imposed his

beliefs, or lack thereof, on us. As with many other aspects of our lives, he allowed us the freedom to find our own paths in matters of faith.

One thing that I have always been very clear on is the tremendous confidence and trust that Appa placed in my ability to succeed. His confidence became a driving force in my life, pushing me to live up to it, to never betray it. Both my parents, in their own ways, instilled in us the qualities of independence, self-reliance, and integrity. They shaped us into responsible citizens, capable of deep friendships and lasting relationships.

If I were to simplify and list the learnings from their lives for future generations here's how it would run:

- Say less, do more.
- Always stay progressive, ahead of the current times, even if that means going against the grain.
- Be genuine, ethical, kind and patient when it comes to relationships.
- Do not covet what is not rightfully yours.
- Remember that wealth is fleeting. It is fine to pursue it, but never at the expense of sacrificing your values.

கீதா அழகப்பன்
பெரியண்ணன் - மீனாட்சியின் மருமகள்
தேதி: *12.08.2025*

# A Calming Presence

Modern love, at least in the Western world, is all about getting to know your life partner for a few years before you tie the knot or exchange vows. My journey into married life, though, began with me meeting my father-in-law and sister-in-law before I met my husband for the first time.

At that time, my nervousness upon meeting him rendered me unable to recognize his traits as a visionary and a remarkably progressive man. The year was 1988. It was a hot, muggy afternoon, a couple of days after "Pongal" – the Tamil harvest festival, when the streets are quiet, and people have retired indoors for their siesta. There was a buzzing of the doorbell. My Amma and I were home that afternoon – chewing juicy sugar cane cubes that she had cut after the Pongal celebrations. We both were not expecting anyone that afternoon and were surprised to see a dignified, slightly balding gentleman in black-rimmed glasses and a crisp white veshti and shirt accompanied by a very petite woman. When my Amma ushered them in – they introduced themselves as "Periyannan" and "Dr. Ponni". They had heard that my parents were looking for a prospective "alliance" – which is what it was called in those days and wanted to stop by.

To this day, when I think about their approach, it never fails to amaze me how simple, direct, and forward-thinking they both were! No third parties, no formality, no beating around the bush, no hidden agendas. I would find out later that when it came to "Alagappan" (my husband), his father had a very special place in his heart for him and their journey together was unique – less words and all about gestures – small and big. Like all parents they wanted the best for their children and went about it in a very efficient manner! What better way to assess whether a person would be a good fit for the family than to visit them in their natural surroundings – unannounced!

They gave me a little background about their son/brother, and I do remember thinking how sweet it was to witness the evident pride with which they described his achievements and his down-to-earth manner. I don't know

what requirements their son sought, but they gave me their son's "bio-data" and asked if I could provide one. Since I was put on the spot before strangers, I quickly washed my sticky, sugar-cane juice coated fingers and grudgingly wrote my own "bio-data" in cursive hand, with them watching me and gave it to them. After chatting with both my Amma and me for a little bit, they left.

As I reminisce about those times – today, thirty plus years and two children later, as my husband and I are hoping to grow our family, we find that the passing years have only added more complexity to every realm of this arena. Or maybe, things were as complex back then, but my father-in-law had the foresight to truly see what was important and to go after it without being burdened by societal expectations and norms.

We never heard from them for a few months and then the father-daughter duo came back one afternoon and told us that their son was here in Chennai, and it would be great if we could stop by their home that afternoon as a lot of the family was already there. None of this was conventional by any standard back then and as the years progressed, I got to know that such actions would be a norm in my in-law's home. Untethered by regular conventions – they did what they felt was logical, right and the effect was bold. At that time, I did not dwell on this but over the years I appreciated their approach and greatly admire it now.

My Amma and I were not sure what to make of this at such short notice. I was having a bad hair day – I had greased my hair for an oil bath and was appalled. We did not have hair dryers back then and it would take a little while to get ready. They wanted us to come as soon as possible so that we could meet the rest of the family. This was contrary to all my imaginations of meeting my prospective life-partner. What kind of impression would I make if I showed up with my hair slick with oil? To my chagrin, my would-be in-laws insisted that "Alagappa would not lay too much importance on such external factors and wanted to converse with me…" "He probably would not, but I want to be more presentable", I thought. Finally, my resistance crumbled at my mother's insistence, and I got ready and headed to their home. The rest, of course, is history. Even today, not much has changed! Athaan does notice if I am presentable but not overtly so – he is not overly concerned about fashion. I am always thankful to my mother, father-in-law and sister-in-law for bringing Alagappan and myself together.

After our marriage, I went through the trials and tribulations of being a spouse of someone who has a "green card", which meant a 2 ½ year separation. As my new husband went back to his work and to explore options, my father-in-law, "Appa," as I called him, was on a mission. He would take me in his "Fiat" car to the passport office for the appointments so that we both could be united. In those days, it wasn't so simple to get a passport in a short timeframe - there were many appointments, and Appa always made sure he took me to those appointments on time. I am not sure who was more anxious – my parents, him or us! When my visitor visa to the US got rejected, I could see that "Appa" was visibly very upset. As I was only 21 when I got married, I was not overly worried, since this gave me the opportunity to complete the "Management Information Systems" course that I had enrolled at NIIT. It was also a good time to get to know my in-laws. I spent time with my parent's-in-law, sisters-in-law's families and their children during this period. Coming from a small family, it was overwhelming to be part of a big family. During this time, Athaan moved many strings at his work and got himself an overseas assignment in Brussels, Belgium in 1989. It was wonderful news, and we moved to Brussels.

During the couple of years that we lived there, we had many of our family members visit us. Meanwhile, big changes were taking place around us. The Berlin wall fell in Nov 1989 and there were major political changes in Eastern Europe. Appa and Aatha visited us, and we enjoyed taking them around to Belgium and taking in sights together. The time they spent with us are treasured memories because it would be the last time they visited us in our home together. Appa always had a ready smile and did not say much – but when he did his words were worth treasuring. He always seemed calm and the epitome of patience. It always amazed me how he would get ready and patiently wait for my mother-in-law to get ready. Sometimes, it would even be 30 mins! My mother-in-law, whom I called "Aatha", always had a ready laugh and was a straight shooter. She would tell you exactly what she thought. I can't imagine how hard it would have been to raise 8 children, educate them and get them settled. Having a child is a blessing and they had many. I believe what they had all been through together strengthened their bonds. Over the years, I see the same traits of fearlessness, confidence and a will to forge their own destiny and path irrespective of what others think in many of the ARP family children, including our own.

We made a trip to Chennai every year or two and the times we spent with my parents, brother and in-laws were precious. During one trip, when we were all getting ready to go out, Appa told me - “My mother had hair like yours, thick and jet-black. She would put a comb from Burma in her hair when she went out.” It was said with a laugh and a twinkle in his eye.

When we moved back to the US, he wanted to visit us – especially, when he heard that we were expecting our first child. Regretfully, he never made that trip. He passed away when I was five months pregnant. The rest of the pregnancy was tough as we both mourned a life lost too soon. He was only 69 when he passed away of sudden cardiac arrest. Our children – Arti and Perry, never got to know their paternal grandfather and our son, Perry, is named after him (Pe Ri, his initials). There would be more grandchildren and great-grandchildren to continue his legacy. He wanted a big family and to always be surrounded by love, laughter and family. He got to see that for at least a decade though he did not see Arti, Perry, Preeti, Sneha and great grandchildren that followed.

Appa was beautifully complemented by Aatha, who stuck with him through thick and thin and they would be so happy to see where we are today and where we are heading.

Remembering with great fondness,

Your daughter-in-law, Geetha Alagappan

**பெரியண்ணன் ஐயா - மீனாட்சி ஆயாவின் 50-வது திருமண நாளில்**
**கார்த்திக் சிதம்பரம் வாசித்த கவிதை**

**எழுதியது: என் அப்பா 'ஆணழகன்' சிதம்பரம்**
*தேதி: 10.09.1993*

*வாழிய பல்லாண்டு!*

*எங்கள் அன்பின் வடிவமே!*
*ஆருயிர் இதயமே!*
*நெல்லில் மணி இருப்பது போல்*
*எங்கள் நெஞ்சில் நிறைந்திருக்கும்.*

*ஐயா பெரியண்ணன் ஆயா மீனாட்சி தம்பதிகளின்*
*தங்கத் திருமண விழா! (இன்று)*

*எங்களின் மகிழ்ச்சி பெருவிழா!*
*வாழ்க்கையிலே எல்லோரும்*
*எப்படி வாழ வேண்டும் என்பதற்கு*
*நீங்களே வாழ்வின் வழிகாட்டி!*
*முன்னோடி!*
*கலங்கரை விளக்கம்!*

*வாழ்வில் இன்று வரை நீங்கள்*
*பொன்னையோ; பொருளையோ;*
*பணத்தையோ; சொத்துக்களையோ*
*பெரிதாய் நினைத்ததில்லை மாறாக*
*எளிமை; இனிமை;*
*நேர்மை; பண்பு;*
*பாசம்; அன்பு போன்ற*
*நல் விதைகளை, அருங்குணங்களை*
*வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டு*
*வாழ்ந்து காட்டி*
*வெற்றியும் பெற்ற வெற்றி நாயகரே!*

இல்லறத்தை நல்லறமாய் கொண்டு
இதுவரை நீங்கள் சிறிய சலனமோ;
கருத்து வேறுபாடோ; முகச்சுழிப்போ;
உரத்த குரலோ இல்லாது;

என்றும் புன் சிரிப்பும்; பொறுமையும்;
இதமான பேச்சும் ஈரநெஞ்சம் கொண்டு
50 ஆண்டுகளைக் கடந்து வந்து
குடும்ப வாழ்க்கையின் சிறப்பினை
எழுதி காட்டிய வகுத்துக் காட்டிய
வாஞ்சைமிகு ஐயாவே! ஆயாவே!

மணிமணியான நல்குழந்தை செல்வங்களை
ஈன்றெடுத்த பெருமைக்குரியவரே!
மூத்த மாமா அழகப்ப மாமா
நல் உழைப்புக்கு வித்திட்டார்,
பெருமை சேர்த்தார்.
கணிப்பொறியில் பட்டம் பெற்றார்.
கடல் கடந்து சென்றார் இன்று
அமெரிக்கத் திருநகரை அரசாளுகிறார்.

இளைய மாமா இரவி மாமாவோ
இந்தியத் திருநாட்டில்
படித்தது போதாது என்று
மேல் படிப்பிற்காக அலபாமா சென்றார் அவரும்
உங்கள் பெயர் உரைக்கின்றார்.

பிறந்த இடம் விட்டு
புகுந்த வீடு சென்று விடுவார்கள் என்று தெரிந்தும்
தொழிலதிபராக;
டாக்டராக;
அரசு அதிகாரியாக;
வங்கி அதிகாரியாக;
குடும்பத்தரசிகளாக;
நல்ல பெண்மணிகளாக உருவாக்கினீர்கள்.

*கூடவே சமத்தான மாப்பிள்ளைகளையும்*
*சாமர்த்தியமாகத் தேர்வு செய்த ஐயாவே! ஆயாவே!*
*அக வாழ்க்கையின் அறம் பல பேணிய நீங்களே*
*எங்கள் வாழ்க்கையின் ஏணி!*

*இன்னும் இதுபோலப் பல 50 ஆண்டு காலம் வாழ்ந்து*
*சீரும் சிறப்பும் பெற*

*நிலவும்; வசந்த தென்றலும்;*
*உங்கள் வாசலில் இன்பங்களைப் பொழிய*
*எங்கள் உள்ளம் அன்பால் வாழ்ந்திருக்கிறது.*
*வாழ்க! வாழ்க!!*
*வளமுடன் வாழ்க!*
*சூழ்க! சூழ்க!!*
*நலமெல்லாம் சூழ்க!*
*ஐயா வாழ்க! ஆயா வாழ்க!*
*எங்கள் அன்பே வாழ்க!*
*அறிவே வாழ்க!*
*ஆற்றலே வாழ்க!*
*வாழ்க! வாழ்க!!*
*பல்லாண்டு வாழ்க என*
*எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்*
*தங்கள் நிழலில் வளரும் அன்பு நெஞ்சங்கள்*

# ஐயா ஆயா

**அருண் சிதம்பரம்**

**(பெரியண்ணன் - மீனாட்சியின் பேரன்)**

*12.08.2025*

---

*எளிமையை வாழ்க்கையாக்கி வாழ்ந்தவரு*
*‘பெரியண்ணன்’ன்னு பேருங்க...*
*எங்கய்யா போல மாமனிதர்*
*இப்ப யாரு சொல்லுங்க?*

*தமிழ வச்சு சில பேரு*
*பணத்த கட்டு கட்டா சேத்தாங்க...*
*சேத்த பணத்த தமிழுக்காக*
*எங்கய்யா நெறைய கொடுத்தாங்க..!*

*வண்ண முகப்பட்டையுடன்*
*தமிழில் வந்த முதல் பத்திரிக்கை*
*பெரியண்ணன் நடத்திய ‘பொன்னி’ தானுங்க...*
*‘திராவிடம்’ என்னும் ஆலமரத்தில்*
*பெரியண்ணன் ஆணி வேருங்க...!*

*முரசொலியைத் தூணாய்*
*எங்கய்யா தாங்கிப் புடிச்சாங்க...*
*கடமையில் நேர்மையாய்*
*கடைசி வரை வாழ்ந்தாங்க...*

*கவியரசு  பாவேந்தர்*
*அறிஞர்  பேரறிஞர்*
*சிறியார்  பெரியார்*
*எல்லோருடனும் நட்புங்க...*
*ஒரு நாளும் அந்த நட்பைத்*
*தவறாய் பயன்படுத்தியதில்லைங்க...*

*தன் முன்னால் இடியே விழுந்தாலும்*

*துளியும் பதற மாட்டாங்க...*
*கலங்காத இந்தக் குணத்தைக் கண்டு*
*கலைஞர் ஐயா வியந்தாங்க..!*

*'பொன்னில ஏங்கவித*
*அச்சாகலையே...' இது*
*கண்ணதாசன் ஏக்கமுங்க...*
*'தமிழகத்தில் அச்சுக் கலையின்*
*முன்னோடி பெரியண்ணன்!' இதுவும்*
*அந்த அரசவைக் கவிஞன் சொன்னதுங்க...*

*எங்கய்யாக்கு ஏற்ற இணையா*
*அந்த 'மீனாட்சி'யே துணையா வந்தாங்க...*
*தன்னலமா இருக்காம*
*அவருக்கு பக்கபலமா இருந்தாங்க...*

*எல்லாரையும் 'ஆத்தா'ன்னு தான்*
*கூப்பிடச் சொல்லுவாங்க...*
*ஆத்தாவா தான்*
*அவுங்களும் இருப்பாங்க...*

*பேரப் பிள்ளைக*
*வீட்டுக்குப் வரும் போதெல்லாம்*
*பரிசொன்னு தருவாங்க...*
*யோசிச்சுப் பாத்தா...*
*அவுங்க தன்னையே தந்தாங்க...!*

*எங்கய்யா அதிர்ந்து பேச மாட்டாங்க...*
*அவசரப் படவும் மாட்டாங்க...*
*எங்க ஆயா*
*இருப்பதெல்லாம் கொடுப்பாங்க...*
*ஆசையே பட மாட்டாங்க...*
*தவம் போல ஒரு வாழ்வை வாழ்ந்து*
*ரெண்டு பேரும் வாழச் சொல்லிக் கொடுத்தாங்க...*
*ஆலம் விழுது போல*
*ரெண்டு பேரும் எட்டு புள்ள பெத்தாங்க...*
*ராப் பகலா ஒழைச்சு*

எல்லாரையும் நல்லா படிக்க வச்சாங்க...
நல்லத சொல்லிக் கொடுத்து வளத்தாங்க...
நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்தாங்க...

புள்ளைங்க எட்டும்
எட்டாத உயரம் வளந்தாங்க...
பொறுமையின் சிகரமா நின்னாங்க...
தியாகங்கள் பலதான் செஞ்சாங்க...
இன்னும் அப்படியே தான் இருக்காங்க...

எங்கய்யா ஆயா ரெண்டு பேரும்
இருக்கும் வரைக்கும்
நா நயத்தை நம்பாமல்
நாணயமா வாழ்ந்தாங்க...
அதனால தான் நாங்க
நலமா வளமா நிம்மதியா இருக்கோங்க...
இதுதான் பெரியண்ணனின் பெரிய குடும்பமுங்க...

# நூற்பட்டியல்


1. கே. கே. பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2002.
2. அ. சிவசுப்பிரமணியன், தமிழ் அச்சுத்தந்தை அண்ட்ரிக் அடிகளார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2003.
3. மா. சு. சம்பந்தன், அச்சுக் கலை, பரிசில் வெளியீடு, 1966.
4. கண்ணதாசன், வனவாசம், கண்ணதாசன் படிப்பகம், 1968.
5. பழ. அண்ணாமலை, நகரத்தார் பண்பாடும் பழக்கங்களும், கவின்கலை அச்சகம், கந்தசாமி நகர், பாலவாக்கம், சென்னை, 1994.
6. இராம. இராமநாதன், நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 1953.
7. *Bipan Chandra, Mridula Mukherjee, Aditya Mukherjee, Sucheta Ma hajan, and K. N. Panikkar, India's Struggle for Independence, Pen guin Random House India; 1st edition (9 August 2016); Penguin India, 1988.*
8. செட்டிநாடும் செந்தமிழும், சோமலெ, வானதி பதிப்பகம், 1984
9. சுரதா, பாரதிதாசன் பரம்பரை, சுரதா பதிப்பகம், சென்னை, 1993
10. மு. இளங்கோவன், பொன்னி ஆசிரியவுரைகள், 2004

# யார் இவர் ?

**கார்த்திக் சிதம்பரம்**

**நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி, டிசிகாப்.**

*கார்த்திக் சிதம்பரம் டிசிகாப் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி. அமெரிக்க நாட்டின் சிகாகோவில் உள்ள தனது சிறிய குடியிருப்பில் இருந்து இந்நிறுவனத்தைத் தொடங்கினார். DCKAP ஒரு ERP ஒருங்கிணைப்புத் தளமாகும். இது உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கான அமைப்புகள் ஒன்றோடொன்று தொடர்பு கொள்வதை எளிதாக்குகிறது. 2 பேர், 2 கணினிகள் மற்றும் 2 மேசைகளுடன் தொடங்கப்பட்டு, இன்று டிசிகாப் நிறுவனத்தின் மென்பொருள் பல்வேறு உலக நாடுகளில் வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளது.*

*மொழி சார்ந்த பொருளாதாரச் செயல்பாடுகள் குறித்த சிந்தனையைச் செயல் வடிவத்திற்குக் கொண்டுவர பற்பல முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறார். சமுதாயப் பிரச்சனைகள், அதனைத் தீர்க்கும் வழிமுறைகள், தான் செல்லும் நாடுகளில் உள்ள வணிகம், உலகின் சில முக்கிய இடங்கள், வாசிக்கும் புத்தகங்கள், வல்லுநர்களின் நேர்காணல்கள் ஆகியவற்றை நம்முடன் பகிர்ந்து கொள்வதற்காக* chatwithKC *என்னும் YouTube சேனலை நடத்தி வருகிறார். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் 'ஞாயிறு கடிதம்' கைப்பட எழுதி பகிர்கிறார்.*

*சாதாரண நிலையில் தொடங்கிய தனது வாழ்க்கைப் பயணத்தை சிறந்த மென்பொருள் தயாரிப்பு நிறுவனமாக, இன்று, முழுவதும் தொலைதூர (Remote and Distributed Work) வழியிலேயே இயங்கிச் செயல்பட்டு வரும் டிசிகாப் மூலம் ஒரு சிறந்த வேலைக் கலாச்சாரத்தையும் சமூகத்தையும் உருவாக்கி வெற்றிகரமாக இயக்கி வருகிறார்.*

*மேலும் அறிந்து கொள்ள:* http://www.dckap.com

*தவறாமல் இணைந்திருங்கள்*

http://www.karthikchidambaram.com

https://www.linkedin.com/in/chatwithkc

https://www.youtube.com/@chatwithKC

*தொடர்பு கொள்ள*

contact@karthikchidambaram.com



# பெரியண்ணன்

வரலாறுகளை ஆராயும்போது, அவற்றில் எழுதப்படாத பக்கங்களே அதிகம். சமூக வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய மனிதர்களையும் அவர்கள் ஆற்றிய பணிகளையும் ஆராய்ந்தால், அதனால் நாம் அடைந்த பயன்கள் ஏராளம். தமிழகத்தில் எழுந்த திராவிட இயக்கச் சிந்தனைகளை மக்களிடம் விதைக்க உதவிய **'பொன்னி'** இதழின் நிறுவனர் அரு.பெரியண்ணனின் வரலாறும் இத்தகையதே. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர் மு. கருணாநிதி, பாவேந்தர் பாரதிதாசன், கண்ணதாசன், கா. அப்பாதுரையார், சுரதா, டி.கே. சீனிவாசன் என்று பலர் பொன்னியில் எழுதியுள்ளனர். பாரதிதாசன் பரம்பரை கவிஞர்களை அறிமுகப்படுத்தியதில் பொன்னியின் பங்கு மகத்தானது.

'பெரியண்ணன்' புத்தகம் ஒரு கூட்டுமுயற்சி. இந்நூலில் இடம்பெற்றுள்ள பெரியண்ணனின் இளமைக் காலம், பொன்னி பயணம், முரசொலி வருடங்கள், ஓய்வு காலம் போன்றவை அவரின் ஆளுமையைப் பறைசாற்றும்.

எல்லா அனுபவங்களையும் வாழ்ந்துதான் பெறவேண்டும் என்பதில்லை. அரு. பெரியண்ணன் – மீனாட்சி வாழ்ந்த வாழ்வில் இருந்து நாம் நிறைய கற்றுக்கொள்ளலாம். நம் வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ள இந்தப் புத்தகம் நல்வழிகாட்டியாக நிச்சயம் உதவும்.

கார்த்திக் சிதம்பரம்



கார்த்திக் சிதம்பரம்

Price Rs.150
ISBN: 9789334405590